Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

**அற்புதன் அச்சகம்**

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

முரசு – 05 | திருவள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 02 புதன்கிழமை (15.04.2015) | பக்கங்கள் 20 | ஓசை – 197

**★ மயிலிட்டி ★ தையிட்டி ★ காங்கேசன்துறை**

# மீள்குடியேற்றம் தாமதிப்பது ஏன்?

## வலி.வடக்கு மீள் குடியேற்றக்குழு கேள்வி

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் அதிகளவு செறிவுடன் மக்கள் வாழ்ந்த பகுதிகளான மயிலிட்டி, தையிட்டி, காங்கேசன்துறை ஆகிய பகுதிகளுக்கான மீள்குடியமர்வு தாமதமடைவது ஏன் என்று வலி. வடக்கு மீள் குடியேற்றக்குழு கேள்வி எழுப்பியுள்ளது.

வலி.வடக்கின் மயிலிட்டி, தையிட்டி, காங்கேசன்துறைப் பகுதிகளைச் சேர்ந்த மக்களையும் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலி.வடக்கு மீள்குடியேற்றக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

100 நாள் வேலைத் திட்டத்திற்குள் முதற்கட்டமாக 1000 ஏக்கர் காணியை விடுவித்து ஏனையவற்றை தொடர்ந்து விடுவிப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால தலைமையிலான புதிய அரசாங்கம் உறுதியளித்திருந்தது. ஆனால் 100 நாள் வேலைத் திட்டமே நிறைவடையும் நிலையில் வெறுமனே 613 ஏக்கர் மட்டுமே

19 ஆம் பக்கம் பார்க்க




# இலங்கையர்களுக்கு இந்தியாவில் நுழைவு விசா

## நேற்று முதல் அமுல்

• இந்தியாவுக்கு பயணிக்கும் இலங்கையர்கள் நேற்று முதல் அந்நாட்டு விமான நிலையங்களில் சென்று இறங்கியதும் விசா பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் கொழும்பு விஜயத்தின் போது வழங்கப்பட்ட உறுதி மொழிக்கு அமைய இந்த சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றுள்ளது. இந்தியா 43 நாடுகளுக்கு 'ஒன் அரைவல் விசா' அதாவது விமான நிலையத்தில் விசா பெற்றுக்கொள்வதற்கான அனுமதியை வ்ழங்கியிருந்தது.

அதனடிப்படையில் இலங்கை 44 ஆவது நாடாக அந்தப் பட்டியலில் இணைத்துக் கொள்ளப் பட்டுள்ளது.

அதன்படி, இந்தியாவின் புதுடில்லி, மும்பை, கொல்கத்தா, ஹைதராபாத், பெங்களூர், திருவனந்தபுரம், கொச்சின் மற்றும் கோவா ஆகிய விமான நிலையங்களில் வைத்து இலங்கையர்கள் 30 நாட்களுக்கு விசா பெற்றுக்கொள்ள முடியும். இந்தச்

19 ஆம் பக்கம் பார்க்க

# கழிவு ஒயில் கலந்தமை உண்மைதான்


## சுகாதார அமைச்சு திட்டவட்டம்

சுகாதார அமைச்சினால் வலி.வடக்கிலும் சுன்னாகத்திலும் பரிசோதிக்கப்பட்ட 30 கிணறுகளின் கழிவு எண்ணெய் கலந்துள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது.

மத்திய அரசின் சுகாதார அமைசசின் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவினரால் கடந்த மாதம் வலிகாமம் பகுதிகளில் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலும் உள்ள 30 கிணறுகளில் எண்ணெய் மற்றும் கிறீஸ் என்பவற்றிற்காகப் பரிசோதிக்கப்பட்டு குற்றச்சாட்டுக்கள் உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

இப்பரிசோதனைகள் அனைத்தும் இலங்கையிலேயே நம்பகத்

19 ஆம் பக்கம் பார்க்க



நீண்ட இடைவெளிக்குப்பின் மானிப்பாய் மருதடிப்பிள்ளையார் புதிய சித்திரைத்தேரில் எழுந்தருளி வீதியுலா வந்தபோது....

# சீனப்படைகளுடன் கூட்டு போர்ப்பயிற்சி

## அடுத்த கட்டம் கொழும்பில்

பட்டுப்பாதை ஒத்துழைப்பு 2015 என்ற பெயரில், இலங்கை இராணுவத்துக்கும், சீன இராணுவத்துக்கும் இடையில் புதிய போர்ப் பயிற்சி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ் இந்தப் புதிய போர்ப்பயிற்சியின் முதற்கட்டம், கடந்த 29 ஆம் திகதி, சீனாவின் தென்பகுதியில் உள்ள குவாங்சோ இராணுவப் பயிற்சித் தளத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இருநாட்டுப் படைகளும் தமது போராற்றலைப் பெருக்கிக் கொளளும் நோக்கில் குறிப்பாக, தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் தமது திறனை அதிகரித்துக் கொள்வதற்கு இந்தப் போர்ப்பயிற்சியை மேற்கொண்டுள்ளன.

ஒரு தரப்பிடம் இருந்து மற்றத் தரப்பு கற்றுக் கொள்வதற்கும், தீவிரவாத முறியடிப்பில்

19 ஆம் பக்கம் பார்க்க

## டெங்கு தாக்கம் மீண்டும் உக்கிரம்

இவ்வாண்டில் கடந்த 4 மாத காலப்பகுதியில் நாடு முழுவதும் டெங்கு காய்ச்சலால் சுமார் 11945 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என தொற்று நோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களில் 46.42 வீதமானவர்கள் மேல் மாகாணத்திலேயே அடையாளங்காணப் பட்டுள்ளனர். வருடத்தின் நான்காவது வாரத்திலேயே அதிக டெங்கு நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர்.

நுளம்புகள் பரவக்கூடிய இடங்களை அடையாளங்கண்டு


19 ஆம் பக்கம் பார்க்க

## ஆசிரிய உதவியாளர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்



மேலதிக விபரம் பக்-12





வரலாற்று புகழ்மிக்க மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத் தேர்த் திருவிழா நேற்று இடம்பெற்ற போது அடியார்கள் பறவைக் காவடி எடுத்துவருவதையும் திரண்ட பக்தர் கூட்டத்தினரையும் காணலாம்


## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 13 . 07 . 1993



அரண் மடியில் 14 . 04 . 2011

**அமரர் ஸ்ரீசுரேந்திரன் சரண்ஜன்**
சென்.ஜோண்ஸ் கல்லூரி மாணவன்
திதி.ஏகாதசி 15.04.2015

குலம் செழிக்க வந்த எங்கள் குல விளக்கே
ஓடிவிளையாடி எம்முடன்
கூடி இருந்த பொழுதெல்லாம்
நினைக்கின்ற வேளையெல்லாம்
வலிக்கிறது சரண்ஜா
சாவு உன்தேகம் காவுகொண்ட போதிலும்
உன்நினைவு நெஞ்செல்லாம் எம்மோடு
உன்ஆத்மா பேரின்ப பெருவாழ்வு பெற
இறையடி வேண்டுகிறோம்...

பாரதி வீதி பத்தமேனி
அச்சுவேலி

கண்ணீருடன் உனதுஉறவுகள்
திரு.திருமதி.சி.ஸ்ரீசுரேந்திரன்
தாய்.தந்தை,சகோதரிகள்

(C/3849)


## இன்று பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

தமிழ்,சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு நாட்டிலுள்ள முக்கிய ஆலயங்களில் இன்று பொங்கல் விழா இடம் பெறவுள்ளது.

இந்து சமய அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நெல் சந்தைப்படுத்தும் சபை மீள்குடியேற்ற புனர்வாழ்வு மற்றும் இந்து சமய கலாசார அமைச்சு என்பன இணைந்து இவ் விழாவினை ஏற்பாடுசெய்துள்ளது.

இதற்கமைய இன்று காலை 10 மணிக்கு கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி கோவிலில் பொங்கல் விழா நடைபெறவுள்ளது.

# வவுனியா மாவட்ட இளைஞர்களின் திறமைகளை வெளிக்கொண்டுவர உதவுவேன்

## அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவிப்பு

வவுனியா மாவட்ட இளைஞர்களின் திறமைகளை வெளிக் கொண்டுவர தேவையான உதவிகளை வழங்கவுள்ளதாக தெரிவித்துள்ள வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும்,கைத்தொழில்,வணிகத் துறை அமைச்சருமான றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வவுனியா இரம்பைக்குளம் விளையாட்டு மைதானத்தில் நேற்று இடம் பெற்ற புதுவருட விளையாட்டுப் போட்டிகளின் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு கூறினார்.

"திரிபேர்ட்ஸ்" விளையாட்டுக கழகம் ஏற்பாடு செய்திருந்த இந்த விளையாட்டுப் போட்டியல் வெற்றி பெற்றவர்களுக்கான வெற்றிக் கிண்ணத்தை வழங்கி வைத்து அவர் மேலும் உரையாற்றுகையில்,

இந்த மாவட்டத்தின் அபிவிருத்திக் குழு தலைவராக இருந்து நான் எனது பணிகளை செய்து வருகின்றேன். என்னில் இனப் பாகுபாடுகள் இல்லை.யுத்தப் பாதிப்புக்களை சந்தித்த எனது



மாவட்ட மக்களுக்கு பணியாற்றக கிடைத்தமை நான் பெற்ற பாக்கியமாகும்.

எனது இந்த அரசியல் காலத்தில் அரச நியமனங்களை வழங்கியுள்ளேன். அபிவிருத்தி திட்டங்களை செய்துள்ளேன். எவருக்கு எது தேவையோ அதனை முன்னுரிமைப்படுத்தி செய்துவந்துள்ளேன். உங்களைப் போன்ற இளைஞர்கள் தான் இந்த நாட்டின் சிறந்த தலைவர்களாக இருக்க வேண்டும்.

இன்று அரச நியமனங்களை பெற்ற எத்தனையோ பேர் உயர் பதவிகளில் இருக்கின்றனர்.அதனை காணுகின்ற போது மகிழ்வாக இருக்கின்றது. இது போல் இந்த மாவட்ட இளைஞர்கள் விளையாட்டுத் துறையிலும் சாதனைகளை படைக்க வேண்டும்.பிரதேச,மாவட்ட ரீதியிலும்,அதனோடு தேசிய ரீதியிலும் எமது மாவட்டத்தின் பெயரை பதிவு செய்ய வேண்டும்.


இளைஞர்களின் திறமையும், ஆற்றலும் அபரிமிதமானது.இந்த இளைஞர்களின் முழுமையான பங்களிப்பு இருக்குமெனில் எமது மாவட்டத்தை பல் துறையிலும், முன்னேற்றம் காணச் செய்யலாம்.சிலர் இனவாதம், மதவாதம் பேசி எமக்குள் பிரிவினைகளை ஏற்படுத்த முயற்சிப்பார்கள் அவர்கள் தொடர்பல் விழிப்பாக இருக்க வேண்டும் என்றார்.

இந்த நிகழ்வில், பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் ஷாஹிப் மொஹிதீன், அமைச்சரின் இணைப்பு செயலாளர் முத்து முஹம்மத், வவுனியா நகர சபை முன்னாள் உறுப்பினர்கள் அப்துல் பாரி,எம். ஆரிப் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | புதன்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம் (பக்திப் பாடல்கள்) |
| Am 07.00 | காலைக் கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | கொஞ்சம் கலாட்டா |
| Am 09.55 | காலை செய்திகள் |
| Am 10.00 | ஆரோகனம் |
| Am 10.30 | சிரிக்க சிரிக்க |
| Am 11.30 | அதிர்வுகள் |
| PM 12.30 | Hello DD |
| PM 01.00 | மதிய செய்திகள் |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.55 | மாலை செய்திகள் |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்திகள் |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# மன்னார் பிரதான பாலத்தில் ஒளிராத தெருவிளக்குகள்



(மன்னார்)

மன்னார் தீவையும் பெருநிலப் பரப்பையும் இணைக்கும் பிரதான பாலத்தில் பொருத்தப்பட்டுள்ள தெரு விளக்குகள் ஒளிராமையால் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். தலைமன்னாருக்கான பாலம் புனரமைக்கப்பட்டு தற்போது போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

எனினும் பாலத்தில் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகள் சீராக ஒளிர்வதில்லை. இதனால் வாகனங்களில் பயணிப்போரும், பாலத்தில பொழுதைக் களிக்கவருபவர்களும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். இப் பாலத்தில் இருள் சூழ்ந்துள்ளமையால் விபத்துக்களும் இடம்பெற்றுகின்றன.

எனவே பாலத்தின் தெரு விளக்குகளை திருத்தித் தரும்படி பல முறை மன்னார் நகர சபையின் கவனத்திற்கு மக்கள் கொண்டு சென்ற போதிலும் இது தொடர்பாக அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். 2464 கோடி ரூபா செலவில் உருவாக்கப்பட்ட மன்னார் பிரதான பாலம் மக்கள் பாவனைக்கு வழங்கப்பட்ட பின் மன்னார் நகரசபையே அதனை பராமரித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## கள்ளமாடு வெட்டியவர் கரவெட்டியில் கைது

கரவெட்டி ஞானசாரியார் வீதியில் களவாக மாடு வெட்டினார் என்ற குற்றச்சாட்டுக்காக நெல்லியடி பொலிஸார் ஒருவரை அண்மையில் கைது செய்துள்ளனர்.

கைது செய்தவரை நெல்லியடி பொலிஸார் பருத்தித்துறை பதில் நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது 25 ஆயிரம் ரூபா ஆள்பிணையில் செல்லுமாறு அனுமதிக்கப்பட்டார்.

வரும் 25 ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (18)

# சமுர்த்திக் கொடுப்பனவு தொடர்பில் பயனாளிகள் எவ்வாறு நடாத்தப்படுகிறார்கள்

## பிரதேச செயலர் அறியவேண்டுமென கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சமுர்த்திப் பயனாளிகள் சமுர்த்தி வங்கிகளில் எவ்வாறு நடாத்தப் படுகின்றார்கள் என்பதை பிரதேச செயலர் அவதானிக்க வேண்டும்.

சமுர்த்திப் பயனாளிகள் குபேரர்கள் அல்ல, ஏழை மக்களே அவர்களுக்கு அரசு வழங்கும் அரசமானிய நிதியை வங்கி அலுவலர்கள் தரங்குறைவாக செயற்படுத்த முற்படுகின்றார்கள்.

இவ்வாறு நவாலி தெற்கு ஜே/136, நவாலி கிழக்கு ஜே/135 சமுர்த்தி பயனாளிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

நவாலி சமுர்த்திப் பயனாளிகள் தொடர்பில் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் தெரிய வேண்டிய விடயம் எனும் தலைப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த வாரம் சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட சமுர்த்திப் பயனாளிகளுக்கு சமுர்த்தி வங்கியினால் காசு கொடுப்பனவு வழங்கப்பட்ட போது மிக தரக்குறைவாக பயனாளிகள் நடாத்தப்பட்டனர்.

காசு கொடுக்கப்படுவதற்கு முன் அவர்களது சமுர்த்தி புத்தகம் பறித்து வைக்கப்பட்டது. பின்னர் நெடுநேரத்தின் பின்னர் 3000 ரூபா கட்டாய சேமிப்பு என கூறிய அதனைப் பெற்றுக் கொண்ட பின் சமுர்த்திப் புத்தகம் மீள வழங்கப்பட்டது.

இச் செயற்றிட்டத்திற்கு மறுப்பு தெரிவித்தவர்களின் சமுர்த்திப் புத்தகங்கள் பறித்து வைக்கப் பட்டுள்ளது. அரசு புத்தாண்டுக்காக வழங்கிய சமுர்த்தி நிவாரண நிதி மக்களுக்கு பயன்படாத நிலையில் வங்கியில் வைப் பிலிடப்பட்டதுடன். வங்கி உத்தியோகத்தர்கள் தமது எதிர்கால நலத் திட்டத்திற்காகவும், கூடிய சேமிப்பை பெற்றதை பிரதேச செயலருக்கு முன்வைப்பதற்காக எமக்கு கிடைத்த நிதியை இவ்வாறு வைப்பிலிடுவது சாலப்பொருத்தமான விடயமல்ல என நவாலி சமுர்த்தி பயனாளிகள் சார்பில் வயோதிபர் க.ஆறுமுகதாசன் கவலையுடன் தெரிவித்தார். இவ்வாறு சமுர்த்தி வங்கி அலுவலர் நடப்பதற்கு காரணம் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தவறான வழிநடாத்தல்களே இதற்கு காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (92)

# திறப்பு விழா நாளை

(மன்னார்)

மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசேப்பு ஆண்டகையின் 75 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு மன்னார் ஜோசப் வாஸ் நகர் நற்கருணை நாதர் ஆலயம் நாளை திறக்கப்படவுள்ளது.

ஜோசப் ஆண்டகை தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் இறை பிரசன்னத்துடன் வடக்கு, கிழக்கு மறை மாவட்ட ஆயர்கள் ஒன்றிணைந்து அபிஷேகம் செய்து கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# ஏழிசை மிருதங்க நார்த்தனாலயத்தின் 5 ஆவது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம் ஏழிசை மிருதங்க நார்த்தனாலயத்தின் ஐந்தாவது ஆண்டு நிறைவையொட்டி இடம்பெற்ற கலைவிழா கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

கிழக்கு பல்கலைக்கழக நுண்கலைத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி சி.ஜெயசங்கர் பிரதம விருந்தினராகவும் கலைப்பேராசான் கலைஞர் வேல். ஆனந்தன், கலாபூஷணம் பத்மினி செல்வேந்திரகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். நல்லை க.கண்ணதாசனின் குரு தண்ணுமைவேந்தன் மா. சிதம்பரநாதன் ஆசியுரை நல்கினார்.

அந் நிகழ்வில் குரலிசை - முதுநிலை விரிவுரையாளர் தவநாதன் றொபேட், மற்றும் பவனுஜா கருணாகரன், புல்லாங்குழல் - ஆர்.வசந்தன், வயலின் - அம்பலவாணர் ஜெயராமன், மற்றும் விரிவுரையாளர் கா.குகபரன், வீணை - பாலினி கண்ணதாசன், மிருதங்கம் - நல்லை க.கண்ணதாசன், மற்றும் க.இசைநிலவன், தவில், ஆர்.ஆனந்தகணேசன், கபேலா, கெஞ்சிரா, ஞா.வசந் முகர்சிங், என்.சதீஸ்குமார் ஆகிய கலைஞர் பங்கேற்று நிகழ்வை அணிசெய்தனர்.

யாழ்ப்பாணக் கலைஞர்களும் புதுமை செய்யும் ஆர்வலர்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் லய ஆற்றுகையில் புத்தாக்க நிகழ்வாக நல்லை. க.கண்ணதாசனின் தயாரிப்பில் ஆறுதாள சங்கமம் என்ற நிகழ்வு இடம்பெற்றது. இதில் கண்டசாப்பு, கண்டரூபகம், திஸ்ரதிரிபுடை, சதுஸ்ர ஜெம்பை, கண்ட ஏகம், மிஸ்ர சாப்பு ஆகிய தாளங்களைச் சங்கமிக்கச் செய்து மிருதங்க இசை இடம்பெற்றது. ந.சதீஷ்குமார், ஞா.வசந், க.இசை நிலவன் ஆகியோர் லய இசை வழங்கினர். தாளங்களைத் தனித்தனியே யாழ்ப்பாணத்தின் வளர் இளங் கலை ஞர்களான அ.அமிர்தசிந்துஜன், அ.அமிர்தலோஜன், ஆர்.சாகித்தியன், க.வர்ஜிகன், பாலினி கண்ணதாசன் ஆகியோர் நெறிப்படுத்தினர். (48)

# அக்கராயன்குள நீர் சிறுபோக நெற்செய்கைக்கு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அக்கராயன்குளம் தற்போது சிறுபோக நெற்செய்கைக்காக திறந்துவிடப்பட்டுள்ளது.

2500 ஏக்கரில் அக்கராயன்குளத்தின் கீழ் இவ்வாண்டு சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. இதற்காக குளத்தின் நீர் திறந்துவிடப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக்குளத்திற்கு அடுத்ததாக இரண்டாவது பெரியகுளமாக அக்கராயன்குளம் விளங்குகின்றதென்பதும் குறிப்பிடத்தக்கது. (160)

# வடமாகாணசபையின் நெருக்கடிகள்

● வீ.சுந்தரராஜன்

இரண்டு மாதங்களுக்குள் வடக்கு மாகாணசபைக்கு எதிரான அல்லது அதனை நெருக்கடிக்குள்ளாக்கும் இரண்டு பிரச்சினைகள் போராட்டங்களாகியிருக்கின்றன. ஒன்று மாகாணக்கல்வி அமைச்சரை அவருடைய பணிமனைக்குள் பூட்டிவைத்துப் போராட்டமொன்றை நடத்தினார்கள் ஆசிரியர்கள். அடுத்தது கடந்த வாரம் நல்லூரில் நடத்தப்பட்ட யாழ்ப்பாணத்துக்கான தூயநீர்ப் போராட்டம்.

இந்த இரண்டு போராட்டங்களும் எப்படி நடந்தன? ஏன் நடந்தன?

முதற்போராட்டம் வன்னியில் கற்பித்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்கள், தங்கள் இடமாற்றம் மாகாண–சபையினால் பொருப்படுத்தாமல் விடப்பட்டதன் பின், நியாயமற்ற தாமதத்தைச் சுட்டிக்காட்டி மாகாணக் கல்வி அமைச்சருக்கும் அதிகாரிகளுக்கும் கடிதம் எழுதியிருந்தனர். அதன்பிறகும் உரிய பதிலோ தீர்வோ அவர்களுக்குக் கிடைத்திருக்கவில்லை. இந்த நிலையில்தான் அவர்கள் வேறு வழியில்லாமல் அமைச்சரைப் பணிமனைக்குள் பூட்டி வைத்துத் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள்.



இது மாகாணக் கல்வி அமைச்சின் செயற்றிறன் இன்மையையும் தீர்மானங்களை எடுப்பதில் உள்ள தளர்வுகளையும் வெளிப்படுத்திய நிகழ்ச்சி.

மாகாணக் கல்வி அமைச்சர் வன்னிப்பகுதியில் இரண்டு மாவட்டங்களில் கல்வி உத்தியோகத்தராகவும் அதிகாரியாகவும் கடமையாற்றி அனுபவத்தைக் கொண்டவர். அப்படியான ஒருவர் வன்னிப் பிரதேசத்தின் தேவைகளையும் அவற்றுக்கான வழங்கல்களின் அவசியத்தையும் சரியாக அறிந்தவர்.

இருந்தும் வன்னியின் ஆசிரியத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாமல் இன்னும் தடுமாறிக் கொண்டிருக்கிறார். வன்னிக்கான ஆசிரியர்களை யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பினால்தான், அங்கே படிப்பித்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்களை விடுவிக்க முடியும். இதைச் செய்வதற்கு கல்வி அமைச்சரினால் முடியாமலிருக்கிறது.

வன்னிப் பாடசாலைகளில் உள்ள ஆசிரியத்தேவையை நிறைவு செய்ய முடியாமல் தத்தளிக்கும் கல்வி அமைச்சர் கண்டு பிடித்த தீர்வு, அங்கேயிருக்கும் பல பாடசாலைக–ளின் வகுப்புகளைக் குறைப்பது. அந்த வகுப்புகளின் மாணவர்களை அயலில் உள்ள பாடசாலைக்குப்போய் படியுங்கள் என்று அறிவுரைப்பது ஆகியவையே.

இத்தகைய ஒரு நடைமுறை முன்னர் யுத்தகாலத்தில் இருந்தது. அப்பொழுது யாழ்ப்பாணத்திலிருந்தும் வவுனியா, மன்னார் போன்ற நகரப்பகுதிகளில் இருந்தும் ஆசிரியர்களை வன்னிக்குப்பெற முடியாத நிலை காணப்பட்டது. ஆனால், தற்போதைய நிலை அப்படியானதில்லை.

இப்பொழுது இந்தப் பிரதேசங்களில் தாராளமாக ஆசிரிய வளம் உண்டு. இந்த வளத்தைப் பகிர்ந்தளிப்பதே கல்வி அமைச்சின் செயற்பாடு. ஆனால், அதைச் செய்ய முடியாமல் தத்தளிக்கிறது கல்வி அமைச்சும் நிர்வாகமும்.

இந்தக் குறைபாட்டுக்கெதிரான ஒரு போராட்டமே ஆசிரியர்களால் நடாத்தப்பட்டது. இதுபோன்ற பல போராட்டங்களைக் கல்வி அமைச்சு அடுத்த தவணைக்காலத்தில் இன்னும் காணவுள்ளது. இரண்டாம் தவணைக்காலத்தில் ஆசிரிய இடமாற்றத்தின் குறைபாடுகள் மேலும் தெரியப்போகின்றன. அதைப்போல ஆசிரியர் குறைபாடுகளும் வன்னியில் தூக்கலாகத் தெரியப்போகிறது. இது பல மட்டங்களிலும் சூட்டைக்கிளப்பும்.

இரண்டாவது போராட்டம், யாழ்ப்பாணத்தின் குடிநீர் மாசடைந்து விட்டது. அந்த மாசடைதலுக்கு உரிய நிவாரணம் காணப்படவில்லை. இதனால் யாழ்ப்பாணத்தின் குடிநீர்ப்பிரச்சினை ஒரு தீராப்பிரச்சினையாக மாறியுள்ளது. இதற்கான தீர்வைக்காண்பதில் மாகாணசபையும் சம்மந்தப்பட்ட தரப்புகளும் தவறிவிட்டன என்பதையிட்டு நடந்தது.



யாழ்ப்பாணத்தின் குடிநீர்ப்பிரச்சினை பற்றிப் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக பேசப்பட்டு வருகிறது. இப்பொழுது பேசப்பட்டு வரும் கழிவு ஒயில் பிரச்சினைக்கு முன்பாக மலத்தினால் நிலத்தடி நீர் பாதிப்படைந்திருக்கிறது என நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை வெளிப்படையாகவே சொல்லி வந்தது. அண்மைக்காலத்தில் அது இதுதொடர்பாக பல கருத்தரங்குகளையும் மாவட்டச் செயலகத்தில் பல ஆய்வுக்கூட்டங்களையும் இதற்கான மாற்றுத்தீர்வு குறித்த ஆலோசனைகளையும் நடத்தியும் வந்தது.

நீர்ப்பிரச்சினை, நீர்ப்பிரச்சினைக்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்தது. இந்தப் பிரச்சினை பற்றி பேராசிரியர் இரா. சிவச்சந்திரன், நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பிராந்திய முகாமையாளர் பாரதிதாசன் போன்றோர் கட்டுரைகள், நேர்காணல்கள் மூலமாக நிலைமையை விளக்கியுமிருந்தனர்.

யாழ்ப்பாணத்தின் குடிநீர்ப்பிரச்சினைக்கு மாற்றுத்தீர்வாக கிளிநொச்சியிலிருந்து குடிநீரைக் கொண்டு வரும் திட்டமும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் நிதி மூலமாக மேற்கொள்ளப்படவிருந்தது.

ஆனால், இதையெல்லாம் வேறு விதமாகவே புரிந்து கொண்டு, எதிர் நடவடிக்கைகளில் இறங்கின, மாகாணசபையும் அதனை ஆட்சி செய்யும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும்.

இரணைமடுவிலிருந்து தண்ணீரை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு போகக் கூடாது என்று கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் எம்பி போர்க்கொடி தூக்கினார். இதுதொடர்பாக ஆரம்பத்தில் முதலமைச்சர் விக்கினேஸ்வரனுக்கும் சிறிதரனுக்கும் இடையில் முறுகல்கூட ஏற்பட்டது.

கூடவே, மாகாணசபையில் சுன்னாகம் கழிவு ஓயில் பிரச்சினையை மையமாக வைத்து நீர்மாசடைவைப் பற்றி உரையாட மாகாணசபை உறுப்பினர் கஜதீபன் ஒரு முழுநாள் விவாதத்துக்கு அடித்தளமிட்டார். அந்த விவாதமும் உணர்ச்சிகரமாக, சூடுபறக்க நடந்தது. பத்திரிகைகள் முன்பக்கத்தில் தலைப்புச் செய்திபிட்டன எல்லாம் சிறப்பாகத்தான் நடந்தன. ஆனால், தண்ணீர்ப் பிரச்சினைக்குத்தான் தீர்வு கிட்டவில்லை. இதனால், தன்னெழுச்சியாக பாதிக்கப்பட்ட மக்களும் அவர்களுக்கு ஆதரவாக விழிப்புணர்வடைந்த இளைஞர்களும் போராடத் துணிந்தனர்.

விளைவு நல்லூர்ப்போராட்டமாகியது. இந்தப் போராட்டத்துக்கு முன்னர் ஒரு விழிப்புணர்வு நடவடிக்கையை சில வாரங்களுக்கு முன், இந்த தன்னெழுச்சி அணியினர் நடத்தியிருந்தனர். அதையெல்லாம் மாகாண சபை பொருப்படுத்தவில்லை.

அது மட்டுமல்ல, சூழலியலுக்கும் நீர்வழங்கலுக்கும் பொறுப்பாக இருக்கும் அமைச்சர் ஐங்கரநேசன் இந்த போராட்டத்தையும் போராட்டக்குழுவையும் இழிவுபடுத்தி கடுமையாக விமர்சித்திருந்தார். எந்த அரசியல் பின்னணியும் இல்லாமல் நடந்த இந்தப் போராட்டத்துக்கும் இந்தப் போராட்ட அணிக்கும் அரசியற்சாயம் பூச முற்பட்டார்.

இதெல்லாம் மாகாணசபையின் குறைபாடுகளே தவிர, தீர்வைக் காண்பதற்கான வழிமுறைகளோ அல்ல. மாகாணசபையின் கூற்றையும் அமைச்சரின் பேச்சையும் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்த போராட்டக்காரர்கள் மட்டும் நிராகரிக்கவில்லை. மக்களும்தான் நிராகரித்தனர். ஏனென்றால் எல்லாவற்றையும் மக்கள் பார்த்துக்கொண்டும் அவதானித்துக்கொண்டும்தானே இருக்கிறார்கள்.

பிறர் துன்பங்களைக் கேட்டு அவர்களுக்கு ஆறுதல் கூறுங்கள். உங்கள் துன்பங்களை உங்களிடமே வைத்திருங்கள். -பீச்சர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## மன்னிப்போம்! மறப்போம்!

தமிழ்நாட்டின் திராவிட அரசியல் பாரம்பரியத்தில் "மன்னிப்போம்! மறப்போம்!" என்ற சுலோகம் வெகு பிரபலமானது.

திராவிடத் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு தேசிய நீரோட்டத்தில் இணைந்தபோதும், இந்திய தேசியத் தலைமைகளுடன் பகைமறந்து மாறி மாறிக் கூட்டணி அமைத்துக் கொள்ளும் போதும் திராவிடத் தலைவர்கள் தம் தொண்டர்களிடம் பெருந்தன்மையோடு சொல்லிக் கொள்ளும் வாக்கியம் அது.

அந்தப் பெருந்தன்மையான அரசியல் சுலோகத்தின் மூலமே, வட நாட்டானை விரட்டித் தனிநாடு அமைப்போம் என்ற தீவிர நிலைப்பாட்டை மென்மைப்படுத்தி, மாநில அதிகாரங்களைப் பெற்றுக் கொண்டனர்.

"வடக்கு வாழ்கிறது; தெற்குத் தேய்கிறது" "வடவர் ஆதிக்கம் மறுப்போம்!" போன்ற உணர்ச்சிகரக் கோஷங்களைக் கைவிட்டு, இணக்க அரசியலைக் கையிலெடுத்து மக்களை அழிவுகளிலிருந்து தப்ப வைத்தார்கள்.

ஆச்சரியம் என்னவென்றால், அந்தத் தலைவர்கள், ஈழத்தமிழர்களின் பிரச்சினை என்று வருகிறபோது, "மன்னிக்காதீர்கள்; மறக்காதீர்கள்" என்று பகையுணர்ச்சியை வற்ற விடாமல் பாடம் நடத்துவதுதான்!

எவ்வளவு காலத்துக்குத்தான் பகையிலும் ரோசத்திலும் வாழ்வை அழித்துக் கொண்டிருப்பது?

ஏன் எங்களால் யாரையும் மன்னிக்க முடியாமல் இருக்கிறது? உடனேயே, மன்னிக்கும்படியான கொடுமைகளையா அவர்கள் செய்தார்கள் என்று உணர்ச்சி பொங்கக் கொதித்தெழும்புவதே எங்கள் "வீர" இயல்பாக இருக்கிறது.

அறிவுபூர்வமாகச் சிந்தித்து மக்களைக் காக்கும் விதமாக யோசிக்க நாம் இப்போது கூட முன்வருவதாயில்லை.

ஒருவேளை, எங்களால் யாரிடமும் மன்னிப்புக் கேட்க முடியாமலிருப்பதுதான், அவர்களையும் எங்களால் மன்னிக்க முடியாதிருப்பதற்குக் காரணமாக இருக்கிறதோ என்னவோ!

எங்கள் தரப்பில் செய்த மாபெரும் தவறுகள், அநீதிகள் பற்றி கடைக்கண்ணால் கூட திரும்பிப் பார்க்க நமக்கு விருப்பமில்லை.

அப்படிப் பார்த்து நமது குற்றங்களும் இருப்பதாய்ச் சொல்கிறவர்களை, துரோகிகள் என்று இப்போதும் யாராவது போட்டுத் தள்ளிவிட மாட்டார்களா என்று சிலருக்கு வெளிப்படையான ஏக்கமும், பலருக்கு இரகசியமான ஆசையுமே இருக்கிறது!

நம் தரப்புப் பிழைகளை உணர்ந்து வெளிப்படுத்தி மன்னிப்புக் கேட்டுக் கொண்டுவிடுவதன் மூலம்தான், அதுமாதிரியான தவறுகளுக்கு நாம் மீண்டும் போகாமலிருக்க முடியும். அதுமட்டுமல்ல, மற்றவர்களும் தங்கள் பிழைகளைப் பேசும் தளர்வான சூழ்நிலை உருவாகும். அதன்மூலம்தான் ரணங்கள் ஆறும்.

பரஸ்பரம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளும் சூழல் உருவானால்தான், பேச்சுவார்த்தை ஆயுதத்தால் நாம் பயனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

சிங்களத்தரப்பு, இந்தியத்தரப்பு, தமிழ்நாட்டுத்தரப்பு, ஈழத்தமிழர்கள் தரப்பு, புலம்பெயர்ந்தோர் தரப்பு என எல்லோருமே மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும் சூழலை உருவாக்குவது பற்றியே நம் முயற்சி, பேச்சு, எண்ணம் எல்லாம் அமைய வேண்டும்.

முதலில் நாமே மன்னிப்புகளைக் கேட்க ஆரம்பிப்பதில் என்ன குறைந்துவிடும்?

1990 ஆம் ஆண்டு முஸ்லிம்களைத் துரத்தினதுக்கு, பள்ளிவாசலினுள்ளும் மற்றும் இடங்களிலும் கொலைகளைச் செய்ததுக்கு, அநுராதபுரம், அரந்தலாவை, தலதா மாளிகை மற்றும் பொதுஇடங்களில் நடந்த கொலைகள், இந்தியத் தலைவர் கொலை, இன்னுமின்னும் தமிழ்த் தரப்பால் நடந்த கொலைகள் எல்லாவற்றுக்கும் பெரிய மன்னிப்பை, அவரவர்களிடம் ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாயமே கேட்க வேண்டும்.

இவ்வாறு மன்னிப்பதன், மறப்பதன் மூலமே நமக்கும் எல்லோருக்குமான நல்வாழ்வுக்கு நாமனைவருமே திரும்ப முடியும்.

வெறுப்பால் மக்களைத் திரட்டுவதை விட இதற்குத் திரட்டுவது மிகக் கடினமான காரியம்தான். ஆனால், இதைத்தான் நாம் செய்தாக வேண்டும்.

- ஆசிரியர்

## மே மாதம் நாடாளுமன்றம் கலைக்கும் போது

## போர்க்குற்ற விசாரணை குறித்த விபரம் அறிவிப்பு

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றம் எதிர்வரும் மே மாதம் கலைக்கப்படும் அதேநேரம் போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணை குறித்த விபரங்களும் அறிவிக்கப்படுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் டைம் இணையத்தளத்திற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பொதுத் தேர்தலை எதிர்வரும் ஜுன் மாதமளவில் நடத்துவதற்கு உத்தேசித்துள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக உள்ளக விசாரணை ஒன்று நடத்தப்படும் என்பதை ஐ.நாவிடம் தெரிவித்திருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்துள்ளார். அதேநேரத்தில் இந்த உள்ளக விசாரணைக்கு ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரின் ஆலோசனையும் பெறப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சிலை வைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் பேரபிமானம் பெற்ற அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்திற்கு விரைவில் நினைவுச் சிலை வலி.மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கமைய இச் சிலை அமைப்பதற்கான அனுமதிக்கு வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர திருமதி.ரா.ஐங்கரன் விண்ணப்பித்துள்ளார்.

வடமாகாண பேரவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் ஊடாக வடமாகாண முதல்வருக்கு நினைவுச் சிலை வைப்பதற்கான அனுமதிக்காக எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடமாகாண மக்கள் மட்டுமன்றி உலகத்தின் பேரபிமானம் பெற்ற மாமனிதரும் முன்னாள் எதிர்க் கட்சித்தலைவருமான அமரர் அ.அமிர்தலிங்கத்திற்கு சிலை அமைப்பதற்கு வலி.மேற்கு பிரதேசசபை தீர்மானித்துள்ளது.

மேலும் சபையுடன் வலி.மேற்கில் இணைந்த பொது அமைப்பின் பிரதிநிதிகளும் எமது மண்ணின் ஈடற்ற தலைவர் அமரர் அ.அமிர்தலிங்கத்திற்கு நினைவுச் சிலையை நிறுவுமாறு கோரிக்கைகளை முன்வைத்த வண்ணம் உள்ளனர்.

எனவே சிலை வைப்பதற்கான அனுமதியை உடன் வழங்கி உதவுமாறு கோரியே அவசர கடிதத்தினை வடக்கு மாகாண பேரவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் ஊடாக முதல்வர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு சமர்ப்பித்துள்ளார். (92)

## சத்தியாக்கிரகப் போராட்டதில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

(கொழும்பு)

புதுவருடப் பிறப்பிலும் நாடளாவிய ரீதியில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலவசக் கல்வியை பாதுகாத்தல், உயர்கல்விக்கான கட்டணங்களை நியாயமான ரீதியாக்குதல், உரிமைக்காக போராடும் மாணவர்கள் மீதான தாக்குதலைக் கண்டித்தல் போன்ற விடயங்களை முன்வைத்து இந்தப்போராட்டம் நடாத்தப்பட்டு வருவதாக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் திறந்த பல்கலைக்கழகத்தில் நடத்தப்படும் போராட்டம் நேற்றுடன் 119 நாட்களாகின்றது.

றுகுனு பல்கலைக்கழகத்தில் நடாத்தப்படும் போராட்டத்திற்கு நேற்று 48 நாட்களாகின்ற அதே நேரத்தில் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் நடத்தப்படும் போராடடத்திற்கு நேற்று 34 நாட்களாகின்றது.

அதேவேளை ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் நடத்தப்படும் போராட்டத்திற்கு 28 நாட்களும், களனி பல்கலைக் கழகப் போராட்டத்திற்கு 28 நாட்களும் ஆகின்றது. எனவே கோரிககைகளுக்கான தீர்வு கிடைக்கும் வரை இந்தப் போராட்டம் ஓய்வதில்லை என்று அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மீன் ஏற்றுமதிக்கான தடை விரைவில் தளர்த்த நடவடிக்கை

### கடற்றொழில் அமைச்சு தெரிவிப்பு

ஐரோப்பிய நாடுகளுக்கு இலங்கையின் மீன்களை ஏற்றுமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை விரைவில் தளர்த்தப்படும் என கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட தடையைத் தளர்த்துவதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள வி.எம்.எஸ். உபகரணங்களை அடுத்த மாதத்திற்குள் படகுகளில் பொருத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரவீர குறிப்பிட்டார்.

இந்த விடயம் குறித்து வெளிவிவகார அமைச்சும், ஜனாதிபதியும் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக அமைந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அனைத்து மீன்பிடிப் படகுகளிலும் வி.எம்.எஸ். உபகரணங்களை பொருத்துவதற்காக அமைச்சினால் மூன்று இலட்சத்து 75 ஆயிரம் ரூபா வீதம் படகு உரிமையாளர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கைக் கொடியுடன் சீன மீன்பிடிப் படகுகள் மீன்பிடியில் ஈடுபடுவதை நிறுத்தியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதுதவிர, ஐரோப்பிய ஒன்றியத்தினால் முன்வைக்கப்பட்டிருந்த ஏனைய பரிந்துரைகளை ஏற்கனவே நிறைவேற்றியுள்ள நிலையில், இலங்கை மீன்களை ஏற்றுமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையும் விரைவில் தளர்த்தப்படும் என கடற்றொழில் அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## மதுபோதையில் வாகனம் செலுத்திய 605 சாரதிகள் கைது

(கொழும்பு)

கடந்த 11 ஆம் திகதி முதல் நேற்று 14ஆம் திகதி காலை 6 மணிவரையிலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதிகளில் 605 பேரை கைது செய்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

## மன்மதன் வருடத்திலும் மின்னலால் இன்னல்

(கொழும்பு)

மொனராகலை - சிரிகல பகுதியில் மின்னல் தாக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை பெய்த மழையுடன் மின்னல் தாக்கியதில் இளைஞன் உயிரிழந்துள்ளதுடன் இளைஞனின் சடலம் சிரிகல வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாவம்... அவர்களை தண்ணீர் குடிக்க விடுங்கள்

## பீஷ்ம ஸாக்னி கட்டுரையிலிருந்து

**இந்தப் போராட்டம், முடிவு பற்றி இன்னொரு விடயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இது இளைஞர்களால் தன்னெழுச்சியாக திட்டமிடப்படாமல் ஆரம்பிக்கப்பட்டது. அதாவது நமது ஆயுதப்போராட்டத்தின் ஆரம்பத்தை உதாரணமாக சொல்லலாம். அதிக உணர்ச்சிவசப்படும் இளையவர்கள் அவர்கள். அரசியல் நிகழ்ச்சிநிரலிற்கு அப்பாலானவர்கள். அரசியல் நிகழ்ச்சி நிரலிற்கு அப்பாலான இப்படியான இளைஞர்களின் செயற்பாடுகளே வளர்ச்சியடைந்து மக்கள் கூட்டத்தின் அரசியல் நிகழ்ச்சி நிரலாக மாற்றமடையுமென்பதே வரலாறு.**

நீர்மாசால் பாதிக்கப்பட்ட மக்களும், தன்னெழுச்சியாக உருவான இளைஞர் அணியொன்றும் தூயநீருக்கான உண்ணாவிரதப் போராட்டமொன்றை நடாத்தியிருந்தார்கள். இரண்டுநாள் உண்ணாவிரதப் போராட்டத்தின் பின்னர் கடந்த புதன்கிழமை மாலை அவர்களது போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது. வடக்கு ஆளுனர் மற்றும் அரசாங்க அதிபர் இணைந்து கொடுத்த வாய்மூல உறுதிமொழியையடுத்து அவர்கள் இந்தப் போராட்டத்தை இடைநிறுத்தியுள்ளார்கள்.

நானறிந்தவரையில், அண்மைக்காலத்தில் வடக்கில் நடந்த தன்னெழுச்சியான முதலாவது போராட்டம் இதுவென்று அறுதியிட்டுக் கூற முடியும். வடக்கில் சமீபகாலமாக நடாத்தப்படும் போராட்டங்கள் அனைத்துமே திட்டமிட்டு, யாரோ சிலரது ஒழுங்கமைப்பில் நடத்தப்படுபவைதான்.

ஒன்றில் காணாமல் போனவர்களது தாய்மாரை கொண்டுவந்து அழவைக்கிறார்கள். அல்லது முன்னாள் போராளிகளை அழைத்துவந்து கொச்சைத்தமிழில் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை கொடுத்தனுப்புகிறார்கள். இப்படியான போராட்டப் பின்னணியுடைய வடக்கில், மிக தன்னெழுச்சியாக நடந்த முதலாவது போராட்டமாக இதனைக் கொள்ளலாம்.

இந்தப் போராட்டம் பற்றியும், அதன். முடிவு பற்றியும் பல்வேறு தரப்பினரும் வைக்கும் நோக்கங்களுடனான விமர்சனங்களை கடந்து, அதனை ஆதரிக்க வேண்டிய கடப்பாடு உள்ள ஒரே காரணம் இதன் தன்னெழுச்சிதான். மகிந்த ராஜபக்ஷவின் சர்வாதிகார ஆட்சிக்காலத்தில் எந்தப் போராட்டத்திற்கும் வாய்ப்பில்லாமலிருந்த நிலையில், ஆட்சிமாற்றத்தின் பின்னர் தமது அடிப்படையான உரிமையொன்றை தமிழ் இளையோர் நிலைநாட்ட முனைகிறார்கள் என்பதே முக்கியமானது. வளர்த்தெடுக்கப்பட வேண்டியது.

தமது உரிமைகளிற்காக மக்கள் கூட்டம் குரல் கொடுப்பதும், ஜனநாயக வழியிலான போராட்டங்களில் ஈடுபடுவதும் அத்தியாவசியமான அரசியல் உரிமை. ஒரு மக்கள் கூட்டத்தின் பிரக்ஞை விழிப்புடனுள்ளதென்பதன் ஒரே அடையாளம் அதுதான். இதனை நமது இளையவர்கள் நிலைநாட்டியுள்ளனர்.

தமிழ்ப்பத்திரிகைச் சூழல் பற்றி இங்கு விசேடமாக சொல்லித் தெரியவேண்டியதில்லை. தற்போதைய நிலையில் தமிழ்ப்பத்திரிகைச் சூழலில் ஒருவருடைய அடிப்படைத் தகமையாக அவர் தேசியவாதியா, எதிர்த் தேசியவாதியா என்பதையே பார்க்கிறார்கள். இந்த ஒரே தகைமைக்கப்பால் அவர்கள் வேறொன்றை எதிர்பார்ப்பதுமில்லை, கற்றுக் கொள்ள விரும்புவதுமில்லை.

கொழும்பு ஆட்சியாளர்களை தோற்கடித்து தமிழர்களின் சுதந்திரதேசத்தை ஸ்தாபிப்பதற்கு உள்ள வழிமுறைகளில் ஒன்றாகவே இந்த வகையானவர்கள் பத்திரிகைத்துறையையும் பார்க்கிறார்கள்.

இந்தவகையான போக்கு யாருக்கு வாய்ப்பாக அமைந்தது என்றால் இரண்டு தரப்புக்களிற்கு மட்டும்தான். ஒன்று தமிழ்தேசிய அரசியல்வாதிகள். தமது அரசியல் எதிரிகளை அவர்கள் கையாள சுலபமான சூத்திரம் கிடைத்துள்ளதுடன், அதனை தினம் தினம் மக்கள் மத்தியில் பிரசாரம் செய்யும் தொண்டர்களாக பத்திரிகைக்காரர்கள் வாய்த்துள்ளார்களே.



நமது பேஸ்புக் தமிழ்த்தேசியப்போராளிகளையும் அதிகம் சீண்டியிருக்கும். அவர்கள் அறிந்த போராட்டமெல்லாம், இதுவரை யாழில் நடந்த போராட்டங்கள் மட்டும்தான். இவற்றில் கட்டாயம் சிறிதரனோ, அனந்தியோ, ஐங்கரநேசனோ முகத்தை காட்டியிருப்பார்கள். இந்த முகங்கள் இல்லாத போராட்டத்தை அவர்களால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை.

இது அரசியல்வாதிகளை பதட்டப்படுத்த, அவர்களின் தத்துப்பிள்ளைகள் ஊடகங்களின் வாயிலாக அதனை பிரதிபலித்தார்கள்.

இன்னொன்று, இப்பொழுது போராட்டம் நடாத்தப்படுவது தனியே சிங்கள ஆட்சியாளர்களை பொறுப்புக்கூற வலியுறுத்தி மட்டுமல்ல. மாறாக நம்மவர்களையும் பொறுப்புக்கூற வலியுறுத்துகிறது. இதுவும் போராளிகளை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. அவர்கள் நினைக்கிறார்கள், நம்மவர்களை கேள்வி கேட்கிறார்கள் என்றால் நிச்சயம் அவர்கள் ஒட்டுக் குழுவாகத்தான் இருப்பார்கள் என.

தம்மை கேள்வி கேட்பவர்கள், வேறு அரசியல் நிலைப்பாடுடையவர்களை துரோகியாக்கி களத்தைவிட்டு அகற்ற தமிழ் அரசியல் ஆரம்பத்தில் கண்டெடுத்தது தமிழ் ஆயுத இயக்கங்கள். தற்போது தத்தெடுத்திருப்பது இந்த வகையான பத்திரிகையாளர்களை.

இந்தவகைப் போக்கினால் பயன்பெறும் இரண்டாவது தரப்பு அரசு. அவர்கள்தான் மிக அதிகமான பலனைப் பெறுபவர்கள். அரசியல், ராஜதந்திர செயற்பாடுகளில் மிக உயர்ந்த மட்டத்திற்கு சென்றுள்ள சிங்களதரப்புடன் சவால் விடும் சூழல் தமிழர்களிடம் தற்போதில்லை. தமிழர்களின் தற்போதைய உள்ளக களயதார்த்தம் நீடிக்கும் வரையில் அப்படியொரு சூழல் உருவாகாதென்பது அவர்களிற்கும் தெரியும். அதனால் தற்போதைய நிலையை நீடிக்கவே விரும்புவார்கள்.

தற்போது தமிழர்கள் தரப்பில் யார் போராளி யார் பொறுக்கி என்பது யாருக்கும் தெரியாது. தடியெடுத்தவன் தண்டல்காரன் என்பதைப்போல, பேஸ்புக் வைத்திருப்பவன் எல்லோரும் போராளிதான். இப்படியான போராளிகளின் "அரசியல் நிலைப்பாடுகளிற்கு" மாறானவர்கள் பொறுக்கிகள்.

இந்தப் பின்னணியில்தான் நல்லூர் மக்கள் போராட்டமும் அணுகப்பட்டது. இந்தப் போராட்டம் பல்வேறு தரப்பினருக்கும் உவப்பில்லையென்பது வெளிப்படையாகவே தெரிந்தது. முக்கியமாக அரசியல்வாதிகளிற்கு இடமில்லையென அறிவிக்கப்பட்டது அரசியல்வாதிகளிற்கு உவப்பில்லாமல் போனது.

இது ஒரு யாழ்ப்பாணத்தின் பொதுமன நிலை. அவர்கள் ஏரியாவுக்குள் புகாத வரை அவர்களிற்கு ஓகேதான். தப்பித்தவறி அவர்களின் ஏரியாவிற்குள் நுழைந்தால், அடுத்த கணமே பேஸ்புக் புரபைல் பிக்சரில் இருந்து தண்ணீர்ப்போராட்டப் படத்தை அகற்றிவிட்டு, அது ஈ.பி.டி.பியின் செயல் என பிலாக்கணமிட ஆரம்பித்து விடுவார்கள்.

பெரும்பாலான பேஸ்புக் போராளிகளின் ஒரே கேள்வி- வடக்கு முதலமைச்சர் கொடுத்த எழுத்துமூல உறுதிமொழியை ஏற்காதவர்கள், எப்படி ஆளுனரின் வாய்மூல வாக்குறுதியை ஏற்றார்கள் என்பதே. இதை சற்று தூக்கலாக கேட்க நினைத்த போராளிகள் இடையிடையே மானே தேனே போட்டுக் கொண்டார்கள். சிங்கள ஆளுனர், தமிழர்களின் ஏக முதல்வர் என தமது கற்பனை குதிரையை தட்டிவிட்டிருந்தார்கள்.

அவர் சிங்கள ஆளுனரா, பறங்கி ஆளுனரா என்பதெல்லாம் இரண்டாவது விடயம், அவருடன் சுமுகமான உறவுள்ளதென்றும், எல்லாம் சட்டப்படி நடக்கிறதென்றும் வடக்கு முதலமைச்சரே வாக்குமூலமளித்து விட்டாரே. பிறகெதற்கு இடையிடையே மானே, தேனே போட்டுக் கொள்ள வேண்டும்?

நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் அண்மை நாட்களாக வெளிப்படுத்தி வரும் விக்னேஸ்வர பக்தி வெளிப்படையானது. அவரது இணையத்தளம் "வடக்கு முதல்வரை அவமதித்த போராட்டக்காரர்கள்" என செய்தி வெளியிட்டிருந்தது. எதனை அவமதிப்பாக அவர்கள் கருதினார்கள் என்பதை பாருங்களேன், இந்த நீரை குடிக்கலாமா முடியாதென அவரை விடாப்பிடியாக கேட்டதைத்தான் அப்படி செய்தி வெளியிட்டார்கள்.

உண்மையில் அரசியல் என்பதன் அடிப்படையே பொறுப்புக்கூறல்தான் என்பதை அவர்கள் அறிந்து கொள்ளாமலிருந்திருக்கக்கூடும்.

அந்த இணையத்தளம் வெளிநாட்டைத் தளமாக கொண்டது. சுன்னாகம் எண்ணெய் அவர்கள் வீட்டு கொல்லையை எட்டும்வரை அவர்களிற்கு அது பிரச்சினையான விடயமல்ல. அந்த மக்கள் தண்ணீரை குடித்தாலென்ன, கழிவெண்ணையை குடித்தாலென்ன. ஓட்டுப்போட உயிருடனிருந்து தமக்கு வாழ்வளிக்கும் அரசியல்வாதிகளை வெற்றியடையச் செய்தால் சரியென நினைக்கிறார்கள்.

போராட்டக்காரர்கள் வடமாகாணசபை கொடுத்த வாக்குறுதியை ஏன் ஏற்றுக் கொள்ளவில்லையென தெரியவில்லை. அவர்கள் தரப்பிற்காக நான் வாதிட முடியாது. ஆனால் சில தர்க்கபூர்வமான காரணங்களினடிப்படையில் அதனை நியாயம் சொல்ல முடியும்.

முதலாவது, நான்கு நாள் அவகாசம் கேட்கும் முதல்வர், இத்தனைநாள் என்ன செய்தார்? அவர் முதல்வராக உள்ள பிராந்தியத்தில் குடிக்க முடியாமல் நீர்மாசடைந்து வருவதாக மக்கள் அலறிக் கொண்டிருக்கிறார்கள். அன்றாடம் வழங்கப்படும் சொற்ப நீரில் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். பேராட்டங்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர் உணர்வுபூர்வமான, ஜீவனோபாய பிரச்சனைக்குரிய முன்னுரிமையை அதற்கு கொடுக்கவில்லை.

ரணில் விக்கிரமசிங்கவுடன் அவருக்கு ஏற்பட்ட லடாயிற்கு கொடுத்த முக்கியத்துவத்தை இந்தப் பிரச்சினைக்கு அவரும் கொடுக்கவில்லை, தமிழ்த்தேசிய ஊடகங்களும் கொடுக்கவில்லை. இதில் அவர் மட்டும் குற்றம் சாட்டப்படக்கூடியவரல்ல. வடக்கு விவசாய அமைச்சரும் கேள்விக்குட்படுத்தப்பட வேண்டியவர்.

அவர்கள் தூயநீருக்கான செயலணி ஒன்றை நிறுவினார்கள். அந்த செயலணி அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது. அந்த அறிக்கை பற்றி நாம் விமர்சிக்கப் போவதில்லை. எனினும், அந்த செயற்றிட்டத்திலிருந்த குறைபாடுகள் பற்றி பேச வேண்டும்.

முதலில் அந்த ஆய்வு எப்படி, யாரால், எங்கு நடத்தப்பட்டது என்பது பற்றியோ அதன் நம்பகத்தன்மை பற்றியோ சரியான தெளிவுபடுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. அந்தக்குழு வெளியிட்ட ஆய்வுமுடிவுகளை உள்ளூர் மருத்துவ ஆய்வுகளும், தனிப்பட்ட மருத்துவர்களும் நிராகரிக்கும் நிலையே இருந்தது. அதன் செயற்றிறன் பற்றிய கேள்விகளை இவர்கள் எழுப்பியிருந்தார்கள்.

மிக அத்தியாவசியமான பிரச்சினையொன்றில் காத்திரமான திட்டமிட்ட செற்பாட்டை ஏன் வடமாகாணசபையினால் செய்ய முடியாமற்போனது? இப்படியான வாழ்வாதார பிரச்சினையொன்றிலேயே சரியாக திட்டமிட்டு செயற்பட முடியாதவர்களை நம்புமாறு மினரல் வோட்டர் அருந்திக் கொண்டு செய்திகள் எழுதுவதில் எந்த நியாயமுமில்லை.

இப்பொழுது ஆட்சியில் மகிந்த இல்லை. தமிழர்களினால்தான் ஆட்சியில் வந்தேன், உங்களை மறக்க மாட்டேன் என வாய்க்குவாய் சொல்லும் மைத்திரியின் நல்லாட்சி. நல்லாட்சிக்கு வாக்களிக்க கோரியவர்கள்தான் கூட்டமைப்பும், வடக்கு முதல்வரும்.

(13ஆம் பக்கம் பார்க்க)

# நிதிப்பிரேரணையை தோற்கடிக்க பலமில்லியன் கணக்கில் பேரம்

## வெளிச்சத்துக்கு வந்தது சதித்திட்டம்



பிணைமுறிகளை விற்பனை செய்வதன் மூலம் 400 பில்லியன் ரூபா பணத்தைத் திரட்டும் அரசாங்கத்தின் யோசனையை தோற்க்டிப்பதற்கு, முன்கூட்டியே சதித் திட்டம் தீட்டப்பட்டமை தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த யோசனை மீதான வாக்கெடுப்பு நாடாளுமன்றில் நடைபெற்ற தினத்திற்கு முதல்நாள், மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிற்குச் சொந்தமான கம்பஹா வீட்டில் இத்திட்டம் தீட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. விமல் வீரவன்ச, காமினி லொக்குகே, தினேஸ் குணவர்தன, பந்துல குணவர்தன ஆகியோரின் ஒருங்கிணைப்பில் 51 நாடாமன்ற உறுபபினர்கள் இதன்போது ஒன்றுகூடி, குறித்த யோசனைக்கு ஆதரவு வழங்கமாட்டோம் என உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த யோசனை தோற்கடிக்கப்பட்டதன் பின்னணியில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ செயற்பட்டதாகவும் பல மில்லியன்கள் கைமாறப்பட்டதாகவும் குறித்த தகவல்கள் தெரிவித்துள்ளன. பதவி போனாலும் பரவாயில்லை, மகிந்தவிற்கே எனது ஆதரவு என்ற நிலைப்பாட்டில் பிரசன்ன ரணதுங்கவும் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 3 மாதங்களில் பேஸ்புக் குறித்து 500 முறைப்பாடுகள் பதிவு




இவ்வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் பேஸ்புக் தொடர்பில் 500 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக கணனி அவசர அழைப்பு பிரிவு தெரிவிததுள்ளது.

மார்ச் மாதத்தில் மாத்திரம் 200 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக பிரிவின் ஊடகப் பேச்சாளர், பாதுகாப்பு பொறியியலாளர் ரொஹான் சந்திரகுப்த தெரிவித்துள்ளார்.

போலி பேஸ்புக் கணக்கு குறித்தே அதிக முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. ஏனையவர்களின் கணக்குகளை முடக்கி தரவுகளை மாற்றியமை தொடர்பிலும் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் முறைப்பாடுகள் குறித்து பேஸ்புக் நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஹெலிகொப்டர் கட்டணத்தை ஜனாதிபதி தான் செலுத்தவேண்டும்

## விமல் வீரவன்ச தெரிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரத்திற்காக பயன்படுத்திய விமானப்படையின் ஹெலிகொப்டர்களுக்கான கட்டணத்தை செலுத்துவது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கடமை என விமல வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பிபிசி செய்தி சேவைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களுக்கு விமானப்படையின் ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தியதை தான் ஏற்றுக்கொள்வதாகவும், அதற்கான ஏற்பாடுகளை செய்தவர் முன்னணியின் தலைவரே எனவும் அவர் கூறியுள்ளார்.

குறித்த விமான பயணங்களுக்கான விலைப் பட்டியலையும ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பெயரிலேயே பதியப் பட்டுள்ளது. அதற்கு தனிபட்ட ரீதியில் நான் பொறுப்புக் கூற முடியாது.

எனவே அதற்கான கட்டணத்தை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தற்போதைய தலைவர் ஜனாதிபதி மற்றும் செயலாளர் உட்பட அனைவரும் தேர்தல் பிரசாரத்திற்கு பயன் படுத்தப்பட்ட ஹெலிகொப்டருக்கான செலவுகளை விமானப் படைக்கு செலுத்த வேண்டிய கடமைகள் உள்ளன.

சக வேட்பாளரிடையே முரணபாடு காணப்பட்ட போதிலும் தேர்தல் பிரசார செலவுகளை தவிர்பது நெறிமுறையற்றது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி பதவிக்காக போட்டியிடும் வேட்பாளர் ஒருவருக்கு ஹெலிகொப்டர் பலவற்றை பெற்றுக் கொள்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் தனது சக வேட்பாளருக்கு அவ்வாறான சந்தர்ப்பத்தினை வழங்காமல் இருப்பது சாதாரணமான ஒரு விடயமா என கேள்வி எழுப்பியிருந்தார்.

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஹெலிகொப்டர் அல்ல விமானமே பெற்றிருந்தாலும் அதற்கான கட்டணத்தை செலுத்துவதற்கு நிதி உதவிகள் வெளிநாடுகளால் வழங்கப்பட்டிருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# லொறியில் நசியுண்டு சகோதரர்கள் இருவர் பலி

## பதியதலாவையில் சம்பவம்

பதியதலாவை கடுபஹர கெஹெல்உல்ல பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 2 சகோதரர்களே லொறியால் மோதி கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், உதவிப் பொலிஸ் அத்தியட்சகருமான ருவன் குணசேகர குறிப்பிடுகின்றார்.

புதியதலாவை கடுபஹர கெஹெல்உல்ல பகுதியில் 2 தரப்பினரிடையே நேற்றிரவு மோதல் ஏற்பட்டுள்ளது.

இதன்போது ஒருதரப்பினர் தமது லொறியினால் மற்றைய தரப்பைச் சேர்ந்த மூவர் மீது மோதியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார்.

இதன் காரணமாக பலத்த காயங்களுக்குள்ளான மூவரில் ஒருவர் கவலைக்கிடமான நிலையில் மஹியங்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஏனைய இருவரும் பதியதலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் உயிரிழந்ததாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 28 மற்றும் 29 வயதுடைய இரண்டு சகோதரர்களே லொறியால் மோதி கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கொலைச்சம்பவம் தொடர்பில் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், ஏனைய சந்தேகநபர்களை கைதுசெய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மகிந்த அரசியலுக்குள் மீண்டும்வர புதிய தீர்மானம் மேற்கொள்ளவுள்ளார் நாமல்



முன்னாள் ஜனாதிபதியின் மகன் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ புதிய தீர்மானம் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளார் என குறிப்பிடப்படுகின்றது.

எதிர்வரும் காலங்களில் தனது புதிய தீர்மானத்தை செயற்படுத்தவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நாமல் ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைய நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் அரசியலுக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக குறிப்பிடப்படுகின்றது.

இது தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய சில உறுப்பினர்களுடன் இணைந்து பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

# கிழக்கு பாடசாலைகளின் முன்னேற்றத்துக்கு அதிபர்களின் முகாமைத்துவமே காரணம்

## கிழக்கு மாகாண கல்வி போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

உயர்ந்த மட்டத்தில் பெறுபேறுகளை பெறும் பாடசாலைகளாக நகர்ப்புறங்களை அண்டிய பாடசாலைகளே அதிகளவான பெறுபேறுகளை பெற்றிருக்கின்றன, அங்குதான் அனைத்து வளங்களும் நிறைந்து காணப்படுகின்றன என கிழக்கு மாகாண கல்வி, போக்குவரத்து அமைச்சர் சீ.தண்டாயுதபாணி தெரிவித்தார்.

கல்முனை சம்மாந்துறை மல்வத்தை சீர்பாததேவி வித்தியாலய திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அனைத்து வளங்களும் ஒரு பாடசாலைக்கு இருக்கும்போது இந்தப் பாடசாலையின் பெறுபேறுகள் அதிஉச்ச நிலையை அடையும். இங்குதான் பெறுபேறுகளுக்கும் வளங்களுக்குமிடையே தொடர்பு இருப்பதனை காணமுடியும்.

கிழக்கு மாகாணத்தினை பொறுத்தவரையில் தமிழ், முஸ்லிம், சிங்களப்பாடசாலைகள் என 17 கல்வி வலயங்களை உள்ளடக்கியதாக 1100 பாடசாலைகள் உள்ளன.

அதிகமான பாடசாலைகள் பின்தங்கிய பிரதேசங்களிலே காணப்படுகின்றன எனவும், சகல பாடசாலைகளையும் எடுத்து நோக்கினால் அனைத்து வளங்களும் இல்லாமல் இருந்தாலும் கல்வியின் பெறுபேறுகள் உச்ச நிலையை காட்டும் இதற்கான காரணம் அந்தப் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோரகளினது அயராத முயற்சியே எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்தப் பாடசாலையின் அதிபரின் சிறந்த முகாமைத்துவமே இதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# திறந்த வெளி மிருகக்காட்சிசாலை முதலாவதாக பின்னவலயில் திறப்பு

(கொழும்பு)

இலங்கையின் முதலாவது திறந்தவெளி மிருகக்காட்சிச்சாலை நாளை மறுதினம் பின்னவலயில் திறந்து வைக்கப்படவுள் ளது.

இலங்கையின் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் இந்த திறந்தவெளி மிருகக்காட்சிச்சாலை திறந்துவைக்கப்படவுள்ளது.

பின்னவலை யானைகள் சரணாலயத்திற்கு அண்மையில் அமைந்துள்ள 44 ஏக்கர் நிலப்பகுதியில் இத்திறந்தவெளி மிருகக்காட்சிச்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு சிறுத்தைகள், கரடிகள்- மான்கள்- முதலைகள் உட்பட பல விலங்குகளை கண்டு இரசிக்க முடியும்.

இத்திறந்தவெளி மிருகக்காட்சிச்சாலை நிர்மாணத்திற்கு 862 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதுடன், 488 மில்லியன் ரூபா திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மகிந்த – மைத்திரி தலைமையில் இரண்டு மே தினக் கூட்டம்

(கொழும்பு)



மே தினக் கூட்டம் தொடர்பில் எதிர்வரும் நாட்களில் பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக கட்சி தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த தலைமையில் ஒரு மே தினக் கூட்டமும் தற்போதைய ஜனாதிபதி மைத்திரி தலைமையில் மற்றுமொரு மே தினக் கூட்டமும் இடம்பெறவுள்ளதாக வெளியாகும் செய்திகள் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சிரேஸ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

ஒரு மே தினக் கூட்டம் நடாத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடாத்தப்படும் என தெரிவித்த அவர் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரே இடத்தில் மே தினம் நடத்துவதே சிறந்தது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வைத்தியர் பற்றாக்குறையால் நோயாளர்கள் பாதிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அடம்பன் பிரதேச வைத்தியசாலையில் வைத்தியர் இல்லாமையினால் தொடர்ந்தும் நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக அப்பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அடம்பன் பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரியாக வைத்தியர் ஆர்.திலீபன் மற்றும் மேலும் ஒரு வைத்தியர் கடமைக்காக நியமிக்கப்பட்டுள்ளார்.

எனினும் வைத்தியர் ஆர்.திலீபன் தனது கடமையை உரிய முறையில் மேற்கொள்ளுகின்ற போதும் மற்றைய வைத்தியர் உரிய முறையில் கடமையை மேற்கொள்ளாது இருப்பதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சியாக இவ்வாறான சம்பவங்கள் அடம்பன் பிரதேச வைத்தியசாலையில் இடம் பெறுவதாகவும், வைத்தியர்கள் இல்லாத நிலையில் நீண்ட நேரத்தின் பின்னர் நோயாளர் மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போது இறப்பு நிகழ்ந்த சம்பவங்களும் இடம் பெற்றுள்ளதாக அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.


தற்போது வைத்தியர் திலீபன் விடுமுறை நேரத்தில் கடமையில் இருக்க வேண்டிய மற்றைய வைத்தியர் அசமந்தப் போக்குடன் உள்ளதாகவும் இரவு நேரங்களில் வைத்தியசாலை விடுதியில் நிற்பது இல்லை எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் இரவு நேரங்களில் சிகிச்சைக்காக அடம்பன் பிரதேச வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்கள் நீண்ட நேரம வைத்தியசாலையில் வைத்தியருக்காக காத்து நிற்பதாகவும் இப்பிரச்சினை தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் மன்னார் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ரூபன் லெம்பேட்டிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.



கைதடி எருதிடல் அ.த.க.பாடசாலையில் சரஸ்வதி சிலை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா அண்மையில் பாடசாலை முதல்வர் ந. ஜெயரூபன் தலைமையில் நடைபெற்றது. கைதடி வடக்கைச் சேர்ந்த மு.நாகேந்திரம், மு.பரமேஸ்வரன் ஆகியோர் அடிக்கல் நாட்டுவதனைக் காணலாம். (90)

# உசன் சந்தியில் அமைக்கப்பட்ட பயணிகள் நிழற்குடை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கண்டி வீதி - உசன் சந்தியில் கொளுத்தும் வெயிலிலும், கொட்டும் மழையிலும் பயணிகள் பேருந்துக்காகக் காத்திருந்த நிலைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுள்ளது

நீண்ட காலமாகப் பயணிக்ள் நிழற் குடை இல்லாதிருந்த குறையை நிவர்த்தி செய்ய உசன் சிறி முருகன் விளையாட்டுக் கழகம் முன்வந்தது. அவர்களது செயற்றிட்டத்துக்கு உசன் ஐக்கிய மக்கள் ஒன்றியம் - கனடா ஊடாக அனுசரணை வழங்க முன்னாள் இ.போ.ச நடத்துநர், அமரர் வெற்றிவேலுவின் குடும்பத்தினர் உறுதி அளித்தனர்.

உசன் சிறிமுருகன் விளையாட்டுக் கழக உறுப்பினர்களின் முயற்சியில் கட்டப்பட்ட பேருந்து தரிப்பிட நிழற குடை கடந்த ஞாயிற்றுக்கிழமை மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. பயணிகள் நிழற்குடை அமைக்கப்பட்டதால் அப்பகுதி மக்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# ஆலய பெருஞ்சாந்தி விழா

வட்டு.மேற்கு வன்னியன் தோட்டம் சின்னக் கதிர்காம பெருஞ்சாந்தி பெருவிழா கிரியைகள் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

பிரதிஷ்ட பிரதம குரு சிவஸ்ரீ, சுந்தர ஸ்ரீரங்க நாதக்குருக்கள் தலைமையில் கிரியா நிகழ்வுகள் இடம்பெறும். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணி முதல் 6 மணி வரை எண்ணெய்க் காப்பு, பால்காப்பு சாத்தும் நிகழ்வும் இடம்பெறவுள்ளதோடு, 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மஹா கும்பாபிஷேகமும் இடம்பெறவுள்ளது.

மேற்படி மஹா கும்பாபிஷேக நிகழ்வில் 100 இற்கும் மேற்பட்ட குருமார் பங்குபற்றவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (92)

ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவரும் வாரமலர்.

வாரமலர் தினமுரசு

16.04.2015

நாளைய தினமுரசு வாரமலரில்...




- பிரதமரின் திட்டம் வெற்றி
- காணாமல் போனோர் கதி?
- ஆபத்தை நோக்குகிறது மனித இனம்
- இலக்கியப் பிதாமகனின் மானிடத்தின் குரல்



அஞ்சலோட்டத் திருவிழா

உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

## இலங்கை அணியின் முகாமையாளராக வுடஸ்

(கொழும்பு)

முன்னாள் முதல்தர கிரிக்கெட் வீரரும் போட்டி மத்தியஸ்தருமான ஜெரில் வுடஸ் இலங்கை அணியின் இந்திய மற்றும் பாகிஸ்தானுடனான தொடர்களுக்கு அணி முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை கிரிக்கெட்டின் புதிய இடைக்கால சபை மேற்கொண்டுவரும் மாற்றங்களில் ஒரு கட்டமாகவே வுடஸ் முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். ஏற்கனவே இலங்கை ஆண்கள் கிரிக்கெட் அணிக்கும் கடந்த புதன்கிழமை புதிய தேர்வுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டதோடு மகளிர் அணிக்கும் புதிய தேர்வுக் குழு அமைக்கப்பட்டது.

இதில் இலங்கை மகளிர் அணிக்கு முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் வினோதன் ஜோன் தலைமையில் தேர்வுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டதோடு ஆண்கள் அணிக்கு முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் கபில விஜேவர்தன தலைமையில் நான்கு பேர் கொண்ட தேர்வுக் குழு நியமிக்கப்பட்டது.

ஜரில் வுடஸின் பதவிக்காலம் வரும் மே 1 ஆம் திகதி முதல் ஆரம்பமாவதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. அவர் 19 வயதுக்கு கீழ் இலங்கை அணியின் முகாமையாளராக சிறப்பாக செயற்பட்டிருந்ததாக இலங்கை கிரிக்கெட் துணைத்தலைவர் குஷில் குணசேகர குறிப்பிட்டார். ஜெர்ரி சிறந்த ஒழுக்கமுடையவர். அணிக்கு மதிப்பை கொண்டுவரக்கூடியவர் என்ற வகையில் அது நிர்வாகத்திற்கு முக்கியமானதாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

இலங்கை அணி அடுத்து பாகிஸ்தானுக்கு எதிரான சர்வதேச போட்டியில் விளையாடவுள்ளது. இதற்கான போட்டி அட்டவணை இன்னும் உறுதி செய்யப்படாத நிலையில் இந்த தொடர் எதிர்வரும் யூன் நடுப்பகுதியில் இடம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## எவரெஸ்ட் சிகரத்தில் ஹியுஸின் சீருடை

மறைந்த பிலிப் ஹியுஸின் சீருடை, அவர் பயன்படுத்திய துடுப்பு உலகின் மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தின் உச்சிக்கு கொண்டு செல்லப்படவுள்ளது.

அவுஸ்ரேலிய அணி வீரர் பிலிப் ஹியுஸ், (வயது-25). உள்ளூர் ஷெபீல்ட் தொடரில் சியான் அபாட் வீசிய பவுன்சர் பந்து தாக்கியதில், தலை மற்றும் கழுத்தில் அடிபட்டு, கடந்த நவம்பர் 27 இல் மரணம் அடைந்தார்.

இவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், போட்டிகளில் பயன்படுத்திய துடுப்பு மற்றும் டெஸ்ட், ஒருநாள் போட்டிகளில் அணிந்த சீருடை, 8,848 அடி உயரம் கொண்ட எவரெஸ்ட் சிகரத்துக்கு கொண்டு செல்லப்படவுள்ளது.

எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் மலையேற்ற வீராங்கனை என்ற கின்னஸ் சாதனை (2012இல்). படைத்த சுரிம் ஷெர்பா, (நேபாளம்), இதற்காக தேர்வு செய்யப்பட்டார். இவரிடம் ஹியுசின் துடுப்பு, சீருடைகளை, அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபைத் தலைவர் எட்வர்ட்ஸ் வழங்கினார். வானிலை சரியாக இருக்கும் பட்சத்தில் நாளை மறுதினம் ஷெர்பா பயணத்தை ஆரம்பிப்பார். தனது பணியை முடித்து மே 31 இல் திரும்புவார் எனத் தெரிகிறது. இதற்கான ஏற்பாடுகளை நேபாள கிரிக்கெட் சங்கம் செய்து வருகிறது.

# ஹைதராபாத்திடம் வீழ்ந்தது பெங்களூர்



(பெங்களூர்)
டேவிட் வோர்னரின் அதிரடித் துடுப்

பாட்டத்தின் மூலம் ஹைதராபாத் அணி எட்டு விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது.

எட்டாவது ஐ.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகின்றது. இதில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் மற்றும் ஹைதராபாத் சண்ரைடர்ஸ் அணிகளுக்கிடையிலான ஆட்டம் நேற்று முன்தினம் இரவு பெங்களூரில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஹைதராபாத் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய பெங்களூர் அணி ஹோலி, டிவில்லியர்ஸ் ஆகியோரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக்கொண்டது. இறுதியில் பெங்களூர் அணி 19.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 166 ஓட்டங்களைப்பெற்றது. இதில் டிவில்லியர்ஸ் 46, ஹோலி 41, கிறிஸ் கெய்ல் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் போல்ட் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 167 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஹைதராபாத் அணி டேவிட் வோர்னரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் இலகுவாக வெற்றிபெற்றது. இறுதியில் ஹைதராபாத் அணி 17.2 ஓவர்கள் நிறைவில் இரு விக்கெட்டுக்களை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. இதில் டேவிட் வோர்னர் 57, தவான் 50, ராகுல் 44 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் போல்ட் பந்தை சிக்சருக்கு விரட்டிய பெங்களூர் அணியின் கெய்ல், ஐ.பி.எல்., வரலாற்றில் 200 சிக்சர்கள் (70 போட்டி) அடித்த முதல் வீரர் என்ற சாதனை படைத்தார். அதிக சிக்சர்கள் அடித்தவர்கள் பட்டியலில் இவரே முதலிடத்திலுள்ளார். இரண்டாவது இடத்தில் சென்னை அணியின் ரெய்னா (117 போட்டி, 134 சிக்சர்கள்) உள்ளார்.

### இன்றைய ஆட்டம்

PEPSI IPL

பஞ்சாப் எதிர் டில்லி

இடம் : புனே.

நேரம் : இரவு 8.00 மணி

## தங்கம் வெல்லும் இலக்குடன் மீண்டும் களம்




(நைரோபி)

கென்யாவைச் சேர்ந்த விவியன் செருய்யாட் 5000 மீற்றர் மரதன் போட்டியில் இரண்டு முறை உலகச் சம்பியன் பட்டம் வென்ற வீராங்கனை. இவர் வரும் ஆகஸ்ட் மாதம் சீனாவில் உள்ள பீஜிங் நகரில் நடைபெற இருக்கும் மரதன் ஓட்டத்தில் சம்பியன் பட்டத்தை வெல்ல முடியும் என்ற நம்பிக்கையிலுள்ளார்.

31 வயதாகும் செருய்யாட் மூன்று முறை ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்றுள்ளார். ஆனால் ஒருமுறைகூட தங்கப் பதக்கம் வென்றதில்லை. அவருடைய சாதனையில் தங்கம் எட்டாக்கனியாக உள்ளது. ஆனால், பிரேசிலில் அடுத்த ஆண்டு நடைபெறும் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்று தங்கம் வெல்ல வேண்டும் என்ற ஆர்வத்தில் உள்ளார்.

இதுகுறித்து அவர் கூறும்போது, நான் மீண்டும் உலகச் சம்பியன் பட்டத்தை வெல்ல விரும்புகிறேன். ஆனால் அதை நிறைவேற்ற கடுமையான பயிற்சி செய்ய வேண்டும். பயிற்சிக்கு திரும்பிய பின்னரும் இதுவரை பழைய வழக்கமான உடற்தகுதியை நான் பெறவில்லை.

நான் போட்டிக்கு தயாராகவில்லை என்பதால் உலக கிராஸ் போட்டியை தவறவிட்டேன். ஆனால், என்னுடைய வேகம் மற்றும் தாங்கும் ஆற்றல் ஆகியவற்றை பரிசோதித்து பார்ப்பதற்காக அமெரிக்காவில் மே30 ஆம் திகதி தொடங்கும் டைமண்ட் லீக் போட்டியில் பங்கேற்பேன் என்றார். குழந்தை பெறுவதற்காக மகப்பேறு விடுப்பில் சென்றிருந்த அவர் மீண்டும் தீவிர பயிற்சியில் இறங்கியுள்ளார்.



## மெய்ப்பட்டது நீண்ட நாள் கனவு

(புதுடில்லி)

ரென்னிஸ் அரங்கில் முதல்நிலை இடத்தை பிடிக்க வேண்டுமென கனவு கண்டேன். தற்போது இந்த இலக்கை எட்டியிருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது என, சானியா மிர்சா தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் நட்சத்திர டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா, (வயது-28). ஆரம்பத்தில் ஒற்றையர் போட்டிகளில் களமிறங்கிய இவர், பின் இரட்டையர் பிரிவுகளிலும் கால்பதித்தார். இந்த ஆண்டு சுவிட்சர்லாந்தின் மார்டினா ஹிங்கிசுடன் இணைந்து இரட்டையர் போட்டிகளில் பங்கேற்றார். 14 போட்டிகளில் இந்த ஜோடி தொடர்ச்சியாக வெற்றி பெற்றது.

பரிபாஸ் கோப்பை, மயாமி ஓப்பன் மற்றும் பேமிலி சர்கிள் தொடர் என, மூன்று கோப்பைகளை கைப்பற்றினர். இதன் மூலம் சர்வதேச ரென்னிஸ் இரட்டையர் தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்து வரலாறு படைத்தார் சானியா மிர்சா.

இதுகுறித்து சானியா கூறியது:

எனது ரென்னிஸ் வாழ்க்கையில் எப்படியும் உலகின் முதல் நிலை வீராங்கனையாக வந்துவிட வேண்டும் என்று கனவு கண்டேன். இதற்கான திறமை என்னிடம் இருந்ததால் இந்த இலக்கை அடைந்து விட முடியும் என நம்பினேன். இதன் ஒரு பகுதி தான், கடந்த ஐந்து வாரங்களாக சிறப்பான ரென்னிஸை வெளிப்படுத்தியது. தற்போது இலட்சியத்தை அடைந்தது மகிழ்ச்சி. முதலிடத்தைப் பெற்றது மிகவும் பெருமையாக உள்ளது. கனவு நனவானதை போல உணர்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இரட்டையர் பிரிவில் சானியா முதலிடம் பிடித்ததையடுத்து சச்சின், ஹோலி, பயஸ், பூபதி போன்றோர் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிரிக்கெட் சபையுடன் பணிபுரியும் ஆர்வத்தில் ஸ்ரோர்ஸ்



(லண்டன்)

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் ஸ்ரோர்ஸ், இங்கிலாந்து கிரிக்கெட் சபையில் பணிபுரிய தனது ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் சபையின் இயக்குநராக இருந்த போல் டவ்டன், உலகக்கோப்பை தோல்வி எதிரொலியால் கடந்த வாரம் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டார். தற்போது அந்த இடத்தில் பணியாற்ற முன்னாள் கப்டன் ஸ்ரோர்ஸ் ஆர்வம் தெரிவித்துள்ளார்.

போல் டவ்டன் பதவியேற்ற காலத்திலிருந்த இங்கிலாந்து அணியை விட தற்போது உள்ள அணி சிறந்தது. இது குறித்து ஒரு சிறிய சந்தேகம்கூட எழுப்ப முடியாது. எனவே, அனைத்து வீரர்களையும் விட செல்வாக்கு மிகுந்த வரும், அவர்களுடைய சிறந்த ஆட்டத்திற்கு பொறுப்புடையவரான நபரை இங்கிலாந்து கிரிக்கெட் சபை தேடுகிறது.

கிரிக்கெட் போட்டியை பெரிதாக நினைக்கும் யாரும், இந்தப் பதவியை மறுக்க முடியாது. இங்கிலாந்து கிரிக்கெட்டை முன்னோக்கி எடுத்துச்செல்ல எந்த ஒரு பதவியிலும் செயற்பட நான் மிகுந்த ஆர்வமாக இருக்கிறேன் என்று ஸ்ரோர்ஸ் தெரிவித்துள்ளார்.

ஸ்ரோர்ஸ் உடன் மைக்கல் வோகன், அலெக்ஸ் ஸ்ருவேர்ட் ஆகியோரின் பெயர்களும் இந்த பதவிக்கான போட்டியில் உள்ளனர்.

## பெய்லி மகிழ்ச்சி

(மும்பை)

மும்பை அணிக்கெதிரான ஆட்டம் எங்களுக்கு நிறைய பாடங்களைக் கற்றுத் தந்துள்ளது. ஒரு கட்டத்தில் ஹர்பஜன் சிங் அதிரடியாக ஆடி 24 பந்துகளில் 64 ஓட்டங்கள் சேர்த்தார். இருந்தாலும் வெற்றி பெற்றே தீருவோம் என நானும் எனது அணி வீரர்களும் மிகவும் நம்பிக்கையுடன் இருந்தோம். மும்பை அணிக்கெதிராக நாங்கள் பெற்றுக் கொண்ட வெற்றி எங்கள் ஒருங்கிணைந்த முயற்சிக்கு கிடைத்த வெற்றியாகவே பார்க்கின்றேன். இந்த வெற்றிக்கு எங்கள் அணி எல்லா வகையிலும் தகுதியானது என பஞ்சாப் அணியின் கப்டன் பெய்லி தெரிவித்துள்ளார்.



வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் 19 வயதுப் பிரிவு ஆண்கள் அணி மூன்றாமிடத்தையும், 19 வயதுப் பிரிவு பெண்கள் அணி முதலாமிடத்தையும் பிடித்துக் கொண்டன. அண்மையில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் முறையே மூன்றாம், முதலாமிடங்களைப் பிடித்துக் கொண்ட மகாஜனக் கல்லூரியின் கரப்பந்தாட்ட அணியைக் காணலாம். (93)

## உடற்பயிற்சி உபகரணங்கள் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு



(மன்னார்)

மன்னார் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கான வருடாந்த மெய் வல்லுநர் திறனாய்வு போட்டிகள் கடந்த வியாழக்கிழமை முதல் சனிக்கிழமை வரையிலான மூன்று தினங்கள் மன்னார் முருங்கன் ம.வி பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

இப்போட்டிகளில் மன்னார், நானாட்டான், முசலி கோட்டப் பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இப்போட்டி நிகழ்வின் இறுதி நாளில் வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து 2 இலட்சம் ரூபா நிதியில் பெற்றுக்கொள்ளப்பட்ட உடற்பயிற்சி உபகரணங்களை மன்னார் மாவட்டத்தில் உள்ள 45 உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு வழங்கி வைத்தார்.

மன்னார் மாவட்ட வரலாற்றில் முதல் தடவையாக எவரும் செய்யாத ஒரு திட்டத்தை செயற்படுத்தியமையையிட்டு மன்னார் மாவட்ட கல்விச் சமூகம் வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீனுக்கு பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடமராட்சி வலய மட்ட கரப்பந்து மெதடிஸ் இரு பிரிவுகளில் சம்பியன்

(நெல்லியடி)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை அணி இரு பிரிவுகளில் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டி கடந்த சனிக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 15, 17, 19 வயதுப் பிரிவு பெண்கள் அணி மோதிக்கொண்டன. 15 வயதுப் பிரிவு போட்டியில் முதலாமிடத்தை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும், மூன்றாமிடத்தை வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அணியும் பிடித்துக் கொண்டன.

17 வயதுப் பிரிவுப் போட்டியில் முதலாமிடத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும், இரண்டாமிடத்தை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி அணியும் மூன்றாமிடத்தை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணியும் பிடித்துக் கொண்டன.

19 வயதுப் பிரிவுப் போட்டியில் முதலாமிடத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை அணியும், இரண்டாமிடத்தை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை வல்வை மகளிர் கல்லூரி அணியும் பிடித்துக் கொண்டன. (93)

## விளையாட்டுச் செய்திகள்

# மணற்காடு றோ.க. வல்லேயில் சம்பியன்

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான பெண் எல்லே போட்டியில் மணற்காடு றோமன் கத்தோலிக்க வித்தியாலய அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டி கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் மணற்காடு றோமன் கத்தோலிக்கப் பாட சாலை அணியும் நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் மோதின.

50 பந்துகளைக் கொண்ட இப்போட்டியில் மணற்காடு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை அணி 10-09 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்பிரிவில் மூன்றாமிடத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை அணி பிடித்துக் கொண்டது. (93)

# நடப்பு ஐ.பி.எஸ். தொடரில் சாதிப்போம்

(பெங்களூர்)

ஐ.பி.எல். ருவெ ரி-20 கிண்ணத்தைக் கைப்பற்றிக் கெ ளும் வகையில் எமது டாடு அமையும். கடந்த ஏழு பே த் தொடர்களிலும் பெரும் எதிர்பார்ப்பை இரசிகர்களிடையே ஏற்படுத்தி எங்களால் கிண்ணத்தை வெல்ல யவில்லை. இருப்பினும் இந்த ஆ டு கிண்ணத்தை வெல்ல முனைப்பு போராடுவோம் என பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியின் அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல் தெரிவித்துள்ளார்.

நடப்புத் தொடரில் கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்ற முனைப்புடன் செயற்பட்டு வருகின்றோம். டரன் சமி, தினேஸ் கார்த்திக் ஆகியோர் எங்கள் அணிக்கு புதிய வரவாக இருப்பது மகிழ்ச்சி. மைக்கல் ஸ்ரார்க் மூன்று அல்லது நான்கு போட்டிகளிற்குப் பின்னர் எங்கள் அணியுடன் இணைந்து கொள்வார் என்ற நம்பிக்கை இருக்கிறது. இதன் பின்னர் எங்கள் அணி பந்து வீச்சில் பெரும் பலமடைந்துவிடும். தொடர் வெற்றிகளைக் குவிப்பதற்கும் வழிவகுக்கும். ஹோலி சிறந்த கப்டன். அவரின் கீழ் விளையாடுவது புதிய அனுபவமாக உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கருகம்பனை தமிழ்மன்ற கரப்பந்து இறுதியில் ஆவரங்கால், இளவாலை மத்தி

(கருகம்பனை)

கருகம்பனை தமிழ் மன்றம் நடாத்திய ஆண்டு நிறைவு கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு ஆவரங்கால் இந்து இளைஞர் மற்றும் இளவாலை மத்தி அணிகள் முன்னேறியுள்ளன.

தெல்லிப்பளை கருகம்பனை தமிழ் மன்றத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டும் புத்தாண்டை முன்னிட்டும் அமரர் கேசவமூர்த்தி ஞாபகார்த்தமாக கருகம்பனை தமிழ் மன்றம் யாழ். மாவட்ட ரீதியில் மாபெரும் கரப்பந்தாட்டத் தொடரை நடாத்தி வருகின்றது.

இப்போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் இரவு தமிழ் மன்ற மைதானத்தில் நடைபெற்றன.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும் சண்டிலிப்பாய் வசந்தசிறி அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 3-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்தி அணியும் இளவாலை மத்தி அணியும் மோதின. இப்போட்டியில் இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முட்டி மோதிக் கொண்டன. இறுதி வரை பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இளவாலை மத்தி 3-2 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. (93)

# கரவெட்டி பிரதேச மட்ட கபடி; மைக்கல், டைமன்ஸ் சம்பியன்



(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச அணிகளுக்கிடையிலான கபடிப் போட்டியில் மைக்கல் மற்றும் டைமன்ஸ் அணிகள் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டன.


கரவெட்டி பிரதேசத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில் ஆண், பெண்களுக்கான கபடிப் போட்டி நேற்று முன்தினம் கம்பர்மலை யங்கமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை மைக்கல் அணியும், இரண்டாமிடத்தை யங்கமன்ஸ் அணியும் பிடித்துக் கொண்ட அதேவேளை, பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை டைமன்ஸ் அணியும் இரண்டாமிடத்தை யங்கமன்ஸ் அணியும் பிடித்துக்கொண்டன. (90)

# பகைமையை வளர்ப்பது இலக்கியப் பண்பாகாது

– ஜெயகாந்தன் பதில்களிலிருந்து.



**பல வருடங்கள் முன்பு, சிங்கத்தின் குகையிலேயே சந்திப்பது போல பெரியாரை அவரின் மேடையிலேயே விமர்சித்தீர்கள். சிறப்பாக உங்களுக்கு ஒரு following உருவாகக் காரணமாய் இருந்தது மட்டுமில்லாமல், பல பேரை சுய விமர்சனம் செய்து திரும்பிப் பார்த்துக் கொள்ள உதவியது அந்தப் பேச்சு. யார் கட்டளையையும் ஏற்று எழுத முடியாது என்று அவரிடம் சொன்னீர்கள். ஆனால் பல வருடங்கள் கழித்து சங்கராசாரியாரின் கட்டளையை ஏற்று எழுதுவதாகத் தெரிவித்து, 'ஜய ஜய சங்கர' எழுதினீர்கள். ஆக பெரியாரிடம் நீங்கள் சொன்னது 'உங்கள் கட்டளையை ஏற்றுக் கொள்ள முடியாது' என்பதாகத் தான். இல்லையா?**

**ஜெயகாந்தன் :** ஆமாம். கட்டளையை ஏற்றுக் கொள்ள முடியாத போது தான் அப்படிச் சொல்கிறோம். நம்முடைய மனப் போக்கிற்கு ஏற்ப அவர்கள் கட்டளை அமையுமாயின் அதை யோசனையாகவே ஏற்றுக் கொள்கிறோம். நம்முடைய மனப் போக்கிற்கு உகந்ததாய் கட்டளை அமையாவிட்டால், உன் கட்டளைக்குப் பணிய மாட்டோம் என்று மறுத்து விடுகிறோம். இது தான் நான் பெரியாரிடம் (மறுத்துச்) சொன்னது.

மக்களுக்குப் பிடிக்கிறது என்பதற்காக மோசமான விஷயங்களை எழுதக் கூடாது. நமக்கு ஒரு பொறுப்பு இருக்கிறது. மக்களுடைய ஆத்ம அபிவிருத்திக்காக நீங்கள் எழுத வேண்டும் என்று சங்கராச்சாரியார் சொன்னது என்னுடைய கொள்கை. என்னுடைய கொள்கை என்று சொல்வதை விட, ஒரு பெரியவர் மேலே பாரத்தைப் போட்டு சொன்னால் அதன் பலன் நன்றாய் இருக்கும். இன்னும் சொல்லப் போனால், மற்றவர்கள் கட்டளையை ஏற்று எழுதியவனே நான். எனக்குக் கட்டளை இட்டவர்கள் கம்யூனிஸ்டுகளாய் இருந்தார்கள்.

நமக்குப் பிடித்தவர்கள் நமக்குப் பிடித்தமாதிரி கட்டளை இட்டால் நாம் ஏற்றுக் கொள்கிறோம். பெரியாரின் கட்டளை ரொம்ப முரட்டுத் தனமாய் இருந்தது. ராமாயணம், மகாபாரதம் எல்லாத்தையும் கொளுத்தாமல் நீ என்ன எழுதிக் கொண்டிருக்கிறாய் என்று அவர் கேட்டது எனக்கு உகந்ததாய் இல்லை என்பதால் நான் பதில் சொல்ல வேண்டியதாயிற்று. பிரசங்கத்தை ஆரம்பிக்கும் போதே "எல்லோரையும் கேள்வி கேட்கிற தைரியத்தைக் கொடுத்தவர் நீங்கள் தான். உங்களிடமே கேள்வி கேட்டுத் தொடங்குகிறேன்." என்று தான் ஆரம்பித்தேன். அவரை விமர்சனம் செய்து அவரிடமே பாராட்டுப் பெற்றேன்.

**பெரியாருடைய பிராமணீய எதிர்ப்பு இயக்கத்திற்கு ஒரு நியாயம் இருந்தது - ஒரு பத்து சதவீதமாவது இருந்தது - என்று நீங்கள் ஒப்புக் கொள்வீர்களா?**

**ஜெயகாந்தன் :** அந்த நியாயத்தை நான் பகிர்ந்து கொள்ளவேமாட்டேன். பிராமண ஆதிக்கமாய் இருந்தால் என்ன, சூத்திர ஆதிக்கமாய் இருந்தால் என்ன? இன்றைக்கு தமிழ் நாட்டில் நடப்பது சூத்திரர்களின் ஆதிக்கம் என்று சொன்னால் ஒப்புக் கொள்வீர்களா?

ஆதிக்கம் தான் எதிரியே தவிர யாருடைய ஆதிக்கம் என்பது பொருட்டல்ல. ஆதிக்கத்தை எதிர்ப்பதன் மூலம் தான் ஜனநாயகத் தன்மை வளரும். இந்த ஆதிக்கத்திற்குப் பதிலாக, அந்த ஆதிக்கம் என்று சொல்வது மாற்றாகாது. Harmonisation தான் முக்கியம். பகைமையை வளர்ப்பது இலக்கியப் பண்பாகாது.

**தமிழ் தெய்வீக மொழி தெய்வத்தன்மை வாய்ந்தது என்பது பற்றி...**

**ஜெயகாந்தன் :** அப்படித்தான் பாரதியார் என்னிடம் சொல்லியிருக்கிறார்.
"ஆதி சிவன் பெற்று விட்டான்
- என்னை ஆரிய மைந்தன்
அகத்தியனென்றோர் வேதியுன் கண்டு
மகிழ்ந்தே - நிறை மேவும் இலக்கணம்
செய்து கொடுத்தான்." நான் கடவுளை நம்பினதே பாரதியாரால் தான். அவர் தோள் மேலே கையைப் போட்டு : "தமிழா தெய்வத்தை நம்பு" என்று சொல்கிற பொழுது, தெய்வீகம் என்பது மூட நம்பிக்கை அல்ல. அது நம்பிக்கையின் வெளிப்பாடு.

**அது மூடநம்பிக்கையாவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றனவே...**

**ஜெயகாந்தன் :** எது தான் மூட நம்பிக்கையாகாது?. சிகரெட் பிடிக்கக் கூடாது என்று கூட ஒரு மூட நம்பிக்கை உள்ளது. சிகரெட் பிடிப்பவர்களுக்கெல்லாம் கான்ஸர் வருவதில்லையே. விஞ்ஞானம் சார்ந்து கூட மூட நம்பிக்கை உண்டு.

**இந்தியாவில் எப்படி கம்யூனிஸ் அமைப்பு வரும் என்று நம்புகிறீர்கள்? அல்லது எதிர்பார்க்கிறீர்கள்?**

**ஜெயகாந்தன் :** இந்தியாவில் நல்லதும் கெட்டதும் ஜனநாயக வழியில் தான் வரும். ஜனநாயகத்துக்கு முரணாக இந்தியா ஒரு நாள் கூட ஜீவிக்காது. அதற்கு நாங்கள் முயற்சி செய்த எமர்ஜென்ஸி ஒரு உதாரணம்.

**சிறுகதை உங்களுக்குப் பிடித்த உருவம் என்றீர்கள்... புதுமைப்பித்தனின் கதைகள் பற்றி....**

**ஜெயகாந்தன் :** எனக்கு அப்போது நல்ல நண்பராய் இருந்தவர் தமிழ் ஒளி. எனக்கு சிறுகதையில் இருந்த ஆர்வத்தைப் பார்த்து விட்டு, புதுமைப்பித்தனைப் படி என்றார். அவருடைய சொற்செட்டு. மிகக் குறைந்த வார்த்தைகள். இன்னும் கொஞ்சம் எழுதுவாரா என்று நினைக்கும் போது கதை முடிந்து

---

# சுந்தர ராமசாமியை விட நகுலன்தான் மிக · முக்கியமான · எழுத்தாளர் 3

எம்.டி. முத்துக்குமாரசாமி -



அறிவு இல்லாமல் மொழியில் எப்படி வேலை செய்வது என்பது பெரிய சவால். ஏனென்றால் நீங்கள் இரண்டு வார்த்தைகள் சேர்த்தீர்களென்றால் அதற்கு ஏதாவது ஓர் அர்த்தம் வந்து விடுகிறது.

இலக்கியம் என்பது தனிமனித சார்ந்த வெளிப்பாடாக இருந்தாலும் அது ஒரு வரலாற்று கால கட்டத்தினுடைய வெளிப்பாடாகவும் இருக்கிறது. அந்த வரலாற்று காலகட்டத்தினுடைய வெளிப்பாடாக அது இருக்கும் போதுதான் ஒரு சமூகத்தின் பதற்றத்தின் மையமாக அது மாறுகிறது. அப்படி பதற்றத்தின் மையத்தையே கண்டுபிடிக்க முடியவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள், ஒரு நூறுபேர் எழுதுகின்றவர்களிடம் அந்தக் காலத்தின் தாக்கமே இல்லை என்று வைத்துக் கொண்டால் எங்கோ தவறு நடக்கிறது என்றுதான் அர்த்தம்.

ஓர் எழுத்தாளனுடைய வாழ்க்கையை படைப்பில் பார்க்கக்கூடாது என்பது அறம் சார்ந்த பார்வை. சொந்த வாழ்க்கையைக் காட்டி அவனது படைப்பின் மதிப்பை நீங்கள் இறக்கிவிட முடியும். படைப்பு மனோநிலையில் கூடிய மனோநிலை இருக்கிறதே அது தினசரி மனோநிலை அல்ல; இது எழுதக்கூடிய எல்லா ஆட்களுக்கும் தெரியக்கூடிய ஒன்றுதான்.

பிரம்மராஜனைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். "மீட்சி" பத்திரிகையில் "எதிர்கவிதை" என்ற ஒன்றை அவர் உருவாக்க முயற்சி செய்து கொண்டிருந்தார். ஆத்மாநாமை அதற்கு முன்னோடியாகவும் அதன் தொடர்ச்சியாக அவர் தன்னையும் முன்வைத்தார். அப்போது எஸ்ரா பவுண்ட், டி.எஸ். எலியட் இவர்களின் தாக்கம் நிறைந்த கவிதைகளை அவர் எழுதிக் கொண்டிருந்தார். அதில் எஸ்ரா பவுண்டின் தாக்கம் மிக அதிகமாக இருந்ததாக நான் நினைக்கிறேன். அந்தக் குறிப்பிட்ட கவிதைகளை அணுக்கமாக என்னால் நினைக்க முடியவில்லை. அதில் வரும் வாக்கிய அமைப்புகள், பதங்கள், சொல்லப்படுகின்ற குறிப்புகள் எல்லாம் செய்யப்பட்டவையாக என் மனதிற்குப்பட்டது.

அவரது "கடல் பற்றிய கவிதை"களில் வரும் "மகளுக்காக" கவிதை இருக்கிறதே அது ஒரு அற்புதமான கவிதை என்றே நினைக்கிறேன். 80-களில் பிரேம் ரமேஷ் கவிதைகளின் மீது எனக்கு பெரிய ஈர்ப்பு இருந்தது. இன்று அந்த ஈர்ப்பு, இல்லை. இதுபோல நிறைய மாற்றங்கள் நடந்திருக்கின்றன. பிரம்மராஜனைப் பொறுத்தமட்டில் அவர் தமிழின் முக்கியமான கவிஞர் என்று தான் நான் நினைக்கிறேன். ஆனால் நகுலனுடைய கவிதைகள் எனக்கு எப்போதுமே ஈர்ப்பானதாக இருந்துகொண்டேதான் இருக்கிறது.

தமிழின் முக்கியமான ஓர் எழுத்தாளனாக நகுலனைத்தான் நான் குறிப்பிடுவேன். புதுமைப்பித்தன், மௌனி என்று நாம் வழக்கமாக சொல்லுவோமே அவர்களைவிட முக்கியமான எழுத்தாளர் நகுலன்தான். சுந்தர ராமசாமியைவிட நகுலன்தான் மிக முக்கியமான எழுத்தாளர்.

தமிழில் நவீன இலக்கிய இயக்கம் எங்கு ஆரம்பிக்கிறது என்று ஆராய்ந்தால் அது நகுலனிடமிருந்துதான் ஆரம்பிக்கிறது. அவரின் முதல் நாவலான "நிழல்கள்" மட்டும்தான் எனக்குப் பிடிக்காது. மற்றபடி அவரின் நாய்கள், நிழல்கள், இன்று, நினைவுப்பாதை, நவீனன் டைரி போன்ற படைப்புகள் பூராவும் மிகப் பிரமாதமானவை. நகுலன் இறந்த செய்தியை நான் கேள்விப்பட்டபோது தமிழில் ஒரு பெரிய சகாப்தம் ஒன்று முடிந்துவிட்டது என்று நினைத்துக்கொண்டேன்.

நகுலன் மாதிரியான ஒரு ஆளுமை, நவீன சிந்தனையுள்ள ஒரு சமூகத்தில் இருந்திருந்தால் கொண்டாடி இருப்பார்கள். நமது சமூகம் நகுலனுக்கு உண்டான உரிய மரியாதையையும், அந்தஸ்தையும் தரவில்லை என்றே நினைக்கிறேன். ஒரு இலக்கியப் படைப்பாளிக்கும் ஒரு வரலாற்று காலகட்டத்திற்கும் இடையில் ஒரு சூட்சுமமான ஓர் உறவு இருக்கிறது. அந்த உறவுக்கு யார் அதீத விழிப்புடன் இருக்கிறானோ அவன் மிகப் பெரிய கலைஞனாகிறான் என்பது என்னுடைய தீர்மானமான அபிப்பிராயம். நகுலனுடைய காலகட்டத்தில் என்ன நடந்தது என்று பார்த்தால், திராவிட இயக்கத்தின் பெரும் எழுச்சி ஏற்படுகிறது. பிராமணர்கள் விளிம்புநிலை மனிதர்களாகிறார். அந்த நினைவுடன் நகுலன் ஒரு பிராமண மனமாகவும், திராவிட இயக்கத்தினால் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட ஒரு மனமாகவும் அப்புறம் காதலில் தோல்வியுற்ற அந்நியமான மனமாகவும் தம்முடைய உறவுகள் என்ன என்று தெரியாத ஒரு மனமாகவும் நகுலனின் எழுத்து மனம் வெளிப்படுகிறது.

அப்போது பைத்தியகார ஓர் மனோநிலை, பன்முகப்பட்ட ஓர் ஆளுமை என்ன எழுத வேண்டும் என்று தெரியாமல் எழுதுவது, கற்பனையான காதலில் வாழ்வது என்றெல்லாம் நடக்கிறது.

திராவிட இயக்கங்களின் மிகப்பெரிய வளர்ச்சிக்கும் நகுலன் விளிம்பு நிலைக்குள் தள்ளப்பட்ட நிலைக்கும் இடையில் இருக்கின்ற உறவைத்தான் நான் நவீனமனம் என்கிறேன். அன்றைக்கு இவருடைய சமகாலத்திய எழுத்தாளர்களிடம் அது இல்லை. அதனால் தான் நகுலனை மேஜர் ரைட்டர் என்கிறேன்.

விடும். தமிழில் நல்ல சிறுகதை-களை நிறைய எழுதியிருப்பவர் புதுமைப்பித்தன்.

**மௌனியின் 'மாறுதல்' மிகப் பிடித்த கதை என்று ஒரு முறை நீங்கள் சொன்னீர்கள்...**

**ஜெயகாந்தன் :** அப்போதிருந்த மன நிலையைச் சொன்னேன். கொட்டாவி விடும்போது என்னைப் படம் எடுத்து விட்டு எப்போதும் கொட்டாவி விட்டுக் கொண்டிருப்பேன் என்று நினைத்தால் தவறு. மௌனியின் தமிழ் நடை பலருக்கு ஆயாசம் தரும் அதனாலேயே அது எனக்குப் பிடிக்கும். அது ஆங்கில பாதிப்புக்கு ஆட்பட்ட ஒரு புதிய உரை நடை. அதை இன்னும் மேற்கொண்டு வளர்க்கலாம்.

**மௌனி ஒரு முறை தமிழ் எனக்குப் போதுமான மொழி இல்லை அதனால் எழுதுவதை நிறுத்தி விட்டேன் என்று சொன்னார்.**

**ஜெயகாந்தன் :** நல்ல வேளை. தமிழ் பிழைத்தது. ஆனால் எழுது கிற வரையில் சிறப்பாகத் தான் இருக்கிறது.


**ஏன் எழுதவில்லை என்பதற்கு நான் எழுதிய எல்லாவற்றையும் படித்திருக்கிறீர்களா என்று ஒரு முறை சொல்லியிருக்கிறீர்கள். எல்லாவற்றையும் படித்த முருகானந்தம், குப்புசாமி போன்ற நண்பர்களுக்காக ஏன் எழுதக் கூடாது?**

**ஜெயகாந்தன் :** அவர்கள் எதிர்பார்க்கிறார்களே தவிர, என்னை எழுது எழுது என்று நச்சரிக்க மாட்டார்கள். படிக்காத வர்கள் தான் ஏன் எழுதவில்லை என்று கேட்கிறார்கள். நான் எப்படி எழுதி ஒரு நிறைவு பெற்றிருக்கி றேனோ அது போல் என்னை முழுமையாகப் படித்தவர்களும் ஒரு நிறைவு பெற்றிருக்கிறார்கள். எதிர்பார்ப்பது நல்லது தான். பாரதியார் இன்னும் எழுதவில்லை என்று யாருக்காவது தோன்றுகி றதா? எனக்குத் தோன்றவில்லை. இன்னும் கொஞ்ச நாள் வாழ்ந்தி ருந்தால், இன்னும் கொஞ்சம் கஷ்டப் பட்டிருப்பார். இன்னும் எழுதியிருந்தால் பாரதியார் என்ற சொரூபம் கலைந்திருக்கலாமோ என்று கூடத் தோன்றுகிறது. எனக்கும் கூட ஆசை இருக்கிறது. ஆனால் ஆசை மட்டும் போதாது.

**நன்றி ஜெயகாந்தன் அவர்களே!-- நீங்கள் ஏதாவது மக்களுக்குச் சொல்ல விரும்பினால்...**

**ஜெயகாந்தன் :** பாரதியாரின் புகழைப் பரப்பிக் கொண்டேயிருங் கள் புதிய புதிய படைப்பாளி களை நீங்கள் சந்திப்பீர்கள்.

# கேள்வி கேக்காமல் நல்லரசியல் இல்லை



## வெளிவாயன் வேலாயுதன் சொல்லுவது....

சில மாதங்களுக்கு முன்னுக்கு சுரேஸ் பிரேமச்சந்திரன் கூட்டமைப்பைப் பதிவு செய்ய சனங்களை அழுத்தம் குடுக்குமாறு கேட்டிருந்தார். பிள்ளையைக் கிள்ளி விடுகிற பத்திரிகை அதைத் தலைப்புச் செய்தியாய்ப் போட்டு, பிறகு தமிழரசுக் கட்சியன்ரை பதிலையும் வாங்கிப் போட்டு தொட்டிலையும் ஆட்டி விட்டதெண்டு இப்பத்தியிலை எழுதினனான்.

சற்றும் மனந் தளராத விக்கிரமாதித்தன் போலை சுரேசும் தமிழரசு வேதாளத்தை விடுறேல்லையெண்டு மல்லுக் கட்டிக் கொண்டுதான் நிக்கிறார். வேதாளமும் முருங்கையிலை ஏறாமல் இருக்க மாட்டன் எண்டு நிக்குது.

மதியாதார் முத்தம் மதித்தொரு கால் மிதியாமை கோடி பெறும் எண்டு அந்தக் காலத்திலேயே ஔவையார் சொல்லிப் போட்டார். வேண்டாப் பெண்டாட்டி மனநிலையிலை தமிழரசுக் கட்சி அணுகிறதும், சாகிறன் பந்தயம் பிடி எண்டு கேக்கிற கோதாவிலை சுரேசும் செயற்படுகிறதும் சனங்களுக்கு நல்ல சுவாரஸ்யத்தைக் குடுக்குதுதான்.

உந்த ஊடக இளசுகளின்ரை மையத்துக்கும் இப்பிடியான சண்டையள் நடந்தால்தான் சுடச் சுடச் செய்தி கிடைக்கும்.

சனங்கள் எப்பவும் ஊமையள்தான். ஆராவது முன்னுக்குப் போய் உசுப்பி விட்டால்தான் உண்டு. சனங்களைப் பொறுத்த வரை அதுகள் 76லிலை தமிழீழம் எண்டு சொன்னதுக்கும் வாக்களிச்சதுகள். பிறகு இந்தியன் ஆமியை அனுப்ப வச்ச பிரேமதாசவுக்கும் வாக்களிச்சதுகள்.

செயற்திறன் வாய்ந்த தலைவர் எண்டு பிரபாகரன் புகழாரம் சூட்ட, கூட்டமைப்பு சாமரை வீச, தேர்தலைப் புறக்கணிச்சு மகிந்த ராஜபக்ஷவை ஆட்சிபீடம் ஏற்ற வாக்களிச்சதும் இதே சனங்கள்தான்.

மகிந்தவை வீட்டுக்கு அனுப்பி, கடந்த காலத்தில் வன்கொடுமைகள் பல செய்த யு.என்.பி.– மைத்திரி ஆட்சியைக் கொண்டு வாறத்துக்கு வாக்களிச்சதும் இதே சனங்கள்தான்.

ஆக, சனங்கள் எந்தக் கேள்வியும் கேட்காமல் விழுந்த பாட்டுக்கு விளக்குமாத்துக்கு வாக்களிக்கிற அரசியல் ஞானசூனியங்களாகவே எல்லாராலையும் வளர்த்தெடுக்கப் பட்டிருக்கினை.

அந்தச் சனங்கள் கேள்வி கேக்க வெளிக்கிட்டால் மட்டுந்தான் நல்லரசியல் தோன்றும். அதுவரைக்கும் விக்கிரமாதித்தன் போலை அவ்வப்போது சுரேஸ் ஊடகங்களிலை தலை காட்டவும், தமிழரசு சார்பிலை ஆரேனும் பதில் சொல்லவும், அதைப் பத்திரிகைப் பக்கங்களிலை அரைச்ச மாவைத் திருப்பி அரைக்கவும், அதையே சலிக்காமல் சனங்கள் பார்க்கவுமான நிகழ்வு தொடரும்.

ஒருத்தர் என்னட்டைக் கேட்டார் "உவன் சுரேசுக்கு வேலையில்லையோ? நெஞ்சிலை திடம் இல்லையோ? பிச்சையெடுத்துக் கொண்டு நிக்கிறான்" எண்டு. நான் சொன்னன் "அப்பிடியில்லை அண்ணை. இவை கட்சியள் சேர்ந்து ஒரு ஒப்பந்தம் செய்திருக்கினை. அதன்படி கூட்டமைப்பைக் கட்சியாய் பதிவு செய்ய வேணும். அதைத்தான் இவர் கேக்கிறார். தமிழரசுக் கட்சிக்காரர் பின்னடிக்கினை. அதுதான் அவரும் தொடர்ந்து கேட்டுக் கொண்டு நிக்கிறார். மற்றவை பாறாங்கல்லை விழுங்கினவை மாதிரி அம்மிக் கொண்டு நிக்கினை" எண்டு.

அந்நாள் கேட்ட இரண்டாவது கேள்விக்கு என்னாலை விடை சொல்லேலாமல்தான் கிடக்குது.

ஈ.பி.ஆர்.எல்.எப். எண்ட பெரிய இயக்கத்தை ஆர் கட்டி வளர்த்தது எண்ட வாதப் பிரதி வாதங்களுக்கு அப்பாலை அந்தக் கட்சி கிராமங்களிலை நன்கு வேலை செய்த ஒரு அரசியல் இயக்கம். அதின்ரை இராணுவப் பிரிவின்ரை தலைவர்தான் டக்ளஸ் தேவானந்தா. ஈ.பி.டி.பி. எண்ட கட்சியை ஆரம்பிச்சு, சிங்கள அரசாங்களோடை இணக்கமாக நடந்து கொண்டு, வடபுலத்து மக்களின்ரை வாழ்வை நினைச்சுப் பாக்கேலாத அளவுக்குக் கட்டியெழுப்பி இருக்குது மனிசன்.

அதைப் போலை ரெலோவும், புளொட்டும் வேரோடிய விடுதலை இயக்கங்கள். தமக்கெண்டு செல்வாக்கான பிரதேசங்கள் பலவற்றை வச்சிருக்கிற இயக்கங்கள். அடுத்த பக்கத்திலை நீண்ட அரசியல் பின்னணியுடைய தமிழர் விடுதலைக் கூட்டணி இருக்குது. இடதுசாரியள் இருக்கினை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலை இணைஞ்சிருக்கிற ஏனைய கட்சியளே! தமிழரசுக் கட்சியின்ரை சீலைத் தலைப்பைப் பிடிச்சுக் கொண்டு எத்தினை நாளைக்குக் கெஞ்சப் போறியள்? மேடையளிலை மானரோசம் பற்றிப் பேசிற நீங்களெல்லாம் வெக்கம், மானம், ரோசம், சூடு, சொறணை எல்லாத்தையும் விட்டிட்டு எத்தினை நாளைக்கு தமிழரசுக் கட்சியிட்டை மடிப்பிச்சை கேப்பீங்கள்? புது வரியத்திலையெண்டாலும் புதிதாச் சிந்தியுங்கோ.

சொகுசு வாழ்க்கைக் கனவை விட்டிட்டு, தமிழரசுக் கொல்லையிலையே சுத்திக் கொண்டிருக் கிறதை விட்டிட்டு, நீங்கள் எல்லாரும் உங்களுக்குள்ளை ஒற்றுமைப்பட வேணும். அடம்பன் கொடியும் திரண்டால்தான் மிடுக்கு. புது அரசியல் கூட்டணியாய் நீங்கள் நிமிர்ந்தால் தமிழரசுக் கட்சியின்ரை சாயம் வெளுக்கும்.

60 வருச ஏமாற்றும் அரசியலை நன்கு அறிஞ்ச நீங்கள் எல்லாரும், ஒரு நல்ல நோக்கத்தோடை சனங்களுக்காகப் போராட வெளிக் கிட்டு அதன்திசைவழி மாறிய நிலையில் இந்தச் சனங்களின்ரை நன்மைக்காக ஏன் ஒன்றுபடக் கூடாது?

செய்வீங்களா? செய்யாட்டால் வரலாற்றின் பழியோடுதான் உங்கடை அந்திம காலம் கழியும் எண்டதை யும் பதிய விரும்பிறன் பாருங்கோ!

# விபரீத ஆசை!





இ.எல்.ஜேம்ஸ் என்பவர் எழுதிய நாவலை தழுவி எடுக்கப்பட்ட, Fifty Shades of Grey என்ற படம், ஹொலிவுட்டில் வெளியாகி, சக்கை போடு போடுகிறது. இதனால், இப்படத்தின் கதாநாயகி டாகோட்டா ஜோன்சன், பிரபலமாகி விட்டார். ஆனால், அவரை விட, அவர் சமீபத்தில் அளித்த பேட்டி தான், மிகவும் பிரபலமாகி விட்டது.

"எனக்கு வித விதமான உள்ளாடைகள் அணிவதில் ரொம்ப ஆசை. அதனால், அழகான உள்ளாடைகளை பார்த்தால், உடனே திருடி விடுவேன். இப்படத்தில் நடித்தபோது, சக நடிகைகளின் உள்ளாடைகளை திருடி, ரகசியமாக அணிந்து, அழகு பார்த்தேன். அது, ஒரு த்ரில்லான அனுபவம்..." என, சிலிர்த்துள்ளார். இதைக் கேட்ட ஹொலிவுட் ரசிகர்கள், "இந்தப் பொண்ணு உண்மையிலேயே லூசா... இல்லை லூசு மாதிரி நடிக்கிறதா..." என, மண்டை காய்ந்துள்ளனர்.

# ஏமாறாதீர்கள்!

படத்தைப் பார்த்ததும், "ஐயோ பாவம்... இந்தக் குழந்தைக்கு என்ன நோயோ... இவ்வளவு பெரிய பற்களுடன் பிறந்து விட்டதே..." என்று வருத்தப்படுகிறீர்களா? அப்படி என்றால் நீங்கள் ஏமாந்து விட்டீர்கள் என அர்த்தம். காரணம், இது குழந்தையின் பற்கள் அல்ல; நம்மூரில் குழந்தையின் வாயில் திணிப்பரே... நிப்பிள் (சூப்பி)... அதைத் தான் அமெரிக்காவில் இப்படி வடிவமைத்துள்ளனர். இதைப் பார்க்கும் அனைவரும் விழுந்து விழுந்து சிரிக்கின்றனர். குழந்தைக்குத் தெரியுமா... இவர்கள் ஏன் இப்படி சிரிக்கின்றனர் என்று!







அண்ணா தொழிலகத்தின் 'வாடா மல்லிகை' நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இணுவிலில் நடைபெற்றபோது விருந்தினர்கள் மேடையில் அமர்ந் திருப்பதையும் பேராசிரியர் க.தேவராஜா தலைமையுரையாற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகன் முதற் பிர தியைத் தொழிலதிபர் எஸ்.பீ.சாமியிடம் வழங்குவதையும் காணலாம். (137)

# ஆசிரிய உதவியாளர்களை விரைவில் நிரந்தர சேவைக்குள் உள்வாங்க ஏற்பாடு

## இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் ஆசிரிய உதவியாளர்களுக்கான நியமனம் கிடைக்கப்பெற்று, ஆசிரிய பயிற்சியை நிறைவுசெய்த அனைவரும் அடுத்த வாரம் நிரந்தர ஆசிரிய சேவைக்குள் உள்வாங்கப்பட்டு புதிய வேதனம் வழங்கப்படும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆசிரிய கலாசாலை இறுதிப் பரீட்சை நிறைவடைந்து பரீட்சைப் பெறுபேறு வெளியானதும் ஆசிரிய கலாசாலையால் வழங்கப்படும் பெறுபேற்றுப் பத்திரங்களை வைத்து அந்தந்த கல்வி வலயங்கள் மத்திய கல்வி அமைச்சின் உறுதிப்படுத்தலுடன் உள்ளீர்ப்பைச் செய்து வந்தன. அதற்கு உதாரணமாக தீவகக் கல்வி வலயத்தில் கடந்த காலங்களில் ஆசிரியப் பயிற்சி நிறைவு செய்தவர்களின் பெறுபேற்றுப் பத்திரங்களை அப்போது இருந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஐ.புவனேந்திரன் நேரடியாக கல்வி அமைச்சுக்குக் கொண்டு சென்று உறுதிப்படுத்தி உடனடியாகவே உள்ளீர்ப்பையும் செய்து, வேதனத்தையும் வழங்கினார். அதனை முன்மாதிரியாகக் கொண்டு ஏனைய கல்வி வலயங்களும் உள்ளீர்ப்பைச் செய்தன.

ஆனால் ஆசிரிய உதவியாளர் நியமனம் கிடைத்து குறைந்த வேதனத்துடனும், அதிக செலவீனத்துடன் கடமையாற்றும் பயிற்சி முடித்து பரீட்சைப் பெறுபேறு கிடைக்கப்பெற்ற ஆசிரியர்களின் உள்ளீர்ப்பு இதுவரை நடைபெறவில்லை என்பதனை வடமாகாணக் கல்வி அமைச்சிடம் எடுத்து விளக்கிய பொதுச் செயலாளர் முன்னைய காலங்களில் நடைமுறைப்படுத்திய விடயங்களை எடுத்துக்கூறி உடனடியாக அவ்வாசிரியர்களை உள்ளீர்ப்புச் செய்து வேதனத்தை வழங்குமாறு கோரியிருந்தார்.

அதனை ஏற்றுக் கொண்ட வடமாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர் அவர்களின் உள்ளீர்ப்புக் கடிதங்கள் ஆயத்தமாக இருப்பதாகவும் மத்திய கல்வி அமைச்சிடம் இருந்து உறுதிப்படுத்தல் கிடைத்ததும் அடுத்த வாரம் அவை நடைமுறைப்படுத்தப்படும் என உறுதியளித்துள்ளார். அத்தோடு மத்திய கல்வி அமைச்சு அதிகாரிகளுடனும் தொடர்புகொண்டு நிலைமையைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

# 30 வருடங்களின் பின் இன்கிலாப் சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லீஸ் ஏற்பாட்டில் 30 வருடங்களிற்கு பின் இன்கிலாப் சஞ்சிகை கடந்த சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் வெளியிடப்பட்டது.

இதன் போது துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நூலினை வெளியிட்டு வைத்தார்.

அத்துடன் முஸ்லிம் மஜ்லீஸ் தலைவர் எம்.ஹலீம், உப தலைவர் என்.எம் அர்சாத்.செயலாளர் எஸ்.எம் ஜிப்ரான். உப செயலாளர் என்.எம் நிப்ராஸ், சஞ்சிகைக் குழுவினர் மற்றும் பழைய மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கலைப்பீட பீடாதிபதி வி.பி சிவநாதன் வணிக மற்றும் முகாமைத்துவ கற்கைகள் பீட பீடாதிபதி பேராசிரியர் ரி.வேல்நம்பி மற்றும் விஞ்ஞான பீட பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சிறிஸ்கந்தராஜா ஆகியோர் விருந்தினராக கலந்து கொண்டனர். (48)

# நாம் நண்பர்கள் அமைப்பினரால் உலர் உணவுப் பொட்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு நாம் நண்பர்கள் அமைப்பினூடாக உலர் உணவுப் பொருட்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டன.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த வாழ்வாதாரம் குறைந்த, மனநலம் பாதிக்கப்பட்ட, மாற்றுஆற்றலுள்ள இயலாமையிலுள்ள, ஒரு தொகுதியினருக்கு இவ் உலர் உணவுப் பொருட்கள் அடங்கிய பொதிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் தலா 2000 ரூபா பெறுமதியான இப்பொதிகளில் அரிசி, மா, சீனி, பால்மா, கடலை, பருப்பு, சோயா, சவர்க்காரம், உள்ளிட்டவை அடங்கியுள்ளன.



நேற்றுமுன்தினம் சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர வே.சிவராஜா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் நாம் நண்பர்கள் அமைப்பின் செயலரும், இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினருமான க.உஷாந்தன், பொருளர் வி.தயாசுதன், உப தலைவர்களான நி.அலஸ்டீன் எஸ்.துஸ சிகரன், நாம் நண்பர்கள் அமைப்பின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு உலர் உணவுப் பொருட்கள் அடங்கிய பொதிகளை வழங்கி வைத்தனர். (48)

# பரிசளிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் பிரம்மோற்சவத்தை முன்னிட்டு இடம்பெற்ற சமய அறிவு, நாவன்மை, பண்ணிசைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இப் பரிசளிப்பு நிகழ்வுகள் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களோடு, 5 ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. அத்துடன் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. வரணியூர் சிவராஜா தலைமையில் வளர்ந்து வரும் நவீனத்தால் இளைய தலைமுறை தடம் புரள்கின்றது இல்லை தடம் பதிக்கின்றது என்னும் தலைப்பில் சிறப்பு பட்டிமன்றம் ஒன்றும் இடம் பெறவுள்ளது.

வெற்றியாளர்களின் விபரங்கள் ஆலயத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன் வெற்றியாளர்கள் உரியநேரத்தில் கலந்துகொள்ளுமாறு போட்டிகளின் ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுள்ளனர். (48)

# முரசின் இன்றைய பலன்

(15.04.2015 புதன்கிழமை)

மன்மத வருஷம் சித்திரை மாதம் 02 ஆம் திகதி:
ஏகாதசி - திதி. சித்தாமிர்த யோகம்.
சதய நட்சத்திரம் முன்னிரவு 10.14 வரை. பின் பூரட்டாதி.
இராகு காலம் 12.04 - 01.34 வரை. சுபநேரம் 04.34 - 06.04 வரை



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** — அட்டமத்துச் சனீஸ்வரன் இருப்பதினால் நம்பகத்தைக் கைவிட வேண்டும்.

**ரிஷபம்** — கண்டகச் சனி உள்ளதால்பிரிவு ஏற்படுவது தவிர்க்கமுடியாதபடி அமைதல்.

**மிதுனம்** — சனீஸ்வரன் 6 இல் நிலவுவது குருட்டு அதிர்ஷ்டம் தேட வரலாம்.

**கடகம்** — சனீஸ்வர கெடுபலனால் சனி நோய் பற்றுதல்.

**சிம்மம்** — அர்த்தாட்சம சனியால் தாயாரின் தேகசுகம் பாதிக்கப்படல்.

**கன்னி** — தைரிய வீரியச்சனி கோசர நிலையில்நன்கமைந்து நன்மை கிடைத்தல்.

**துலாம்** — ஏழரைச்சனி கடைக்கூறு என்றபடியினால் புதிய கொள்வனவில் நாட்டமேற்படல்.

**விருச்சிகம்** — மேலும் ஒரு கிளை நிறுவனம் திறப்பதை மனையாள்தடுத்துவிடல்.

**தனுசு** — புதிய ஒப்பந்தத்தை ஏற்க பின்னடித்தல்.

**மகரம்** — பேதம் மற்றும் பணப்பற்றாக் குறையினால் முற்றாகிய நிலையில் இருந்த விவாகம் தடைப்படல்.

**கும்பம்** — கண்டகச் சனிதான் பொருட்கள்விலைப்படாமைக்கு காரணம் என எண்ணுதல்.

**மீனம்** — முறையீடு காரணமாக பட்ட கடன் கைக்கெட்டுதல்.

# வடமாகாண சபை உத்தியோகத்தர்களுக்கு

# பதவி உயர்வு வழங்க நடவடிக்கை

## வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன்

வடமாகாண உள்ளூராட்சி சபை உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்குவது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டவுள்ளது.

வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் இதற்கான துரித நடவடிக்கை எடுத்துள்ளார்.

வடமாகாண உள்ளூராட்சி அமைசசின் செயலாளர் தி.திருவாகரன் வடமாகாணத்தில் பதவி உயர்வு அற்று இருக்கும் உள்ளூராட்சி உதவியாளர்களின் கடந்த கால நிலமைகளை ஆராய்ந்து அதற்கான அறிக்கையை தயார் செய்து மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கும், வடமாகாண பொது நிர்வாக பிரதி செயலாளருக்கும் உடன் சமர்ப்பித்துள்ளார்.

இதற்கமைய மேற்குறித்த பதவி உயர்வு குறித்து அறிக்கையை மையமாகக் கொண்டு சகல பதவியுயர்வுடன் சம்பந்தப்பட்ட செயலாளர்களை அழைத்து இவ்வாரம் பேசவுள்ளதுடன் உடனடியாக செயற்படுத்தவுள்ளதாகவும் பிரதம செயலாளர் அ.பத்திநாதன் தெரிவித்துள்ளதுடன் கடந்த 16 வருடங்களாக குறித்த பட்டதாரிகள் உள்ளூராட்சி உதவியாளர் பதவி உயர்த்தப்படாது 16 வருடங்கள் தரம் IIIஇல் வைக்கப்பட்டு அவர்களது வாழ்வாதாரம் மற்றும் அவர்களது சேவைகள் குறித்தும் ஆராய்ந்துள்ளார்.

இதேவேளை வடக்கு உள்ளூராட்சி சேவை உத்தியோகஸ்தர்களுடன் நியமனம் பெற்ற கிழக்கு மாகாண உள்ளூராட்சி சேவை உத்தியோகஸ்தர்கள் வகுப்பு II இற்கு 2004 இலும், வகுப்பு I இற்கு 2014 இலும் தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

வடமாகாணத்தில் 17.05.1999 இல் நியமனம் பெற்ற உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு ஏனைய நலத்திட்ட உதவிகளும் இடைக்கால நிலையிலேயே பணியாற்றியமை தொடர்பில் பிரதம செயலாளர் கேட்டறிந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (92)

### - கிளிநொச்சியில் -

# நடைபாதை வியாபாரத்துக்கு தடை

# மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நடைபாதை வியாபாரத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது இதை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கிளிநொச்சி வர்த்தக சங்க இணைப்பாளர் எம்.தவராசா தெரிவித்துள்ளார்.

நடைபாதை வர்த்தகர்களர்ல் ஏனைய வர்த்தகர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும், நிர்ணயிக கப்பட்ட விலைக்கு அதிகமாக பொருட்கள் விற்பனை செய்யப்படுவதால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

அத்துடன் விபத்துக்கள் ஏற்படுவதாகவும் பொருட்களின் தரம் குறைவாகவும் காணப்படுவதனாலேயே கரைச்சி பிரதேச சபையினருடன் இணைந்து இம் முடிவினை எடுத்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

# மகா கும்பாபிஷேகம்

நாகர்கோவில் வடக்கு அருள்மிகு புலவியோடை நாகதம்பிரான் ஆலய மகா கும்பாபிஷேகப் பெ்ருவிழா எதிர்வரும் ஆனி மாதம் 29ஆம் திகதி திங்கட்கிழமை. நடைபெற எம்பெருமான் திருவருள் கைகூடியுள்ளது.

தற்போது ஆலயத்தின் கட்டுமானப்பணிகள் யாவும் பூர்த்தியடையும் நிலைமை நெருங்கியுள்ளது. எனினும் நடைபெற்று வரும் திருப்பணி வேலைகளுக்கும் ஆரம்பிக்கப்படவுள்ள வர்ணப் பூச்சு வேலைகளுக்கும் நன்கொடையாளர்களிடம் இருந்து நிதி சேகரிக கப்படவுள்ளது. நிதிதர விரும்புவோரை ஆலய நிர்வாக சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் கேட்டுக்கொள்கின்றனர்.

## பாவம்....

வடமாகாணசபை இந்த காரியத்தை செய்ய திணறுகின்றதென்றால், தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஏன் மத்திய அரசுடன் பேசி இதனை சரி செய்யவில்லை. மத்திய அரசின் ஆய்வைக் கூடவா இந்த ஆட்சியில் பெற முடியாது?

நல்லூர் முன்றிலில் போராட்டம் ஆரம்பித்த அன்று வடக்கு மாகாணசபையில் நீர்ப்பிரச்சினை பற்றி விசேட அறிக்கை சமர்ப்பித்து விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் உரையாற்றினார். அவரும் தமிழ்த்தேசிய ஊடகப்பரப்பில் நீண்டகாலம் பங்கெடுத்திருந்தவர். இந்தப் பழக்கதோசம் அறிக்கையில் தென்பட்டது. வடமாகாணசபைக்கெதிரான சில தீயசக்திகள் மக்களை திசைதிருப்பியுள்ளதென குற்றம் சுமத்தினார்.

உண்மையில் ஐங்கரநேசன் அன்று செய்திருக்க வேண்டியது என்ன? அந்த நீரை பருகலாமா முடியாதா என்பதை பட்டவர்த்தனமாக சொல்வதே. அதை விடுத்து மணிரத்தினம் படப்பாணியில் யாருக்கும் புரியாமல் பேச வேண்டிய அவசியமெல்லாம் கிடையாதே.

இந்த நீரில் மாசுள்ளதா? குடிக்கலாமா முடியாதா என்பதே மக்ளின் கேள்வி. அதனை வடமாகாணசபை கூற வேண்டும். அந்தப் பொறுப்பை ஏற்க முடியாதெனறால், மத்திய அரசு அதில் தலையிடுவது தவிர்க்க முடியாததே.

மக்களின் ஜீவனோபாய பிரச்சினையிலேயே திட்டமிட்டு சரியாக இவர்களால் நடந்து கொள்ள முடியாதென்றால், காணி,பொலிஸ் அதிகாரங்களை கொடுத்தால் என்ன நடக்குமென அண்மைக்காலமாக தமிழ்தேசியத்தை நிராகரிப்பவர்கள் கேட்கும் கேள்வியாக உள்ளது.

இவை அனைத்தையும்விட, முதல்வரின் உறுதிமொழியை போராட்டக்காரர்கள் ஏற்காமலிருந்ததற்கான வேறொரு முக்கிய காரணமுமிருந்தது. அதனை எந்த ஊடகங்களும் வெளியிடவில்லை. முதல்நாள் இரவு அங்கு சென்ற முதல்வர் தலைமையிலான குழுவினர் மிக குழப்பகரமாக பேசினார்கள். முதல்வர் ஆரம்பத்திலேயே சொல்லிவிட்டார்- இதுபற்றி தனக்கெதுவும் தெரியாதென. அந்த நீரை குடிக்கலாமா, குடிக்க முடியாதா, நீரில் மாசுள்ளதா இல்லையா என்பது பற்றி தனக்கு ஒன்றுமே தெரியாதென அவர் பகிரங்கமாக கூறினார். அப்பொழுது அருகில் நின்ற சிவாஜிலிங்கம், அந்த நீரில் மாசுள்ளது குடிக்க வேண்டாம் என்றார். மறுபக்கத்தில் நின்ற அமைச்சர் டெனீஸ்வரன், இருக்கிறதா இல்லையா என்பதை பின்னர் பார்த்து கொள்ளலாம், நாம் இப்பொழுது சமாதானமாக போவோம் என்றார். அவர் நினைத்தார், இது வடமாகாணசபைக்கு எதிரான போராட்டமென.

அந்தச்சம்பத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவன் ஒருவர் கேட்டுள்ளார்- 'இதுபற்றி ஒன்றும் தெரியாமல் எப்படி முதல்வராக இருக்கிறீர்கள்' என. அதற்கு முதல்வர் சொன்னார், தானும் சாதாரண மனிதன்தானே எயன.

போராட்டக்காரர்களிற்கு வடமாகாணசபை முன்வைத்த பிரதான வாக்குறுதி, நீரில் மாசிருப்பது கண்டறியப்பட்டால் அதற்கு நடவடிக்கை எடுப்போம் என்பதே. மாறாக ஆளுநர் மற்றும் அரசஅதிபர் கொடுத்த வாக்குறுதி- நீரில் மாசுள்ளதை ஆய்வுகள் உறுதி செய்கின்றன. அந்த நீரை பருக முடியாது. அந்த விடயத்தில் நடவடிக்கை எடுப்போம் என்பதே.

நீரில் மாசுள்ளதா என்பதை கண்டறிய வடமாகாண சபைக்கு நான்குநாள் கொடுப்பதைவிட, நீரில் மாசுள்ளதை கண்டறிந்துள்ள ஆளுநருக்கு ஏழுநாள் அவகாசம் கொடுக்கலாமென போராட்டக்காரர்கள் எடுத்த முடிவு தர்க்கரீதியானதுதானே.


இவை அனைத்தையும் விட முக்கியமானது, வடமாகாணசபை நிபுணர்குழு அறிக்கை பற்றிய முன்பின்னான குழப்பகரமான தகவல்கள், அதிகார மட்டத்தில் வெவ்வேறான அறிக்கைகள் வைத்திருப்பது எல்லாம் மக்கள் மத்தியில் பலத்த சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது. இந்த விடயத்தில் வடக்கு விவசாய அமைச்சர் பற்றிய காரசாரமான குற்றச்சாட்டுக்கள் உள்ளன. அவர் இனி வெளிப்படையாக செயற்பட்டு அவற்றை களைய முயற்சிக்க வேண்டும்.

இந்தப் போராட்டம், முடிவு பற்றி இன்னொரு விடயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இது இள்ளஞர்களால் தன்னெழுச்சியாக திட்டமிடப்படாமல் ஆரம்பிக்கப்பட்டது. அதாவது நமது ஆயுதப்போராட்டத்தின் ஆரம்பத்தை உதாரணமாக சொல்லலாம்.

அதிக உணர்ச்சிவசப்படும் இளையவர்கள் அவர்கள். அரசியல் நிகழ்ச்சிநிரலிற்கு அப்பாலானவர்கள். அரசியல் நிகழ்ச்சி நிரலிற்கு அப்பாலான் இப்படியான இளைஞர்களின் செயற்பாடுகளே வளர்ச்சியடைந்து மக்கள் கூட்டத்தின் அரசியல் நிகழ்ச்சி நிரலாக மாற்றமடையுமென்பதே வரலாறு.

இந்த வகையானவர்களின் ஆரம்ப களங்களில் எடுக்கப்படும் முடிவுகளெல்லாம் நூறுவீதமும் விமர்சனத்திற்கு அப்பாலானவையாக இருக்குமென்பதுமல்ல. ஆனால் மக்களின் பிரச்சினையொன்றிற்காக களமிறங்கியுள்ளார்கள் என்பதே இதில் முக்கியமான அம்சம்.

# ஆயுர் வேதம்



## புளியின் மருத்துவ குணங்கள்!

### உணவில் புளி சேர்ப்பதன் முக்கிய நோக்கமென்ன?

1. நாக்கில் உள்ள சுவை கோளங்களின் அயர்வை நீக்கி சுறுசுறுப்பூட்டி உணவிற்கு சுவை கூட்டுதல் - வாயில் குழகுழப்பும் நாக்கில் தடிப்புமாகப் போர்வையிடுதலும் இருக்கும்போது சற்று புளி தூக்கலான உணவு இதமாயிருக்கும்.

நாக்கில் உமிழ்நீர் ஊறுவது கபத்தாலோ அஜீரணத்தாலோ அடைபட்டு நாவறட்சி ஏற்படும்போது வாயில் உமிழ்நீர்க் கசிவை அதிகப்படுத்தி வறட்சியைப் போக்கும்.

வயிற்றில் பித்தப் புளிப்பு மிகுந்தோ, புண் ஏற்பட்டோ, வாயில் பொது வேக்காளம் அல்லது நாக்கு எகிறு உதடு கன்னம் கடைவாய் இவைகளில் குழிப்புண் ஏற்பட்டுள்ளபோதும், நாக்கில் எப்போதும் உமிழ்நீர்க் கசிவு மிகுந்துள்ள நிலையிலும் புளி மிகவும் குறைந்துள்ள அல்லது புளி நீக்கிய உணவே ஏற்றது. துவர்ப்பும் கசப்பும் மிக்க உணவு இந்நிலையில் உதவலாம்.

2. இரைப்பையிலுள்ள ஜீரணத் திரவங்களுக்கு சக்தி ஊட்டல் வாயில் இனிப்பு மிக்க உமிழ்நீரும், இரைப்பையில் புளிப்பு மிக்க ஜீரணத் திரவமும் சிறுகுடலில் கசப்பு மிக்க ஜீரணத் திரவமும் ஜீரணத்தின் பல்வேறு நிலைகளில் உதவுகின்றன. இவற்றில் ஏதேனும் ஒன்று அளவில் தற்காலிகமாகக் குறைந்தாலோ கூடினாலோ பாதகம் ஏற்படுவதில்லை. ஆனால் தொடர்ந்து குறைந்தோ கூடியோ இருந்தால் ஜீரணம் பாதிக்கப்படுகின்றது.

புளிப்புத் திரவங்களில் சக்தி குறைந்த நிலையில் அதற்குச் சக்தி கூட்ட புளிப்பு தூக்கலாக உள்ள புளிவற்றல் குழம்பு, புளி இஞ்சிச் சம்பல், புளிமிளகாய்ச் சம்பல் போன்றவை அதிகம் உதவுகின்றன. புளிக் குழம்பும் புளிமிளகுக் குழம்பும் உணவு எளிதில் ஜீரணமாக உதவுகின்றது.

3. பெருங்குடலில் மலமும் வாய்வும் தங்காமல் வெளியேறச் செய்தல் சிறுகுடலிலும், பெருங்குடலிலும் நடைபெற வேண்டிய ஜீரணப் பணியின் இறுதிநிலைகள், சுறுசுறுப்புடன் நிறைவேற புளி உதவுகின்றது.

இந்நிலையில் வாயு வயிற்றில் பொருமி தங்காமலும் பழைய மலம் தங்காமலும் வெளியேற லேசான மலமிளக்கியாகவும் வாயு அகற்றியாகவும் புளி உதவுகின்றது.

பழைய புளி 10 கிராம், சூரத்து நிலாவரை 3 கிராம், கொத்தமல்லி விதை 3 கிராம், 240 மில்லி லீற்றர் கொதிக்கும் நீரில் இரண்டு மணிநேரம் ஊற வைத்து காய்ச்சி வடிகட்டி அதில் சீனி மூன்று கரண்டி சேர்த்துச் சாப்பிட வேதனையில்லாமல் மலமிளகிப் போகும்.

புளியை கொதிக்கும் நீரிலிட்டு கரைத்து வடிகட்டி அதில் பனங்கற்கண்டு சேர்த்துச் சாப்பிட சீதபேதி, இரத்தக்கடுப்பு நிற்கும்.

புளியையும் உப்பையும் சம அளவில் கலந்து பிசைந்து சிறிது தேன் சேர்த்து இள்க்கி பஞ்சில் தோய்த்து உள் நாக்கில் தடவிக் கொள்ள அதன் வளர்ச்சி குறையும்.

புளியை நீரில் கரைத்து அதில் மிளகு, கராம்பு, ஏலம் இம்மூன்றையும் சிறிது தூளாக்கி கலந்து சீனி, பச்சைக் கற்பூரம் சேர்த்துச் சாப்பிட சூட்டினால் ஏற்படும் தலைவலி, கண் எரிச்சல் நீங்கும், பசி உண்டாகும், ருசியின்மையை மாற்றும்.

புளியையும் கரிசலாங்கண்ணியையும் சமஅளவு சேர்த்து அரைத்து 1/2 கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட குத உறுப்பு வெளித்தள்ளல் (Rectal Prolapse) நின்றுவிடும்.

புளியைத் தண்ணீரில் கரைத்து உப்பும், சுக்குத் தூளும் சேர்த்து கொதிக்க வைத்து சூடாக பற்றுபோட ஊமைக்காயமாக ஏற்பட்ட இரத்தக்கட்டு வலி நீங்கும்.

புளியிலையையும், வேப்பிலையையும் சேர்த்துக் கொதிக்க வைத்த நீர விட்டு கழுவி வர ஆறாதபுண்ணும் ஆறும். புளியிலையை இடித்து கொதிக்க வைத்த தண்ணீரைக் கொண்டு ஒத்தடம் கொடுப்பதும், புளியிலையை அரைத்துப் பற்றிடுவதும் கீல்வாயு (குதிகால்) வீக்கத்தைக் குறைக்கும்.

புளியம் பூவை நெய் விட்டு வதக்கி துவைய்யல் செய்து உண்ண நல்ல பித்த சமனமாகும். பூவை நசுக்கித் தண்ணீர விட்டு அரைத்து கண்ணைச் சுற்றி பூசி வர கண் சிவப்பு மாறும்.


பழத்தின்மேல் ஓட்டை சுட்டு சாம்பலாக்கி தண்ணீரில் கெட்டியாக் கரைத்து வயிற்றின் மேல்புறத்தில் தடவ கல்லீரல் வீக்கம் தணியும்.

பட்டைச்சாம்பலை நிறைய தண்ணீர்விட்டு கலக்கி வடிகட்டி அதைக கொண்டு வாய்க்கொப்பளிக்க தொண்டை வேக்காளம் நீங்கும்.

பழத்தின் மேல்ஓட்டை உடைத்துத் தூளாக்கி பல்துலக்கி வர பற்களின் ஈறுகள் வலுப்பட்டு பல் இறுகும்.

மேல் ஓடு ஒருபங்கு, சீரகம் மூன்றுபங்கு பனங்கற்கண்டு நான்கு பங்கு சேர்த்து தூளாக்கி, வைத்துக் கொண்டு அதில் அரை ஒரு கரண்டி அளவு காலை மாலை சாப்பிட்டு வர நாட்பட்ட சீதபேதியும், கிராணியும் நீங்கும்.

# மரக்கறிகளின் விலை பாரியளவில் வீழ்ச்சி



(கொழும்பு)

புதுவருட காலத்தில் மரக்கறிகளின் விலை பாரியளவு குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புது வருட காலத்தில் விற்பனை செய்யவதற்கென அதிக மரக்கறிகளை சந்தைக்கு விநியோகித்ததன் விளைவாக விலை அதிகளவு குறைந்துள்ளது.

இந்நிலையில் விற்பனை செய்துகொள்ள முடியாமல் போன 15 இலட்சம் கிலோகிராம் எடையுள்ள மரக்கறியை காட்டு யானைகளுக்கு தீனியாக இட்டதாக தம்புள்ளை பொருளாதார மத்திய நிலைய வியாபாரிகள் சங்கத்தலைவர் யு.ஆர். தயானந்த தெரிவித்துள்ளார்.

புத்தாண்டு காலத்தில் வியாபார நிலையங்களை மூடியுள்ளமை இவ்வாறு மரக்கறிகள் வீணாவதற்குக் காரணம் என அவர் குறிப்பிட்டார்.

# போர்க்குற்ற விசாரணைக்கு தொடர்ந்தும் அழுத்தம் கொடுப்போம்

## – மிலிபேன்ட் தெரிவிப்பு –



போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான சர்வதேச விசாரணைக்கு பிரித்தானியா தொடர்ந்தும் அழுத்தம் பிரயோகிக்கும் என அந்நாட்டு தொழில்கட்சித் தலைவர் டேவிட் மிலிபேன்ட் தெரிவித்துள்ளார்.

தமிழ், சிங்கள புதுவருடப் பிறப்பை முன்னிட்டு வீடியோ மூலம் வாழ்த்துச் செய்தியை நேற்று வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் அவர், மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் பொறுப்புக்கூறல் விவகாரத்தில் பிரித்தானியா தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கும் என்பதையும் குறிப்பிட்டுள்ளதுடன் தமிழர்களுக்கு என்றும் துணை நிற்பதாகக் கூறியுள்ள அவர், தமிழ் மக்களுக்காகச் செய்ய வேண்டிய காரியங்கள் என்ன என்பதையும் தெரிந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.


பிரித்தானிய சமூகத்தில் பின்னிப்பிணைந்துள்ள தமிழர்கள் என்றும் நண்பர்கள் எனக் கூறியுள்ள மிலிபேண்ட், தமிழ் சமூகத்தினருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளதுடன் அண்மையில ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்த போது பொறுப்புக்கூறும் நிலைமை குறித்து பேசியிருந்ததாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அனுபவப் பரிமாற்றல் நிகழ்ச்சித் திட்டம்

கோட்டை நகரங்களுக்கிடையிலான அறிவினை பரிமாறிக் கொள்ளல் நிகழ்ச்சித் திட்டம் தேசிய மரபுரிமைகள் அமைச்சின், காலி மரபுரிமைகள் மற்றும் நல்லிணக்கம் சகவாழ்வு மற்றும் சமூக ஒருங்கிணைப்புடனான கோட்டை நகரங்களுக்கிடையிலான மாணவர் அனுபவப் பரிமாறல் தென் மாகாண வேலைத்திட்டம் என்ற தலைப்பிலான நிகழ்ச்சித் திட்டம் ஒன்றினை கடந்த மார்ச் மாதம் 21-24 வரை நடாத்தியது.

அதில் காலி மாவட்டத்தினை சேர்ந்த ஐந்து பாடசாலைகளும், மட்டக்களப்பு மாவட்டத்தினை சேர்ந்த ஐந்து பாடசாலைகளிலும் தேர்ந்தெடுத்த ஐந்து மாணவர்கள் வீதம் மொத்தமாக ஐம்பது மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். (90)

# இலங்கையின் தாமரைக்கோபுரம் சீன இலத்திரனியல் உளவுமையமா?



இலங்கையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் தாமரைக் கோபுரம் சீன இலத்திரனியல் உளவு மையம் என இந்திய பாதுகாப்பு தந்திரோபாய ஆய்வாளர் ஒருவர தெரிவித்துள்ளார்.

சுற்றுலா மற்றும் தொடர்பாடல் மேம்படுத்தல் அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் சீனா, இந்த உளவு மையத்தை உருவாக்கி வருகின்றது.

சீனாவின் இரண்டு பாதுகாப்பு நிறுவனங்களினால் இந்த நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஈபிள் கோபுரத்தை விடவும் 26 மீற்றர் உயரமுடைய தாமரைக் கோபுரமானது தெற்காசியாவின் மிக உயரமான கோபுரமாக உருவாக்கப்படவுள்ளது.

ஒரு புறத்தில் இந்தியாவையும் மறுபுறத்தில் இந்து சமுத்திரத்தையும் மையப்படுத்தி இந்தக் கோபுரம் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சீன எக்ஸிம் வங்கியின் நிதி உதவியுடன் இந்தக் கோபுரம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது என இந்திய பாதுகாப்பு தந்திரோபாய ஆலோசகர் ஹஸ்கர் ரோய தெரிவித்துள்ளார்.

இந்தக் கோபுரம் நிர்மாணிக்கப்பட்டால் இந்தியாவினதும், தெற்காசியாவினதும் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# துஷார பெரேரா கைது




(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மஹர தொகுதி அமைப்பாளராக இருந்து, கடந்த மகிந்தவின ஆட்சிக்காலத்தில் ஆளுந்தரப்புக்கு மாறிய துஷார பெரேராவை இரகசிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

போலி ஆவணங்கள் தயாரித்த குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டிருக்கும் இவருக்கு எதிராக காசோலை மோசடி குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஐ.தே.கவின் முன்னாள் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்காவுக்கு மிகவும் நெருக்கமானவர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 17 மில்லியன் ரூபா தங்கம் கடத்த முயன்றவர் கைது

(கொழும்பு)

இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு தங்கத்தகடுகள் ஒரு தொகையினை கடத்திச் செல்ல முயன்ற ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து 17 மில்லியன் ரூபா பெறுமதியான தங்கத் தகடுகள் மீட்கப்பட்டுள்ளதாக சுங்கத்திணைக்களம் தெரிவிக்கின்றது.

25 வயதுடைய இந்திய பிரஜை ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது.

# துப்பாக்கிச் சூட்டில் குடும்பஸ்தர் படுகாயம்

ஆனமடுவ, கோன்வலகந்த குருபொகுணகம பிரதேசத்தில் நேற்றுக்காலை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 40 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்தவர் ஆனமடுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், மேலதிக சிகிச்சைக்காக குருணாகல் போதனா வைத்தியசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

தனது மனைவியுடன் புத்தாண்டுக்காக பலகாரம் சமைத்துக் கொண்டிருக்கையில் இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. தனது கணவருடன் யாரும் தனிப்பட்ட ரீதியில் குரோதம் கொண்டிருக்க வில்லையெனவும், குறித்த துப்பாக்கிப் பிரயோகம் காட்டு விலங்குகளை இலக்கு வைத்து வைக்கப்பட்டதாக இருக்கலாம் எனவும் மனைவி தெரிவித்துள்ளதாக செய்திகள் குறிப்பிடுகின்றன.

# பன்றித்தலைச்சி பொங்கல் விழாவில் 10 இலட்சம் ரூபா நகைகொள்ளை

யாழ்ப்பாணம் மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலயப் பொங்கல் விழாவில் 10 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆலய வளாகத்தில் வைத்து நகைகளை இழந்தவர்கள் ஆலயப் பகுதியில் அமைக்கபபட்டுள்ள விசேட பொலிஸ் நிலையத்தில் இது குறித்து முறைப்பாடுகளைப பதிவு செய்திருந்தனர்.

இந்த முறைப்பாடுகளின் அடிப்படையில், 10 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலயத்தின் பங்குனித் திங்கள் பொங்கல் விழா நேற்று முன்தினம் இடம்பெற்ற போது நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்தும் பெருந்திரளான மக்கள் இந்த விழாவில் பங்கேற்றிருந்தனர்.

காவற்துறையினர் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்த போதும் சன நெரிசலை சாதகமாகப் பயன்படுத்திய கொள்ளையர்கள் பக்தர்களின் தங்க நகைகளை கொள்ளையிட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# வாகனத்தில் அதிகளவு பயணிகளை ஏற்ற வேண்டாமென பொலிஸார் அறிவிப்பு



(கொழும்பு)

வாகனங்களில் பயணிகளை ஏறிச் செல்ல முடியுமமென அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையை விட கூடுதலானவர்களை தங்களது வாகனங்களில் ஏற்றிப் பயணம் செய்ய வேண்டாம் என முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் செலுத்துனர்களிடம் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கிராமப்புறங்களில் டிரக்டர் வண்டிகளிலும் அளவுக்கு அதிகமான தொகையினரை ஏற்றிச் செல்லும் பழக்கம் புத்தாண்டு காலங்களில் இடம்பெறுகின்றது.

இவ்வாறான சட்ட முரணான முறையில் வாகனங்களை செலுத்துபவர்களை கவனிப்பதற்கு பொலிஸார் நாடு முழுவதிலும் நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

(10). ஒரு நிகழ்ச்சியின் சில படிகள் கீழே தரப்பட்டுள்ளன. அதன் சரியான ஒழுங்கைக் காட்டும் கோலத்தின் கீழ் கோடிடுங்கள்

48. A - விதைகளை நடல், B - நிலத்தைத் தெரிவு செய்தல் C - நிலத்தைப் பண்படுத்தல்
D - அறுவடை செய்தல் E - நிலத்தை வாங்குதல்

(i) ABCDE (ii) EDABC (iii) BECAD

(11). பின்வரும் கூற்றுக்களில் சரியாயின் (சரி) என்றும் பிழையாயின் (பிழை) என்றும் அடைப்பினுள் எழுதுக

49. காலில்லாத உயிரினங்களும் உண்டு (.....)

50. கொதிநீரில் சீனி விரைவாகக் கரையும் (.....)

51. நுளம்புகளை அழிக்கக்கூடாது (.....)

(12). தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கான விடையை எழுதுக

(மைனா, சிவனொளிபாதமலை, எருமை, புறா, துன்கிந்த, துவிச்சக்கரவண்டி, கண்டி, புல்வாய்)

52. மேலே எறிந்த பொருட்கள் கீழே விழுவதற்கான காரணம் ..............................

53. மகாவலிகங்கை ஆரம்பிக்கும் இடம் ..............................

54. சமாதானத்தின் பறவை ..............................

55. வயல் உழுவதற்குப் பயன்படும் விலங்கு ..............................

56. தலதாமாளிகை உள்ள நகரம் ..............................

57. நீர்வீழ்ச்சி ஒன்றின் பெயர் ..............................

58. இரண்டு சக்கரங்களைக் கொண்ட வண்டி ..............................

59. விவசாயியின் நண்பன் ..............................

(13). பின்வரும் விடுகதைகளுக்கு பொருத்தமான விடையை தரப்பட்ட சொற்களில் இருந்து தெரிந்து அதன் கீழ் கோடிடுக

60. நீண்ட இலைகளைக் கொண்டதும்
ஒருதாம் மட்டும் பழங்களைத் தருவதும்
வெட்ட வெட்ட முளைப்பதுமான
மரம் ..............................

**நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (01). 01. வண்டி, வாகனம் | 02. வீடு | 03.1. உபத்திரம் | 2. குறையாத | 04. வாங்குகிறார், குழறுகிறார் | |
| 05.1. மெய் | 2. அளித்து | 06.1. year | 2. vehicle | 07. நடந்த அநியாயத்தைக் கண்டு அவர் | |
| கோபத்தில் குமுறினார் | | 08. வண்டி | 09. விட்டார் | 10.1.2 சிங்களத்தில் எழுதவும் | |
| (02). 11. ஐம்புலன்கள் | | 12மிற்றர்கோல் | 13. அரைஅவியல் | 14. புதைத்தல் | 15. கோயில் |
| 16. பௌத்தர் | 17.1948 | 18. குளிர்சாதனப்பெட்டி | (03). 19. சரி | 20. சரி | |
| 21. பிழை | 22. சரி | 23. சரி | 24. பிழை | 25. சரி | 26. பிழை |
| 27. பிழை | 28. சரி | 29. சரி | 30. பிழை | (04). 31.2 | 32.2 | 33.3 |
| 34.2 | 35.1 | 36.2 | 37.3 | 38.1 | (05). 39. வணங்குதல் |
| 40. திங்கு | 41. இழிவு | 42.1. விசாலமான | 43. தோழன் | 44. ஆகாயம் | 43.2 |
| (06). 44 - 47 வரை சிங்களத்தில் எழுதுவும் | | (07). 48. (i). 01. B,D,F,H | | 02.1 | 03.16 |
| 04.5 | 05. பிழை | 06. பிழை | (ii).5 (iii).0.8 | (iv).00.09 | (v).km |
| (08). 49 - 52 வரை விரும்பிய வசனம் | | (09). 53. B | 54. A | 55. D | 56. C |
| (10). 57.100m | 58.31 | 59.750cm | 60. cm | 61.1m$^2$ | |

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளைமறுதினம் வெளியாகும்**



**தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015**

பகுதி - I
1 மணி 15 நிமிடம்



# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.

(01). பின்வரும் பாடலை கவனித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக

கல்லும் மலையும் குதித்து வந்தேன்
காடும் செடியும் கடந்து வந்தேன்
எல்லை விரிந்த சமவெளி யெங்கும் - நான்
இறங்கி தவழ்ந்து வந்தேன்

01. இப்பாடலில் உள்ள வரிகளை யார் கூறுகிறார்?
(1). கடல் (2). ஆறு (3). காடு

02. கல்லும் மலையும் உள்ள பிரதேசம்
(1). கடற்கரை (2). வனாந்தரம் (3). மலைநாடு

03. செடி ஒன்று
(1). கத்தரி (2). தென்னை (3). தாமரை

04. காட்டு மிருகம்
(1). யானை (2). எலி (3). மீன்

05. கங்கையில் குளித்தாலும் ..............................வெள்ளையாகுமா? இங்கு இடைவெளிக்குரிய சொல்
(1). நரி (2). குயில் (3). காகம்

(02). அடைப்புக்குள் தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்பி பின்வரும் பந்தியை பூர்த்தி செய்க

(தென்னை, மக்கள், நீர், கிராம, பெருந்து, சிறுவர்கள், சந்தையில், தாமரை, நெருஞ்சி, ஆற்றில்)

குமாரும், கமலாவும் நகரத்தில் இருந்து சற்று தூரத்தில் அமைந்திருந்த (06).............................. பிரதேசம் ஒன்றில் வசித்து வந்தனர். வயல்வெளியும் சுத்தமான (07).............................. பாய்ந்தோடும் வாய்க்கால்களைக் கொண்ட மிக அமைதியான கிராமமாக அது இருந்தது. அக்கிராமத்தில் வாழும் (08)..............................மிகவும் சுறுசுறுப்பும் இயற்கையை நேசிக்கும் குணமும் உள்ளவர்கள் குளங்களில் (09)..............................பூத்துக்காணப்படுகின்றது. ஆங்காங்கே (10).............................. முளைத்துள்ளதையும் காணக்கூடியதாக உள்ளது. (11).............................. மரங்களும் உயர்ந்து வளர்ந்துள்ளது. கிராமத்தினை ஊடறுத்துச் செல்லும் (12)..............................மக்கள் குளிப்பதற்கும் (13)..............................நீர்சலடிப்பதற்கும் செல்வது வழக்கம். அருகில் உள்ள (14).............................. மக்கள் தமது அன்றாட பொருட்களை வாங்கிக்கொள்கின்றனர். நாளுக்கு மூன்றுமுறை இக்கிராமத்திற்கு வரும் (15).............................. வண்டி இம்மக்களின் தேவைகளில் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது.

(03). 16 - 20 வரையுள்ள சொற்களை வாசித்து அதற்கான பொருளை ஒரு தனிச்சொல்லில் எழுதுக

16. ஒளியையும் ஒலியையும் ஒன்றாகத்தரும் வீட்டில் உள்ள பொருள் ..............................


17. விகடமாகப் பேசுபவர் ..............................


18. பார்வையாளர்கள் மத்தியில் நடிகர்கள் நடிக்கும் இடம் ..............................


19. அதிக சூரியவெப்பத்தில் தோன்றும் நீர் ..............................

20. நிலையான புள்ளியில் இருந்து எப்போதும் ஒரே அளவு தூரத்தில் ஓடும் பையனின் ஓட்டப்பாதை ..............................

(04). இங்கு காட்டப்பட்ட உருக்களில் இடைவெளிக்குப் பொருத்தமான உருவை தெரிந்து அதன் கீழ் கோடிடுக

21.



22.



23.



(05). பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குள்ளிருந்து தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

24. (எதிர்பார்த்த / திடீரென வந்த) விருந்தினருக்கு உபசரிப்பதற்கு அவ்வீட்டில் ஒன்றுமே இருக்கவில்லை

25. (மழைச்சாரலில் / அடைமழையில்) அகப்பட்டுக் கொண்ட பசு நிழல் ஒன்றைத் தேடி குளிரால் நடுங்கிக் கொண்டிருந்தது

26. பாங்கனும் (பாங்கையும் / பாங்கியும்) தலைவனுக்கு வழிகாட்டினர்


27. (வேலைவீட்டு / விளையாடிவிட்டு) வரும் தந்தையை வரவேற்க தங்கை ஓடினாள்.

28. (கைக்குக் கை / வாய்க்கு வாய்) அச்செய்தி ஊர் முழுவதும் பரவியது

(06). சரியான விடையின் கீழ் கோடிடுக

29. சதுரறுள் தாளில் வரையக்கூடிய வடிவங்கள்
(1). வட்டம், சதுரம், செவ்வகம்
(2). முக்கோணி, வட்டம், சதுரம்
(3). செவ்வகம், சதுரம், முக்கோணி

30. நேர்க்கோடுகளின் எண்ணிக்கையைக் கொண்டு அடுத்து வரும் உருவைத் தெரிவு செய்க




(07). அன்றாடம் நாம் பாடசாலையில் காண்பவற்றைக் கொண்டு (31) - (40) வரையான வினாக்களுக்கான விடை தருக

(நேரஅட்டவணை, மேடை, மாணவர் மேசை, பூச்சாடி, கரும்பலகை, மாணவர்கள், மரம், புத்தகம், ஒன்றுகூடல், பென்சில், தீர்க்கிறார்கள், வணங்குதல்)

31. கறுப்பு நிறத்தில் வகுப்பறைச் சுவரில் பொருத்தப்பட்டிருக்கும் ...................................



32. உயிருள்ள பன்மையான பெயர்ச்சொல்லொன்று ...................................

33. வகுப்பறையின் அன்றாட கடமைகளை செய்ய உதவுவது ...................................

34. நிகழ்கால பன்மையான வினைச்சொல்லொன்று ...................................

35. வகுப்பறையில் வைக்கப்படும் பூக்களை இதில் வைப்பர் ...................................

36. உயிரற்ற ஒருமை பெயர்ச்சொல்லொன்று ...................................


37. இலவசமாக அறிவைப் பெற்றுக்கொள்ள உதவுவது ...................................


38. பாவிக்க பாவிக்க தேய்வது ...................................


39. புதிய தவணை ஒன்றில் காலடி வைத்ததும் வகுப்பாசிரியரை நோக்கி செய்யப்படும் செயல் ஒன்று ...................................

40. ஒவ்வொரு தவணை முடிவிலும் வைக்கப்படுவது ...................................

(08). பின்வரும் உருவங்களில் பொருத்தமற்ற உருவத்தின் கீழ் கோடிடுங்கள்

41.



42.



43.



(09). பகுதி "அ" இல் உள்ளவற்றிற்குப் பொருத்தமான பகுதி "ஆ" இல் உள்ளது. அவற்றை அம்புக்குறியினால் இணைக்கவும்

| "அ" | "ஆ" |
|---|---|
| 44. திருகோணமலை | 1. குளிர் நகரம் |
| 45. மட்டக்களப்பு | 2. இயற்கைத்துறைமுகம் |
| 46. நுவரெலியா | 3. புராதன தலைநகரம் |
| 47. அனுராதபுரம் | 4. மீன்பாடும் நகரம் |

# இடமாற்றம் பெற்றுச் செல்லும் இணைந்த சேவை உத்தியோகத்தர்கள்

வடமாகாணத்தில் கடமையாற்றும் இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றப்பட்டியல் வெளியிடப் பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 20ஆம் திகதி முதல் இந்த இட மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனவும், இடமாற்றம் பெற்றுள்ளவர்களுக்கு 2015 ஆம் ஆண்டு மே மாதக் கொடுப்பனவை தற்போதைய திணைக்களங்களில் வழங்க வேண்டாமெனவும் திணைக்களத்தலைவர்களுக்கு வடமாகாண பிரதிப்பிரதம செயலாளர் ஆர்.எஸ். துரைராஜா சுற்று நிருபத்தின் மூலம் அறிவித்துள்ளார். (நேற்றைய தொடர்)

| தொ.இல | முழுப்பெயர் | வகுப்பு | தற்போதைய சேவை நிலையம் | இடமாற்றம் வழங்கப்பட்ட நிலையம் | இடமாற்ற சபையின் சிபார்சு / இடமாற்றம் வழங்கும் சேவை நிலையம் |
|---|---|---|---|---|---|
| முகாமை உதவியாளர் | | | | | |
| 101 | மேரி ஸ்ரெலா மரியராசா | II | மாவட்ட பொது வைத்தியசாலை, மன்னார் | வலயக் கல்வி அலுவலகம், மடு. | வலயக் கல்வி அலுவலகம், மன்னார். |
| 102 | கோகிலராஜா சிவலக்ஷ்மி | II | வலயக் கல்வி அலுவலகம், மடு. | வலயக் கல்வி அலுவலகம், மன்னார். | பொது வைத்தியசாலை, மன்னார் |
| 103 | தோமஸ் மரியதாஸ் | II | வலயக் கல்வி அலுவலகம், மடு. | மாவட்ட பொது வைத்தியசாலை, மன்னார் | இடமாற்றம் இரத்துச்செய்யப்படுகின்றது |
| 104 | நசார்தீன் முகம்மது இஸ்தியாக் | II | வலயக் கல்வி அலுவலகம், மன்னார் | வலயக் கல்வி அலுவலகம், மடு. | மேன்முறையீடு நிராகரிக்கப்படுகின்றது |
| 105 | ஜெனிபிறேற் ஜீசஸ் பிராங்கிளின் சொய்சா | II | பிரதி விவசாய பணிப்பாளர் - விரி, மன்னார். | சுகாதார அமைச்சு, வ.மா. | வலயக் கல்வி அலுவலகம்,வவுனியா தெற்கு |
| 106 | டி.எம்.பி.லோகு | I | வலயக் கல்வி அலுவலகம், மன்னார். | வலயக் கல்வி அலுவலகம், மடு. | பிரதி விவசாய பணிப்பாளர் - விரி, மன்னார். |
| 107 | சுப்பிரமணியம் பாலகுமார் | II | வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி. (மருதங்கேணி கோட்டம்) | சுகாதார அமைச்சு, வ.மா. | இடமாற்றம் இரத்துச்செய்யப்படுகின்றது |
| 108 | ஆண்டி ஐயா நந்தகுமார் | III | கூட்டுறவு பயிற்சி நிறுவனம், வவுனியா. | வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை | பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், வவுனியா |
| 109 | மைதிலி மகாலிங்கம் | II | மாகாண கல்வித் திணைக்களம், வட மாகாணம். | | சுகாதார அமைச்சு, வட மாகாணம். |
| 110 | விமலாவதி ராஜ்குமார் | II | மாகாண கல்வித் திணைக்களம், வட மாகாணம். | | கல்வி அமைச்சு, வட மாகாணம் |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | | | | | |
| 1 | அரிகரசுப்பிரமணிய ஐயர் முரளீதரன் | III | உதவிப் பணிப்பாளர் அலுவலகம், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், யாழ்ப்பாணம் | தொழிற்றுறை திணைக்களம், பிரதேச செயலகம், வவுனியா | காணி நிர்வாக திணைக்களம், வட மாகாணம் |
| 2 | இராசேஸ்வரன் லோகேஸ்வரி | III | கால்நடை வைத்திய அலுவலகம், கோப்பாய் | மாற்றமில்லை | வலிகிழக்கு பிரதேச சபை, புத்தூர் |
| 3 | உதயலிங்கம் ரஜனி | III | உதவிப் பணிப்பாளர் அலுவலகம், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், யாழ்ப்பாணம் | பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை | வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம் |
| 4 | அன்ரன் சாள்ஸ் துளஜா | III | உதவிப் பணிப்பாளர் அலுவலகம், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், யாழ்ப்பாணம் | மாற்றமில்லை | நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், வட மாகாணம் |
| 5 | சுதாகரன் பாருமதி | III | ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி | சமூகசேவைகள் திணைக்களம், அரச முதியோர் இல்லம், கைதடி | நகர சபை, சாவகச்சேரி |
| 6 | பரமேஸ்வரன் சுஜாதா | III | பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் | உதவிப் பணிப்பாளர் அலுவலகம், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், யாழ்ப்பாணம் | சமூக சேவைகள் திணைக்களம், (பிரதேச செயலகம் - சங்கானை) |
| 7 | இரத்தினராசா கிருஷ்ணானந்தன் | III | மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், வட மாகாணம் | மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலகம், வவுனியா | பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், வவுனியா. |
| 8 | இராசரத்தினம் தவகுமாரன் | III | பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் | உதவிப் பணிப்பாளர் அலுவலகம், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், மன்னார் | சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு, வடமாகாணம் |
| 9 | இரத்தினம் கமலன் | III | நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், சான்று பெற்ற பாடசாலை, அச்சுவேலி | மாகாண திட்டமிடல், பிரதேச செயலகம், வவுனியா | கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் |
| 10 | செல்வராஜா கலைசெல்வன் | III | நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், மல்லாகம் நீதவான் நீதி மன்றம் | காணி நிர்வாக திணைக்களம், வ.மா | சமூக சேவைகள் திணைக்களம், (பிரதேச செயலகம் - வேலணை) |
| 11 | திருநாவுக்கரசு திருமாறன் | III | நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், பிரதேச செயலகம், தெல்லிப்பளை | மோட்டார் போக்குவரத்து திணைக்களம், பிரதேச செயலகம், தெல்லிப்பளை | காணி நிர்வாக திணைக்களம், வடமாகாணம் |
| 12 | விமலராஜ் சிவராஜினி | III | நன்னத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம். | சமூகசேவைகள் திணைக்களம், பிரதேச செயலகம், தென்மராட்சி | பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழப்பாணம் |
| 13 | அன்ரன் சதீஸ் குமார் ஜெயராணி மஞ்சுளா | III | நன்னத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம் | சமூகசேவைகள் திணைக்களம், பிரதேச செயலகம், கோப்பாய் | சமூக சேவைகள் திணைக்களம், (பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம்) |
| 14 | காயத்திரி குககுமாரராஜா | III | காணி நிர்வாக திணைக்களம், வடமாகாணம். | நன்னத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், மல்லாகம் நீதவான் நீதி மன்றம் | கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம், வடமாகாணம் |
| 15 | இராசரத்தினம் ரோஜிந்தன் | III | காணி நிர்வாக திணைக்களம், வடமாகாணம் | கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம், மன்னார் | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம், (பிரதேச செயலகம், தெல்லிப்பளை) |
| 16 | சுஜிந் பிரியதர்ஷினி | III | காணி நிர்வாக திணைக்களம், வடமாகாணம் | மோட்டார் போக்குவரத்து திணைக்களம், பிரதேச செயலகம், நல்லூர் | மாகாண திட்டமிடல் செயலகம், (பிரதேச செயலகம், உடுவில்) |
| 17 | சச்சிதானந்தன் குமுதினி | III | காணி நிர்வாக திணைக்களம், பிரதேச செயலகம், பருத்தித்துறை | கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், வடமாகாணம். | பிரதேச சபை, பருத்தித்துறை. |
| 18 | தவச்செல்வம் நியூரலா | III | காணி நிர்வாக திணைக்களம், வடமாகாணம் | சமூகசேவைகள் திணைக்களம், பிரதேச செயலகம், வடமராட்சி கிழக்கு | வலி-கிழக்கு பிரதேச சபை, புத்தூர் |
| 19 | சியாமளன் அனுராதா | III | காணி நிர்வாக திணைக்களம், வடமாகாணம் | ஆதாரவைத்தியசாலை, சாவகச்சேரி | மாநகர சபை, யாழ்ப்பாணம் |
| 20 | ரவிச்சந்திரன் கண்மணி | III | காணி நிர்வாக திணைக்களம், பிரதேச செயலகம், கோப்பாய் | சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, ஊர்காவற்றுறை | பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழப்பாணம் |
| 21 | சோபனா பிரதீபன் | III | காணி நிர்வாக திணைக்களம், பிரதேச செயலகம், உடுவில் | தொழிற்றுறை திணைக்களம், வடமாகாணம் | கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் |
| 22 | பார்த்திபன் பேமானந்தி | III | காணி நிர்வாக திணைக்களம், பிரதேச செயலகம், தெல்லிப்பளை | தொழிற்றுறை திணைக்களம், வடமாகாணம் | கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், வடமாகாணம் |
| 23 | நவரத்தினம் சுமதி | III | காணி நிர்வாக திணைக்களம், பிரதேச செயலகம், கரவெட்டி | தொழிற்றுறை திணைக்களம் .மாவட்ட அலுவலகம், யாழ்ப்பாணம் | சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பருத்தித்துறை. |
| 24 | நமேசன் தர்சினி | III | காணி நிர்வாக திணைக்களம், பிரதேச செயலகம், கரவெட்டி | தொழிற்றுறை திணைக்களம் , மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் | பிரதேச சபை, கரவெட்டி |
| 25 | சர்வேஸ்வரன் சுகந்தினி | III | காணி நிர்வாக திணைக்களம், பிரதேச செயலகம், தெல்லிப்பளை | தொழிற்றுறை திணைக்களம், வடமாகாணம் | பிரதேச சபை, வலிகாமம் வடக்கு |
| 26 | விக்ரர் ஜெயந்தன் கலாஜினி | III | காணி நிர்வாக திணைக்களம், வடமாகாணம் | கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அலுவலகம், வடமாகாணம் | நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் கீழ் மல்லாகம் நீதவான் நீதிமன்றிற்கு |
| 27 | சுபேந்திரன் அனுலா | III | காணி நிர்வாக திணைக்களம், பிரதேச செயலகம், தெல்லிப்பளை | கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம், வ.மா | தொழிற்றுறை திணைக்களத்தின் கீழ் மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம். |
| 28 | அன்பரசி பூராசா | III | காணி நிர்வாக திணைக்களம், பிரதேச செயலகம், வேலணை | கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அலுவலகம், வடமாகாணம் | இடமாற்றம் இரத்துச்செய்யப்படுகின்றது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 29 | இரகுராம் புஸ்பரூபி | III | காணி நிர்வாக திணைக்களம், பிரதேச செயலகம், வலி - கிழக்கு, கோப்பாய் | கிராம அபிவிருத்தித் திணைக்களம், வடமாகாணம் | வலிகிழக்கு பிரதேச சபை, புத்தூர் |
| 30 | சிறீதரன் தவநிதி | III | காணி நிர்வாக திணைக்களம், பிரதேச செயலகம், வலி கிழக்கு, கோப்பாய் | கோட்டக்கல்வி அலுவலகம், சாவகச்சேரி (தென்மராட்சி வலயம்) | கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் மாவட்ட செயலகம் யாழ்ப்பாணத்திற்கு. |
| 31 | ஜெயதாஸ் கொலஸ்ரீனா | III | காணி நிர்வாக திணைக்களம், பிரதேச செயலகம், வலி - கிழக்கு, கோப்பாய் | வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம் | மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டுள்ளது |
| 32 | ராஜ்குமார் கருணாலட்சுமி | III | மோட்டார் போக்குவரத்து திணைக்களம், பிரதேச செயலகம், தெல்லிப்பளை | நன்னத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், பிரதேச செயலகம், தெல்லிப்பளை | மாகாண திட்டமிடல் செயலகம், பிரதேச செயலகம், தெல்லிப்பளை |
| 33 | கருணாகரன் இந்திராணி | III | மோட்டார் போக்குவரத்து திணைக்களம், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் | மாகாண திட்டமிடல் செயலகம், பிரதேச செயலகம், கோப்பாய் | மாகாண திட்டமிடல் செயலகம், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய் |
| 34 | நிமலன் கவிதா | III | மோட்டார் போக்குவரத்து திணைக்களம், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் | மாகாண திட்டமிடல் செயலகம், பிரதேச செயலகம், தென்மராட்சி | விவசாய அமைச்சு, வடமாகாணம். |
| 35 | பிரியவத்சலன் மொறின் ஷாமினா | III | மோட்டார் போக்குவரத்து திணைக்களம், பிரதேச செயலகம், சங்கானை | மாகாண திட்டமிடல் செயலகம், பிரதேச செயலகம், கோப்பாய் | மாகாண திட்டமிடல் செயலகம், பிரதேச செயலகம், சங்கானை |
| 36 | பாலசிங்கம் பார்த்திபன் | III | மோட்டார் போக்குவரத்து திணைக்களம், பிரதேச செயலகம், தெல்லிப்பளை | மாகாண திட்டமிடல் செயலகம், பிரதேச செயலகம், வேலணை | நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் கீழ் மல்லாகம் நீதவான் நீதிமன்றிற்கு |
| 37 | சுபாஸ்கரன் ரசனி | III | சமூகசேவைகள் திணைக்களம், பிரதேச செயலகம், தென்மராட்சி | நன்னத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம். | மாகாண திட்டமிடல் செயலகம், பிரதேச செயலகம், தென்மராட்சி |
| 38 | முருகேசு கயல்விழி | III | சமூகசேவைகள் திணைக்களம், பிரதேச செயலகம், நல்லூர் | காணி நிர்வாக திணைக்களம், பிரதேச செயலகம், வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி | காணி நிர்வாக திணைக்களம், வடமாகாணம் |
| 39 | திருநாவுக்கரசு ஜெயகாந்தன் | III | சமூகசேவைகள் திணைக்களம், பிரதேச செயலகம், உடுவில் | மாகாண திட்டமிடல் செயலகம், பிரதேச செயலகம், சங்கானை | மாகாண திட்டமிடல் செயலகம், பிரதேச செயலகம், கோப்பாய் |
| 40 | பெரியதம்பி லம்போதரன் | III | சமூகசேவைகள் திணைக்களம், பிரதேச செயலகம், வேலணை | மாகாண திட்டமிடல் செயலகம், பிரதேச செயலகம், நல்லூர் | தொழிற்றுறை திணைக்களத்தின் கீழ் பிரதேச செயலகம், சண்டிலிப்பாய். |
| 41 | அபிராமி தேவி ஜயாத்துரை | III | சமூகசேவைகள் திணைக்களம், மாவட்ட அலுவலகம், யாழ்ப்பாணம் | வலி - கிழக்கு பிரதேச சபை, புத்தூர் | கிராம அபிவிருத்தி திணைக்களம், வடமாகாணம் |
| 42 | சுந்தரம் சுஜித் | III | சமூகசேவைகள் திணைக்களம், வடமாகாணம் | கிராம அபிவிருத்தித் திணைக்களம், பிரதேச செயலகம், வலிவடக்கு | கிராம அபிவிருத்தி திணைக்களம், மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம் |
| 43 | முகுந்தன் கவிதா | III | ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி | காணி நிர்வாக திணைக்களம், வடமாகாணம் | மாகாண திட்டமிடல் செயலகம், பிரதேச செயலகம், தென்மராட்சி |
| 44 | சண்முகலிங்கம் தயாளன் | III | பிராந்திய சுகாதார சேசைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் | நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், மாவட்ட அலுவலகம், மன்னார் | மீன்பிடி, போக்குவரத்து அமைச்சு, வடமாகாணம் |
| 45 | தேவராசா கனேஸ்வரன் | III | பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் | நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், மாவட்ட செயலகம், முல்லைத்தீவு | தொழிற்றுறை திணைக்களம், வடமாகாணம். |
| 46 | குகேந்தரன் மேபரஜனி | III | சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கோப்பாய் | கிராம அபிவிருத்தித் திணைக்களம், பிரதேச செயலகம், தெல்லிப்பளை | கிராம அபிவிருத்தி திணைக்களம், வடமாகாணம். |
| 47 | மகாலிங்கம் ஜெயக்குமார் | III | சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, உடுவில் | காணி நிர்வாக திணைக்களம், பிரதேச செயலகம் மாந்தை கிழக்கு, முல்லைத்தீவு | முதலமைச்சரின் அமைச்சு, வடமாகாணம் |
| 48 | கபிலன் தாரணி | III | சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, நல்லூர் | தொழிற்றுறை திணைக்களம், பிரதேச செயலகம், வலி தென் மேற்கு, சண்டிலிப்பாய் | மாகாண திட்டமிடல் செயலகம், பிரதேச செயலகம், நல்லூர் |
| 49 | பேரின்பநாதன் சசிதரன் | III | பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் | கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம், மன்னார் | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் |
| 50 | இராசையா சுதாகரன் | III | பிராந்திய சுகாதார சேசைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் | வலயக்கல்வி அலுவலகம், துணுக்காய் | ஆதார வைத்திய சாலை, சாவகச்சேரி. |
| 51 | ஜீவகரன் அஜந்தாதேவி | III | தொழிற்றுறை திணைக்களம், வடமாகாணம் | காணி நிர்வாக திணைக்களம், பிரதேச செயலகம், தெல்லிப்பளை | இடமாற்றம் இரத்துச்செய்யப்படுகின்றது |
| 52 | சிவசங்கர் பாமா | III | தொழிற்றுறை திணைக்களம் ,மாவட்ட அலுவலகம், யாழ்ப்பாணம் | காணி நிர்வாக திணைக்களம், பிரதேச செயலகம், கரவெட்டி | பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழப்பாணம் |
| 53 | செந்தூரன் கமலாதேவி | III | தொழிற்றுறை திணைக்களம், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் | காணி நிர்வாக திணைக்களம், பிரதேச செயலகம், கரவெட்டி | சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, உடுவில். |
| 54 | ஜீவகரன் கஜேந்தினி | III | தொழிற்றுறை திணைக்களம், வடமாகாணம் | காணி நிர்வாக திணைக்களம், பிரதேச செயலகம், தெல்லிப்பளை | காணி நிர்வாக திணைக்களம், பிரதேச செயலகம், வலி கிழக்கு, கோப்பாய் |
| 55 | கண்ணன் கவிதா | III | தொழிற்றுறை திணைக்களம், வடமாகாணம் | சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, நல்லூர் | நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம் |
| 56 | விக்னேஸ்வரன் கலைவாணி | III | தொழிற்றுறை திணைக்களம், பிரதேச செயலகம், கரவெட்டி | கிராம அபிவிருத்தித் திணைக்களம், பிரதேச செயலகம், பருத்தித்துறை | கிராம அபிவிருத்தித் திணைக்களம், பிரதேச செயலகம், கரவெட்டி |
| 57 | சிவகுமாரசாமி கல்யாணி | III | தொழிற்றுறை திணைக்களம், பிரதேச செயலகம், பருத்தித்துறை | கிராம அபிவிருத்தித் திணைக்களம், பிரதேச செயலகம், கரவெட்டி | கிராம அபிவிருத்தித் திணைக்களம், பிரதேச செயலகம், பருத்தித்துறை |
| 58 | கனிசோபனா ஜேம்ஸ் | III | தொழிற்றுறை திணைக்களம், பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை | பிரதம எந்திரி அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் யாழ்ப்பாணம் | மோட்டார் போக்குவரத்து திணைக்களம், பிரதேச செயலகம், சங்கானை |
| 59 | கேசகுமாரி சிவகொழுந்து | III | தொழிற்றுறை திணைக்களம், வடமாகாணம் | வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம், பிரதேச செயலகம், கரவெட்டி |
| 60 | சரவணபவ சர்மா நிரஜா | III | தொழிற்றுறை திணைக்களம், வடமாகாணம் | மாநகரசபை, யாழ்ப்பாணம் | மாகாண கல்வித் திணைக்களம், வடமாகாணம் |
| 61 | தர்மராசா சுரேந்திரன் | III | தொழிற்றுறை திணைக்களம், மாவட்ட அலுவலகம், யாழ்ப்பாணம் | மாகாண திட்டமிடல் செயலகம், பிரதேச செயலகம், பூநகரி | மோட்டார் வாகன போக்குவரத்து - திணைக்களம், பிரதேச செயலகம், சங்கானை |
| 62 | கேதீஸ்வரன் யசோதா | III | தொழிற்றுறை திணைக்களம், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் | நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம் | சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, நல்லூர் |
| 63 | தீபன் லோகேஸ்வரி | III | தொழிற்றுறை திணைக்களம், பிரதேச செயலகம், தெல்லிப்பளை | நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், ஊர்காவற்றுறை நீதவான் நீதி மன்றம் | கிராம அபிவிருத்தி திணைக்களம், வடமாகாணம். |
| 64 | ஜெயநீதன் மதுரா | III | தொழிற்றுறை திணைக்களம், பிரதேச செயலகம், வலிமேற்கு, சங்கானை | கிராம அபிவிருத்தித் திணைக்களம், பிரதேச செயலகம், காரைநகர் | கிராம அபிவிருத்தி திணைக்களம், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய். |
| 65 | நாகதீபன் பாரதி | III | தொழிற்றுறை திணைக்களம், பிரதேச செயலகம், தெல்லிப்பளை | கிராம அபிவிருத்தித் திணைக்களம், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் | கிராம அபிவிருத்தித் திணைக்களம், பிரதேச செயலகம், உடுவில் |
| 66 | அன்ரோனியஸ் டெஸ்மன் அன்ரனற் பபிதா | III | தொழிற்றுறை திணைக்களம், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் | பிரதேச சபை, வேலணை | மாநகர சபை, யாழ்ப்பாணம் |
| 67 | மதனமோகன ராஜ் ஜெயந்தி | III | தொழிற்றுறை திணைக்களம், வடமாகாணம் | மாநகரசபை, யாழ்ப்பாணம் | சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, தெல்லிப்பளை |
| 68 | உதயதீபன் நாகுலவாணி | III | தொழிற்றுறை திணைக்களம், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் | மாகாண திட்டமிடல் செயலகம், பிரதேச செயலகம், வேலணை | கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு, வடமாகாணம் |
| 69 | உதயகுமார் [illegible] நளாயினி | III | தொழிற்றுறை திணைக்களம், பிரதேச செயலகம், நல்லூர் | மாகாண கல்வித் திணைக்களம், வ.மா | மாநகரசபை, யாழ்ப்பாணம் |
| 70 | திவாகர் கார்த்திகா | III | கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம், வ.மா | காணி நிர்வாக திணைக்களம், வ.மா | காணி நிர்வாக திணைக்களத்தின் கீழ் பிரதேச செயலகம், தெல்லிப்பளை |
| 71 | வசந்தகுமார் பிரேமளா | III | கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம், வட மாகாணம் | காணி நிர்வாக திணைக்களம், பிரதேச செயலகம், தெல்லிப்பளை | மாகாண திட்டமிடல் செயலகம், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் |

(தொடரும்....)

# ஐ.நா.வுடன் ஒத்துழைக்க இலங்கை தவறக்கூடாது

## கமரூன் சொல்கிறார்




போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்றன என்று கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் குறித்த ஐ.நா விசாரணைகளுக்கு இலங்கை அரசாங்கம் முழுமையான ஆதரவை வழங்க வேண்டும் என்று பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார். தமிழ்-சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டனிலும், இலங்கையிலும் உலகின் ஏனைய நாடுகளிலும் புத்தாண்டைக் கொண்டாடும் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். மில்லியன் கணக்கான மக்கள் தமது குடும்பத்தினர், நண்பர்கள், அயலவர்களுடன் இணைந்து புத்தாண்டைக் கொண்டாடுகின்றனர்.

பிரித்தானியாவில் தமிழ், சிங்கள சமூகங்களின் அற்புதமான பங்களிப்புகளையும் இந்தத் தருணத்தில் நினைவு கூர வேண்டும். இன்று பலர், வெளிநாடுகளில் உள்ள தமது அன்புக்குரியவர்களை நினைத்து, குறிப்பாக இலங்கையில் உள்ளவர்களை நினைத்து புத்தாண்டைக் கொண்டாடுகின்றனர். கடந்த மாதம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை டவுணிங் வீதி இல்லத்தில் சந்தித்த போது, கடந்த கால விவகாரங்களுக்குத் தீர்வு காண அவரது அரசாங்கம் எடுக்கின்ற முயற்சிகளுக்கு எனது ஆதரவை வழங்குவதாக உறுதியளித்துள்ளேன்.

ஆனால், இலங்கை அரசாங்கம் ஐ.நா விசாரணைகளுக்கு முழு ஆதரவையும் வழங்க வேண்டும் என்றும், இன்னும் மேலே செல்ல வேண்டும் என்றும் தெளிவாக எடுத்துக் கூறியிருந்தேன். இந்த புத்தாண்டு கடந்தகால காயங்களை குணப்படுத்துவதற்கு உதவுவதுடன், சமூகங்களுக்கு இடையில் நெருக்கத்தையும் கொண்டு வரும் என்று நம்புகிறேன். புத்தாண்டைக் கொண்டாடும் அனைவருக்கும், மிகவும் மகிழ்ச்சியான, வளம்மிக்க ஆண்டாக அமைய வாழ்த்துகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.


# சாதகமான மாற்றங்கள் வாழ்வில் நிகழட்டும்



தமிழ் - சிங்களப் புத்தாண்டு சாதகமான மாற்றங்கள் நிறைந்த ஆண்டாக அமையட்டும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரி இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வாழும் மக்கள், பிறநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கும் ஜனாதிபதி ஒபாமா மற்றும் அமெரிக்க அரசு வாழ்த்துக்களை தெரிவிப்பதாகவும் ஜோன் கெரி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## நல்லூர்கந்தன் வீதியுலா..



மன்மத புத்தாண்டு தினமான நேற்று செவ்வாய்க்கிழமை நல்லூர் கந்தன் வள்ளி, தெய்வானை சமேதராக, வீதி வலம் வந்து அருள் பாலித்தார். ஏராளமான பக்த அடியார்கள் விசேட பூஜை நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

## வடக்கில் சூரியன் உச்சம்

நேற்று வெள்ளைமுள்ளிவாய்க்கால், கொக்காவில் மற்றும் குமுழமுனை ஆகிய பிரதேசங்களில் நண்பகல் 12.11 மணியளவில் சூரியன் உச்சம் கொடுத்தது என வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

# ஜனநாயகத்தை வலுப்படுத்த புதிய பொறிமுறை

## அமெரிக்காவுடன் பேச்சு

(வொஷிங்டன்)

யுத்தத்துக்குப்பிந்திய இலங்கையில் ஜனநாயகத்தை வலுப்படுத்த புதிய பொறிமுறை ஒன்றை உருவாக்குவதற்கு அமெரிக்காவின் தொழில்நுட்ப உதவி பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

இதற்கான முதற்கட்ட பேச்சுவார்த்தை ஏற்கனவே நிறைவடைந்து விட்டதாக அமெரிக்கத் தரப்பில் இருந்து செய்திகள் கசிந்துள்ளன.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்கத் துணை இராஜாங்கச் செயலாளர் டொம் மாலினோவ்ஸ்கீ இந்தப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தார். அரசாங்க அதிகாரிகள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

ஜனநாயகத்தை வலுப்படுத்தல், வெளிப்படைத்தன்மை மற்றும் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் ஆகியன தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. பல்வேறு முக்கியமான விடயங்கள் குறித்து இந்த விஜயத்தின் போது பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குப்பைகள் தேக்கம்

(வவுனியா)

வவுனியா பேருந்து நிலையத்தில் குப்பைத்தொட்டிகள் இல்லாததால் குப்பைகள் தேங்கிக்கிடக்கின்றன. இதனால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

### டெங்கு...

அவற்றை இல்லாமல் செய்வதற்கான கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டியுள்ளது என்றும், காய்ச்சல் ஏற்பட்டு மூன்று நாட்களின் பின்னரும் காய்ச்சல் இருக்குமாயின் வைத்திய உதவியை நாடுமாறும் தொற்று நோய் தடுப்புப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

### இலங்கை..

சந்தர்ப்பத்தை இலங்கையர்களுக்கு வழங்குவதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நாட்டிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது உறுதி வழங்கியிருந்தார்.

இந்திய அரசியலமைப்பை நிர்மாணித்த அம்பேத்காரின் ஜனன தினத்தை முன்னிட்டு இந்த சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

### மீள்குடியேற்றம்..

விடுவிக்கப்பட்டிருக்கின்றது என வலி.வடக்கு மீள்குடியேற்றக் குழு சுட்டிக்காட்டி கவலை வெளியிட்டுள்ளது.

விடுவிக்கப்பட்ட பகுதிகளில் எஞ்சியிருந்த ஒரு சில வீடுகளைக் கூட இராணுவத்தினர் அவசர அவசரமாக இடித்தழித்துள்ளனர் என வலி.வடக்கு மீள்குடியேற்றக் குழுத் தலைவர் ச.சஜீவன் சுட்டிக்காட்டுகிறார். நீண்ட காலத்தின் பின்னர் தமது சொந்த இடங்களையும், வீடுகளையும் பார்த்து கவலையடைந்து கண்ணீர் வடிக்கின்றனர். எஞ்சியுள்ள படையினர் பயன்படுத்தும் வீடுகளையாவது இடித்தழிக்காமல் மக்களிடம் கையளிக்க வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

மேலும் வலி.வடக்கின் மயிலிட்டி, தையிட்டி, காங்கேசன்துறைப் பகுதிகளைச் சேர்ந்த மக்களையும் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்ற இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### சீனப்...

தமது ஆற்றலை அதிகரித்துக் கொள்வதற்கும் இந்தப் போர்ப் பயிற்சி மேற்கொள்ளப்படுவதாக, சீனாவின் பாதுகாப்பு இணையத்தளமாக சைனா மிலிட்டரி ஒன்லைன் தெரிவித்துள்ளது.

கடந்த மார்ச் 29ஆம். திகதி ஆரம்பிக்கப்பட்ட முதற்கட்டப் பயிற்சியில், அபிவிருத்தி அடைந்துள்ள தீவிரவாத எதிர்ப்புச் செயற்பாடுகள் மற்றும் தந்திரோபாய பயிற்சிகள் குறித்துக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.தீவிரவாத எதிர்ப்பு ஒத்திகையின் போது, சுடுதல், கைப்பற்றுதல், ஏறுதல் ஆகிய விடயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டன.

தந்திரோபாயப் பயிற்சிகளில், பிரதானமாக, கட்டடங்களில் தேடுதல் நடத்துதல், பணயக் கைதிகள் மீட்பு, விமான, பேருந்து கடத்தல்காரர்களுக்கு எதிரான நடவடிக்கை, ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளதாக, சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் பயிற்சித் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் சூ ஹய்ஹுய் தெரிவித்துள்ளார்.

சீன - இலங்கைப் படைகளுக்கு இடையிலான இந்தப் போர்ப்பயிற்சியின் இரண்டாவது கட்டம், வரும் ஜுன் மாதம் இலங்கையில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் பங்கேற்பதற்காக, சீனா பல விசேட நடவடிக்கைக் குழுக்களை இலங்கைக்கு அனுப்பவுள்ளது. இந்த இரண்டாவது கட்ட பட்டுப் பாதை ஒத்துழைப்பு 2015 போர்ப்பயிற்சியில் இலங்கை இராணுவத்தின் தாக்குதல் பிரிகேட் மற்றும், சிறப்பு நடவடிக்கை பிரிகேட் என்பன ஈடுபடவுள்ளன.

### கழிவு...

தன்மையானதும் 'சட்டரீதியான அங்கீகாரம் உள்ளதுமான அரசாங்க பகுப்பாய்வு நிறுவனத்தில் நடாத்தப்பட்டுள்ளது.

அது தொடர்பான அறிக்கை சுகாதார அமைச்சின் உயர் அதிகாரியினால் சிபாரிசு செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் பரிசோதிக்கப்பட்ட 30 கிணறுகளிலுமே எண்ணெய் கலந்துள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளதுடன் 3 கிணறுகளில் அதிக செறிவில் காணப்படுகின்றது. மேலும் அப்பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு இக் கிணறுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாகவே உள்ளூர் அதிகாரிகளால் நடாத்தப்பட்ட சில ஆய்வுகளில் எண்ணெய் தொடர்பான நச்சுப் பதார்த்தங்கள் இல்லை என அறிவிக்கப்பட்டதும் இதனை அடுத்து மக்கள் தங்கள் கிணற்று நீரினைப் பாவிக்கலாம் என அறிவிக்கப்பட்டதும் அறிந்ததே. இதனை விடவும் 2014 ஆம் ஆண்டு நீர்வழங்கல் அதிகார சபையினரால் பாரிய அளவில் முறையாகச் செய்யப்பட்ட ஆய்வில் 75 வீதமான கிணறுகளில் அதிகளவில் எண்ணெய் இருப்பது உறுதிசெய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# மன்மத வருடம் சிறக்க வாயார வாழ்த்துவோம்...

## இனவேறுபாடுகளை களைந்து எறிவோம்



இன வேறுபாடுகளின்றி இலங்கையர்களாக ஒன்றிணைந்து புத்தாண்டைக் கொண்டாடுவதும் உறவினர்களை சந்திக்கச்செல்லுதல் போன்ற புத்தாண்டுப் பாரம்பரியங்களில் பங்குபற்றுவதும் எல்லோர் மத்தியிலும் ஐக்கியத்தையும் சமாதானத்தையும் பலப்படுத்த உதவும். எல்லா இலங்கையர்களும் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் சிங்கள, தமிழ் புத்தாண்டை முன்னிட்டு இந்த வாழ்த்துச் செய்தியை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

சூரியன் மீன இராசியிலிருந்து மேட இராசிக்கு மாறும் சுபவேளையில் இயற்கையின் புதிய வசந்தகால புத்தெழுச்சியுடன் உதயமாகும் சிங்கள, தமிழ் புத்தாண்டு வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் புதிய நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் கொண்டுவருகிறது. எமது மக்கள் புத்தாண்டு கொண்டாட்டங்களில் சமய, கலாசார பாரம் பரியங்களுக்கும் சிறந்த சமூகப் பெறுமானங்களுக்கும் முக்கியத்துவமளித்து, எமது வாழ்வை வளப்படுத்திய தொன்மைமிக்க மானிடப்பெறுமானங்களுக்கு மதிப்பளிக்கின்றனர்.

இப்பெறுமானங்களில் மக்கள் மத்தியில் ஐக்கியம், சமாதானம், பகிர்தல் உணர்வு மற்றும் அனைவர் மீதும் நல்லெண்ணம் கொள்ளுதல்என்பன சிறப்புவாய்ந்தவையாகும். இன, மத, சாதி வேறுபாடுகளின்றி நல்லாட்சிக்கான அர்ப்பணத்துடன் எமது நாட்டில் வாழும் எல்லா இனங்களுக்கு மத்தியிலும் ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுவரும் முக்கிய முன்னேற்றப்படிகளுக்கு மத்தியில் இவ்வருட புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் நடைபெறுவது விசேடமானதாகும்.

பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் நல்லிணக்கத்தின் அடிப்படையில், எமது தாய்நாட்டைப் பாதுகாப்பதற்காக ஒரு தேசமாக நாம் எழுந்திருந்தமை வரலாறு நெடுகிலும் எம்மிடமிருந்த மிகப்பெரும் பலம் என்பதை புரிந்துகொள்வதற்கான தருணம் இதுவாகும். அதேபோன்று இன்றும் நாம் இன வேறுபாடுகளின்றி இலங்கையர்களாக ஒன்றிணைந்து புத்தாண்டைக் கொண்டாடுவதும் உறவினர்களை சந்திக்கச்செல்லுதல் போன்ற புத்தாண்டுப் பாரம்பரியங்களில் பங்குபற்றுவதும் எல்லோர் மத்தியிலும் ஐக்கியத்தையும் சமாதானத்தையும் பலப்படுத்த உதவும் என்றும் தெரிவித்தார்.

## சொந்த நிலத்தில் சுதந்திரமாக வாழ..



கடந்த காலங்களில் கொடிய ஆட்சியால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள், தமது சொந்த நிலத்தில் போதிய சுயாட்சி அதிகாரங்களைப் பெற்று சுதந்திரமாக - கௌரவமாக - நிரந்தரமாக வாழும் நிலை வரவேண்டும் என்று சித்திரைப் புத்தாண்டில் நாம் பிரார்த்திக்கின்றோம்.

அதுவரை நாம் ஓயாது போராடுவோம் என்று சபதம் எடுத்துக் கொள்கின்றோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 2015 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நாம் ஆட்சி மாற்றத்தையும் அரசியல் தீர்வையும் எதிர்பார்த்தோம். நாம் எதிர்பார்த்த மாதிரி நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது.

அனைவரையும் ஒன்றிணைத்து சமத்துவத்துடனும் சமாதானத்துடனும் நீதியைக் கட்டியெழுப்பக்கூடிய நல்ல சூழல் ஓரளவுக்கு வந்துள்ளது.

இதனை நாட்டில் உள்ள அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். இந்த நல்லாட்சி முழுமை பெறவேண்டும் என்றால வாக்குறுதிகள் அனைத்தையும் அரசு நிறைவேற்றியே ஆகவேண்டும். சில வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றபோதிலும் அரசியல் தீர்வு சம்பந்தமான வாக்குறுதிகளுக்கு கால அவகாசம் வேண்டும் என்பது உண்மைதான். அதற்காக தீர்வு சம்பந்தமான விடயத்தை கிடப்பில் போடுவதை நாம் அனுமதிக்கமாட்டோம்.

இந்த நாட்டில் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் அவர்களின் அபிலாஷைகள் நிறைவேறவில்லை. அவர்கள் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகளினால் ஏமாற்றப்பட்டு வந்தார்கள்.

இந்நிலைமை இந்த ஆட்சியில் மாறவேண்டும். எதிர்வரும் வருடத்திற்குள் இந்நிலைமை மாறவேண்டும். மாறக்கூடிய சூழலும் இல்லாமல் இல்லை. இதனை அரசு புரிந்துகொண்டு செயற்படவேண்டும் என்றார்.

## நட்புறவு வளரட்டும்



சகல மக்களுடனும் நட்புறவு பாராட்டி புதுவருடத்தின் அர்த்தத்தை சமூகத்திற்கு வழங்குவது பொறுப்புள்ள அனைவரதும் கடமையாகும் என எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா குறிப்பிடுகின்றார்.

புதுவருடத்தை முன்னிட்டு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் எதிர்க்கட்சித் தலைவர் இந்தத் தகவலை தெரிவித்துள்ளார்.

குழந்தைகளை நேரான பாதையில் செல்வதற்கு வழிகாட்டுவதன் ஊடாக புதுவருடத்தை அர்த்தமுள்ளதாக மாற்றுவதுடன், பிள்ளைகளின் எதிர்பார்ப்புகள் குறித்து வயதுவந்தவர்கள் உன்னிப்பாக கவனம் செலுத்த வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் கூறியுள்ளார்.

சுதந்திர, சமாதான சமூகத்தில் சகலருக்கும் நியாயம் கிடைக்க வேண்டியது அவசியமாகும் என சுட்டிக்காட்டியுள்ள எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா. புராதன காலந்தொட்டு பாதுகாத்த சகவாழ்வை அரசியல் மற்றும் ஒருசில எதிர்பார்ப்புகளுக்காக சீர்குலைய இடமளிக்கக் கூடாது என்றும் தமது புதுவருட செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## இனங்களுக்கிடையில் சமாதானம் பொங்கட்டும்



சிங்கள, தமிழ்புத்தாண்டு இன, மதங்களுக்கிடையே ஒற்றுமையை உறுதிசெய்யும். சமாதானம் மற்றும் மகிழ்ச்சி நிறைந்த சௌபாக்கியம் மிக்க புத்தாண்டாகஅமையப் பிரார்த்திக்கின்றேன் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

சமாதானம் மற்றும் மகிழ்ச்சி நிறைந்த சௌபாக்கியம் மிக்க புத்தாண்டாக அமையப் பிரார்த்திக்கின்றேன். இது வசந்த காலம். இன,மத பேதமின்றி நாம் அனைவரும் இலங்கையர் என்ற மனோநிலையில சூரிய திருநாளைக் கொண்டாடும் எழில்மிகு சந்தர்ப்பம் இதுவேயாகும். சிங்கள, தமிழ்ப் புத்தாண்டு இலங்கை மக்களின் மிக முக்கியமான கலை, கலாசாரப் பண்டிகையாகும்.

தொன்றுதொட்டு இயற்கையுடன் ஆன்மிக ரீதியாகப் பின்னிப்பிணைந்து உழவுத் தொழிலையே வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்வதற்குப் பழக்கப்பட்டுள்ள இலங்கையர்களுக்கு புத்தாண்டு என்பது தேசிய ஒற்றுமை,சகோதரத்துவம், சமத்துவம், மகிழ்ச்சி, சௌபாக்கியம் என்பவற்றை விருத்தி செய்யும் தேசியத் திருநாள.

புதியதொரு கலாசாரத்திற்குள் காலடி எடுத்துவைத்து புத்தாண்டு பிறந்துள்ளது. இன, மத, கட்சி பேதங்களைப் புறந்தள்ளிவிட்டு இலங்கை சமூகம் என்ற உணர்வுடன் வருங்காலத்தை எதிர்பார்த்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில் அழுத்தங்கள் மற்றும் கட்டுப்பாட்டு உணர்வுகளில் இருந்து மீண்டு புத்தாண்டைக் கொண்டாடுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தமையானது மிக முக்கியமான விடயமாகும். சிங்கள, தமிழ் புத்தாண்டு இன, மதங்களுக்கிடையே ஒற்றுமையை உறுதி செய்யும் சமாதானம் மற்றும் மகிழ்ச்சி நிறைந்த சௌபாக்கியம் மிக்க புத்தாண்டாக அமையப் பிரார்த்திக்கின்றேன் என்றுள்ளது.

## தங்கம் கடத்தியவர் கட்டுநாயக்காவில் கைது

இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு கடத்திச் செல்ல முயன்ற ஒருதொகை தங்கப் பாளங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவற்றை எடுத்துச் செல்ல முயற்சித்த நபரையும் கட்டுநாயக்க விமான நிலைய சுங்கப் பிரிவினர் நேற்று அதிகாலை கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட தங்கப் பாளங்களின் பெறுமதி 17 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

25 வயதுடைய இந்தியப் பிரஜை ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக சுங்கப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.







மும்முரமான அரசியல் சதுரங்க காய்நகர்த்தல்களுக்கு மத்தியில் நேற்றைய புத்தாண்டு தினத்தில் உள்ளக விளையாட்டுக்களில் ஈடுபடும் முன்னாள் ஜனாதிபதியின் குடும்பத்தினரும் அவரது குடும்ப நண்பர்களும் நேற்றைய புத்தாண்டுக் கொண்டாட்டங்களும் மகிந்தவின் இல்லத்தில் களைகட்டியது.

இப்பத்திரிகை .இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஏப்ரல் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.